உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார்,
ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௨.] குரோதி ஹு ஆடிமீ. [பகுதி-௯.

உள்ளுறை.

பூதப்பாண்டியன் தேவியார்.—பத்திராசிரியர்.	௨௯௭
சந்தானக்குரவர் I.—திருமயிலை. சண்முகம் பிள்ளை.	௩0௫
நட்பு.— திருமணம். செல்வக்கேசவராய முதலியார் M. A.	௩0௮
கந்தபுராணம்.— அ. குமாரசுவாமிப்பிள்ளை.	௩௧௧
பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்காலஆசாரங்களும்.—	௩௧௯
நன்னூற்குறிப்பு.—திரு. நாராயணையங்கார்.	௩௨௪
புத்தகக்குறிப்பு.—பத்திராசிரியர்.	௩௨௮
நான்மணிக்கடிகை (பழைய உரையுடன்)—விளம்பிநாகனார்	௧
தொல்காப்பியம் செய்யுளியல்.—நச்சினார்க்கினியருரை.	௯
விவசாயநூல்.—சே. ப. நரசிம்மலு நாயடு.	௯
சுகசந்தர்சனதீபிகை.—பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியார்.	௯
மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் மூன்றாம்வருஷோற்சவக் கூட்டம்.	

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ-4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

உ

திருச்சிற்றம்பலம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை"க்கு அடியிற்குறித்த அபிமானசீலர்கள் அச்சுப்பிரதிகள் அனுப்பியுதவினார்கள்.

1. ஸ்ரீமத். கதிரைவேற்பிள்ளையவர்களது தமிழகராதி அகரவர்க்கமளவும்—ஸ்ரீமத். பாலசிங்கமவர்கள் அட்வகேட், கொழும்பு.

2. சித்தாந்ததீபிகை (இங்கிலீஷ்) ஆறுதொகுதிகள்—ஸ்ரீமத்.-ஜெ. எம். நல்லசாமிப்பிள்ளையவர்கள், பீ. எ. பீ. எல்., டிஸ்டிரிக்ட் முன்சீப், சேலம்.

3. பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்—ஸ்ரீமத். உ. வே. சாமிநாதையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், பிரஸிடன்சி காலேஜ் சென்னை.

4. விவேகரசவீரன்—ஸ்ரீமத். பாலசுப்பிரமணியபிள்ளையவர்கள், திருவனந்தபுரம்.

இவ்வாறு சங்காபிமானத்தோடுந் தாமேமுன்வந்து பிரதிகள் அனுப்பியுதவிய இக்கனவான்களுக்கு அநேகவந்தனங்கூறுகின்றேன்.

இங்ஙனம்,

பொ. பாண்டித்துரை,

அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௨.] குரோதி௵ ஆடி௴. [பகுதி-௯.

பூதப்பாண்டியன் தேவியார்.

இருவேறு நல்வினைகளின் பயன்களாயுள்ள அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கெய்தி, அங்ஙனம் எய்தியமைக்கேற்ற பேரறிவும் பெருங்கொடையும் உடையராய், இவ்வுலகில் என்றைக்கும் நீங்காத நல்லிசையினை நிறுத்தின முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும், பாண்டியரே, கல்விபற்றி மற்றை யிருவரினும் சிறப்பித்துப் போற்றப்படுவோராவர். இவரே செந்தமிழ்நாடாளும் உரிமை யுடையர். இவரே முக்காலும் செந்தமிழ்ச்சங்கம் சிறப்புற இரீஇயினோர். இவரே கவியரங்கேறினோர். இவரே அரும்பெறற் புலவர்க்குப் பெரும்பொற் கிழியளித்தோர். இவரது அவைக்களமே தொல்காப்பியம், திருவள்ளுவர் முதலிய பெருநூல்கள் அரங்கேறப்பெற்றது. இவர் நாடுதான் நல்ல தமிழுடையது. இவர் பதிதான் தமிழ் நிலைபெற்றதெனப்படுவது. இவர் பதியைக்கூறு மிடமெல்லாம் கல்விபற்றியே சிறப்பித்துரைப்பர். இவர்பதிகளில் வாழ்வார்தாம் வாழ்வார் எனப்படுவாரென்ப. பலசொல்லி யென்? மூவேந்தருள்ளும் பாண்டியர்தாம் தமிழுடையார் என்று சிறப்பிக்கப் படுவாரென்க. இவற்றையெல்லாம்,

‘வில்லுடையான் வானவன் வீயாத் தமிழுடையான்
பல்வேற் கடற்றானைப் பாண்டியன்—சொல்லிகவா
வில்லுடையான் பாலை யிளஞ்சாத்தன் வேட்டனே
நெல்லுடையா னீர்நாடர் கோ.’ (யாப்பருங்கலவிருத்திமேற்கோள்)

“நல்லம்பர் நல்ல குடியுடைத்துச் சித்தன்வாழ்
வில்லந்தொறுமூன் றெரியுடைத்து—நல்லரவப்

பாட்டுடைத்துச் சோமன் வழிவந்த பாண்டியநின்
னாட்டுடைத்து நல்ல தமிழ்.'' (ஔவையார்)

'தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்
மகிழ்நனை மறுகின் மதுரையும்' (சிறுபாணாற்றுப்படை)

"உயர்மதிற் கூடலினாய்ந்த வொண்டீந் தமிழின் றுறை''
(திருச்சிற்றம்பலக்கோவை)

"மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையுஞ் சீரூர் பூவி
னிதழகத் தனைய தெருவ மிதழகத்
தரும்பொகுட் டனைத்தே யண்ணல் கோயி
லுதி னனையர் தண்டமிழ்க் குடிக
டாதுண், பறவை யனையர் பரிசில் வாழ்நர்
பூவினுட் பிறந்தோ னாவினுட் பிறந்த
நான்மறைக் கேள்வி நவில்குர லெடுப்ப
வேம வின்றுயி லெழுத லல்லதை
வாழிய *வஞ்சியுங் †கோழியும் போலக்
கோழியி னெழாதெம் பேரூர் துயிலே'' (பரிபாடலுறுப்பு)

"ஈவாரைக் கொண்டாடி யேற்பாரைப் பார்த்துவக்குஞ்
சேய்மாடக் கூடலுஞ் செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வா ரெனப்படுவார் மற்றையார்
போவாரார் புத்தே ளுலகு'' (ஷை)

"உலக மொருநிறையாத் தானோர் நிறையாப்
புலவர் புலக்கோலாற் றூக்க—வுலகனைத்துந்
தான்வாட வாடாத தன்மைத்தே தென்னவ
னுன்மாடக் கூடனகர்.'' (ஷை)

என இவ்வாறு பாண்டியனையும் அவரது நாடுநகர்களையுஞ் சிறப்பித்துவரும் அரிய பழைய பாடல்களானும் பிறவற்றானு முணர்க. இன்னுந் தொகைநூல்களுட் கோக்கப்பட்டுள்ள இப்பாண்டியர் பாடல் சிலவற்றான் இவ்வேந்தரது நல்லிசைப் புலமை மேம்பாடு உய்த்தறியத்தக்கது.

முடத்திருமாறன்	நற்றிணை-கoடு, உ௨அ
மாறன் வழுதி	,, கூஎ

*வஞ்சி-கருவூர்: சேரர் தலைநகர். †கோழி-உறையூர்; சோழர் தலைநகர்.

பெருவழுதி ,, ருரு
கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி புறம்-க௮உ
குறுவழுதி அகம்-கருo
அண்டர்முன்குறுவழுதி குறுந்தொகை - ஙசரு, அகம்-உஉஎ
பாண்டியன்ஆரியப்படைதந்தநெடுஞ்செழியன் புறம்-க௮ங
பாண்டியன்தலையாலங்கானத்துச்செருவென்றநெடுஞ்செழியன் [புறம்-௮உ
பாண்டியன் அறிவுடைநம்பி - குறுந்தொகை-உஙo, நற்றிணை [கரு, அகம்-உ௮,புறம்-க௮௮.
ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன்-அகம்-உரு, புறம்-எக.
பாண்டியன் பன்னாடுதந்தான்-குறுந்தொகை-உஎo.
பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப்பெருவழுதி—அகப்-உசு [நற்றிணை-கூ௮.

என்னும் இப்பாண்டியர் நல்லிசைப்புலமைச் செல்வராய் விளங்கினோரென்பது தெற்றெனத்தெரிவது. இவருள் முடத்திருமாறன் கடைச்சங்கம் நிலைபெறுவித்தோன்: பாண்டியன்தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், மாங்குடி மருதனார் பாடியருளிய மதுரைக்காஞ்சிகொண்டோன்: பாண்டியன் பன்னாடுதந்தான் நற்றிணை தொகுப்பித்துதவினோன்: பாண்டியன் கானப்பேர்தந்தஉக்கிரப்பெருவழுதி அகநானூறு தொகுப்பித்துதவினோன்: எனவும் அறிந்து கொள்க. இத்தகைக் கல்விச் சிறப்புடைச் செல்வப்பாண்டியருள் ஒல்லையூர்தந்த பூதப்பாண்டியன் என்னும் அரசர்பெருந்தகைக்கு ஆருயிர்த்துணைவியராய்ச்சிறந்தார்தாம் யாம் ஈண்டெடுத்தோதப் புக்க நல்லிசைப்புலமை மெல்லியற் றேவியார் என அறிக. இத்தேவியாரது இன்னுயிர்க் கொழுநனாகிய பூதப்பாண்டியன் புலவனும் வீரனுமாய்ச்சிறந்து விளங்கினோன். அகநானூற்றினும் புறநானூற்றினுங் காணப்படும் அவனது பாடல்களானும் ஒல்லையூர்தந்த என்னும் அடைச்சிறப்பானும் அவனது புலமையும் வீரமும் உணரத்தக்கன. புறத்திற் காணப்பட்ட,

“மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங்கியைந்

தென்னெடு பொருது மென்ப வவனை
யாரம ரலறத் தாக்கித் தேரோ
டவர்ப்புறங் காணே னுயிற் சிறந்த
பேரம நண்க ணிவளினும் பிரிக
வறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனி லொருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னுகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
வின்களி மகிழ்நகை யிழுக்கியா னென்றூ
மன்பதை காக்கு நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப்பிறர்
வன்புலங் காவன் மாறியான் பிறக்கே''

என்னும் பாட்டு இவர்காதலனது வீரம்பற்றிய வஞ்சின வார்த்தையாதலுங் காண்க. இப்பாட்டால் இவர் கொழுநன் பெரியபோர் வீரன் என்பதும், தனக்கொத்த கல்வியறிவு வாய்ந்த தேவியாராகிய இவரைச் சிறிதும் பிரிதலாற்றாப் பேரன்புடையா னென்பதும், அறநிலை திரியா முறையுடைச் செங்கோலன் என்பதும், வையையால்வளமிக்க மையல் என்னும் ஊரிலிருந்த மாவன் என்பானையும், எயில் என்னும் ஊரிலிருந்த ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் என்பாரையும் தன்கண்போல் நண்பினராகக் கொண்டவன் என்பதும், பிறநாட் டரசுரிமையினும் பாண்டிநாடாள் அரசுரிமையையே மேலாக மதித்திருந்தன னென்பதும், பிறவும் அறியலாகும். இத்தகை அறிவுடை வீரனன முடியுடை வேந்தனை 'அவர்ப்புறங் காணே னுயிற் சிறந்த,பேரம ருண்கணி வளினும் பிரிக' என்று சொல்வித்தது, இப்பெருங்கோப்பெண்டினது * அறிவுநுவொடு கூடிய அருந்திறற்கற்பே யென்பதுந் தெள்

* பெருங் கோப்பெண்டு என்பது முடியுடையரசர் பெருந்தேவியார்க்கொருபெயர். (சேரமான் கோட்டம்பலத்துத் துஞ்சியமாக்கோதை தன் பெருங்கோப் பெண்டு துஞ்சியகாலைச் சொல்லியபாட்டு-புறம் உசரு.) என வருதலான் அறிக.

ளிது. நல்லிசைப் புலமையினும் தன்னேடொத்த இம்மெல்லியற் றேவியாரைத் தனது உயிர்க்காதலியாகப் பெற்ற பாண்டியன்ருன் இவரைப் பிரிதலாற்றுவனே:ஒருசிறிதும்ஆற்ருன்! ஈண்டு இத்தேவியார் தம்மோடொத்த நல்லிசைப்புலமைச் செல்வப்பாண்டியன்பால் வைத்த அன்பின்பெருக்கை இனைத்தென்றுணர்த்தலாவதோ அன்று. மேல் இப்பெருந்தேவியார் நிகழ்த்தும் அரும்பெருஞ்செயலானும், அவ்வமையம் ஆண்டுடனிருந்த மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர், இவரது அன்புடைமையை வியந்து 'சிறுநனி தமியளாயினு, மின்னுயிர் நடுங்குந் தனிளமைபுறங் கொடுத்தே' எனப் பாடியதனுலும் அதனை ஒருவாறுணர்க. குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற கல்வியுமுடைய இருபெருமக்கள் காதலுங் காதலியுமாக அன்புபட்டியைந்த இவ்வரியபெரிய இல்வாழ்க்கை யாண்டுங்காண்டற்கரிய தொன்றே. இதற்கு மிகவும் பிற்காலத்தே இப்பாண்டியர் குடிக்கண்ணேதான் வரதுங்கபாண்டியனும் அவனுடைய பெருந்தேவியுங் கல்வியறிவுடையராய்ச் சிறந்தனரெனத் தெரிவது. வரதுங்க பாண்டியன் பிரமோத்தரகாண்டம் தமிழாற் பாடினுன். தமிழ்நாவலர் சரிதைக்கண் 'பணியாரக் குடத்துள் மதுரைக்குப் பாண்டியன்தேவி விடுத்த கவி' என்னுந் தலைப்பின் கீழ்,

என்னையிவ்வா றவர்மறந்தும் யானவரை மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்ருனே வப்பிறப்பிற் செய்ததவ முடிந்த வாருே
கன்னன்மத னபிராமன் வரதுங்க ராமனியற் காசி நாட்டி
லன்னவயற் குருகினங்கா னினியெவ்வா றுயிர்தரித்திங் காற்று மாறே.

செப்பாரு முகிழ்முலையா ரெல்லாருங் கணவருடன் சேர்ந்து வாழ
வொப்பாரு மில்லாவென் கணவனுடன் யான்கூடி யுறவா டாமல்
வெப்பாலு மிகுகாமத் துயராலு நாடோறு மெலிந்து வாடி
யிப்பாடு படவென்ருே விறைவனென் றலையெட்டி லெழுதி னனே.

எண்டிசா முகத்துந் திங்க ளிளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந் தோறுங் கொழுங்கணீர் முலையிற் சோரப்
பண்டுநா மறியாக் காமத் துயரினுற் படுவ தெல்லாம்
வண்டுகோ ளூரையீ ருங்கள் வரதுங்க ராம னுக்கே.

என வரும் பாடல்களான் அவ்வரதுங்க பாண்டியன் மனைவியின் புலமை அறியத்தகும். இப்புலமை பூதப்பாண்டியன் தேவியாரின்

நல்லிசைப் புலமைக்கு ஒப்பாவதில்லையாயினும் இவ்வகைக் கல்விச் சிறப்புப் பாண்டியர்குடிக்கண்ணேதானுள்ளது என்பது மட்டில் நன்கு விளங்கும். இத்தகையாளரே ஒத்தகிழவனும் கிழத்தியு மாவர். உருவமுதலியவற்றான் எத்துணையும் ஒத்து அறிவான் வேற்றுமைப்படின் அக்காதலனும் காதலியும் ஒருகாலும் தம்முள் ஒத்தாராகார். 'உறுப்பொத்தல் மக்களொப்பன்றால்' என்ற ஆன்றோர் திருவாக்கினையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க. இங்ஙனம் பெரிதும் அருமையாய்க் காண்டற்குரிய இவ்வறிவொப்பின்கட் பெருமகிழ் கூர்ந்து பூதப்பாண்டியனும் அவனுக்குச்சிறந்த பெருந்தேவியாரும் இனிது வாழ்கின்ற நாளில், இவ்வகை அறிவுடைச் சேர்க்கைக்கண் அழுக்காறு கொண்ட அறிவில்கொடுங்கூற்றம் பூதப்பாண்டியன் இன்னுயிரைக் கவர்ந்தது. அந்நிலையில் அறிவுடைப் பெருந்தேவியாரின் துன்பவெள்ளம் கரையடங்குவதோ! இவரது கேண்மை பேதையார் கேண்மையில்லையே; அறிவு வீற்றிருந்த செறிவுடை நெஞ்சினரிருவர் ஒருயிராகக் கலந்ததன்றோ; 'மக்களிழந்த இடும்பையினும் மனையாளிழந்த இடும்பையினும் மிக்க இடும்பை ஓவாத விதவை இடும்பை'* என்பரோ! தந்தை தாய் முதலாயினாரைஇழந்தார்க்குத் துயராற்றுதற்கு அம்முறைசொல்லிப்பிறரைக்காட்டுவதுண்டு; கணவனையிழந்தார்க்கு அங்ஙனஞ்சொல்லிக்காட்டுதலுமாகாதே: இவையெல்லாம் நன்குணர்ந்த இவரது கற்றறி நெஞ்சம் என்பாடுபடும்? அதனை எம்மாலெளிதிலறிந் துரைக்கத்தக்கதன்று. பெருந்தேவி இவ்வாறு துயருழவா நிற்கையில் அரசனுக்குரிமைச்சுற்றத்தினர் பிறர் பூதப்பாண்டியனது திருவும் வீரமும் பொலிகின்ற திருமேனியை அவனது பெருமைக்குத்தக்க பெருஞ்சிறப்புடன் இடுகாட்டுய்த்து ஈமத்தேற்றித் தீக்கொளுவுவாராயினர். உயிர்க்காதலனது திருமேனியையுங் காணப்பெறாத இந்நிலையிற் பெருந்தேவியாரது துயரம் கடலாய்ப் பொங்கித்தலைக்கொண்டது. அப்போது தேவியார் ஆற்றொணாதவராய்ப் "பசைந்

* இச்செய்யுள், ஒட்டக்கூத்தர்பாடியதென்று சொல்லப்படும் இராமாயணம் உத்தரகாண்டத்து, திக்குவிசயபடலத்திலுள்ள ௧௩௮-வது கவியாகும். இப்பாடல் முழுதையும் அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரப்பதிகத்தின் ௪௨-வது அடிவிசேடவுரையில் மேற்கோள்காட்டியிருக்கின்றனர்.

தாரைத் தீர்தலிற் றீப்புகுத னன்று" என்றசான்றோர் திருவாக்கின்படி தமதாருயிர்க்காதலுடன் அவ்விமத்தீயிற்பாய்ந்துமாய்தலே தம்மாற் செய்யத்தகுவதென்று தேர்ந்து அவ்வாறு செய்ய ஒருப்பட்டனர். அவ்வமையம் ஆண்டுக்குழீஇயிருந்த மதுரைப் பேராலவாயார்முதலிய புலவர் சான்றோர்கள் தம்மோடொத்த அறிவுடையரசனை இழக்கநேர்ந்த இந்நிலையில் தம்மோடொத்த அறிவுடையரசியையும் இழக்கலாகுமோ என்று தேவியாரைத் தீப்புகாமல் விரைந்து தடுப்பாராயினர். அதுகண்டு பெருந்தேவியார் ஈமத்தீப்புறத்து நின்றுகொண்டு அச்சான்றோரை நோக்கி,

'பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீம
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.'

என்னும் பாடலைக்கூறித் தீயிற்பாய்ந்து மாய்ந்தனர். தமதாருயிர்க்கொழுநனைநீங்கிய இவ்வுலகவாழ்க்கையே இப்பெருந்தேவியார்க்குச் சுடுதீயாயிற்று. அக்கணவனுடனிறத்தற்குக்காரணமான சுடுதீயோ அரும்பறமலர்ந்த தாமரைக்குளிர்நீர்ப்பொய்கையாயிற்று. இங்ஙனம் இயற்கையையும் மாற்றுகின்ற அன்பென்பதொன்றின்றன்மை அமரரும் அறிந்ததன்று. இப்பாட்டால் இவரைச்சான்றோர்பலர் தீப்பாயாமல் விலக்கினரென்பதும் அங்ஙனம்விலக்கினாரையெல்லாம் பொல்லாச்சூழ்ச்சியர் என்று முனிந்தனர் என்பதும் கைம்மை நோன்பினை வெறுத்தனரென்பதும் கணவனுடன் மாய்தலை மகிழ்ந்தனரென்ப

தும் பிறவும் நன்குணர்ந்துகொள்க. இப்பாட்டொன்றே இம்மெல்லியலாரது நல்லிசைப்புலமையினைச் செவ்விதினறிவுறுத்தும். இச்செய்தி நிகழ்வழியுடனிருந்த மதுரைப்பேராலவாயார் இத்தேவியாரது அரும்பெருஞ்செயற்கு வியந்து 'மடங்கலிற்சினைஇ' என்னும் புறப்பாட்டைப்பாடினர். அதனானும் இவரது பேரன்பும் அருஞ்செயலும் அறிந்துகொள்க.

இனி அகநானூற்றில் பூதப்பாண்டியன் பாடிய 'நெடுங்கழைக் கான்யாற்றுக்கடும்புனல்' என்னும் பாட்டினுள் 'பொருநர், செல்சமங் கடந்த வில்கெழு தடக்கைப், பொதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன், இன்னிசை யியத்திற் கறங்குங், கன்மிசை யருவிய காடிறந் தோரே' என்பதனாற் பொதியின்மலைக்கணிருந்த திதியன் என்னுங் குறுநிலமன்னன் கூறப்பட்டுள்ளான். நெடுஞ்செழியனாற் றலையாலங் கானத்துச்செருவெல்லப்பட்ட எழுவருள் திதியனும் ஒருவன் என்பது 'பகுவாய்வராஅல்' என்னும் அகப்பாட்டானும் மதுரைக்காஞ்சியுரையானும் அறியப்படுதலால், பூதப்பாண்டியன் நெடுஞ்செழியனுக்குப் பிற்பட்ட காலத்தவனாவன் என அறிக.

திருவனந்தபுரத்தைச்சார்ந்த மேலைப்பிடாகையில் தோவாளைக்கு மேற்காக ஐந்துநாழிகைவழித்தூரத்துள்ள தரிசனன்கோப்பு எனப்பெயரிய சிற்றூரில் *பூதப்பாண்டியன்கோவில் என்னும் பெயரில் ஓர் கோயிலுள்ளது என்பது இங்கு அறியப்படுவது.

இத்துணையுங்கூறியவாற்றான் இமிழ்கடல்வரைப்பிற்றமிழுடையாரெனும், பாண்டியர்குடிக்குக்காண்டகுதிலதமாய்க், கற்பினுக்கணியாய்ப் பொற்பினுக்கிடனாய், நல்லிசைப்புலமைச் செல்வமகளாயீண்டிய பூதப்பாண்டியன்றேவியாரின் வரலாறு ஒருவாறுணர்க.

ரா. இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

---

* Sewell's Antiquities, Vol. I. page 258.

சந்தானகுரவர் சரித்திரம்.

(௨௯௧-ம் பக்கத்தொடர்ச்சி.)

அங்குநின்றும் போந்தருளிய அருணந்திதேசிகர் திருத்துறையூரிலெழுந்தருளியிருந்துகொண்டு திரவிடவேதச் செம்பொருளாகிய சிவஞானசித்தியையும் இருபாவிருபஃதையும் தம்மைத் திருக்கடந்தையில் வைதிக சைவமறையோர் மரபிற்றோன்றிய மறைஞானசம்பந்தரென்பார் வினையொப்புமலபாகமுந்தீவிரதரசத்திப் பதிவுமெய்தியடைய அவருக்குத் தாமருளுபதேசஞ் செய்தனர். அம்மறைஞானசம்பந்தரோ விராட்புருடனுக் கிதயத்தானமாகிய சிதம்பர தலத்தைச் சேர்ந்த திருக்களாஞ்சேரியிற் சிருங்காரவனத்திற் பிரமபுரேசர் சந்நிதியிலிருந்துகொண்டு "நெக்கு நெக்குள்ளுருகி யுருகி நின்றுமிருந்துங்கிடந்து மெழுந்து—நக்குமழுதுந் தொழுதும் வாழ்த்தி நானாவிதத்தாற் கூத்து நவிற்றிச்-செக்கர்போலுந் திருமேனி திகழநோக்கிச் சிலிர்சிலித்துப்—புக்குநிற்" பாராய் அத்திருப்பதி யெங்கணுஞ் சரித்துவந்தனர். இவ்வாறு நிகழ்கையில் ஒருநாள் ஓரந்தணரகத்துத் தெருப்புறத்தே தாம் பிச்சையேற்றுழித் தில்லைவாழந்தணரு ளொருவராகிய உபாபதிசிவம் சிவிகையூர்ந்து மங்கலகோட்டத்தோடு பகல்விளக்கேந்திவரப் பரிவாரத்தொடுஞ் சென்றனர். அவரைக்கண் டாங்கு ஞானதேசிகர் புன்முறுவலித்துப் பகற்குருடன் செல்கின்றனனெனக்கூற அதைக்கேட்ட தீக்கிதர் பெருமான் சிவிகையினின்றிழிந்து ஓடோடியும் வந்து கண்டெட்டுறுப்புநிலமுறப் பணிந்துநின்று அவர் மிசைந்துகொண்டிருந்த அடிசின்மிச்சி னுகர்ந்தனர். அன்னுழி அவர்க்கிருவினையொப்பு மலபரிபாகமுந் தீவிரதரசத்திநிபாதமுமெய்தியதோர்ந்து அற்றைமுதல் தம்மை இடைவிடாது நிழல்போலடைந்த அத்தில்லைவா ழந்தணர்பெருமாற்கு வேதசிவாகமங்களிற் றுணிந்த சைவோபநிடதப்பயஞ்கிய மகாவாக்கியத்தை அருளுபதேசஞ் செய்தனர்.

அவ்வருளுபதேசம்பெற்றுச் சிதம்பரதலத்தைச்சார்ந்த கொற்றவன் வீற்றிருந்துகொண்டு பிறர் தம்மை யோரந்தணனெச்சி

*

கவர் "வள்ளுவ ரன்பர்மொழி வாசகந்தொல் காப்பியமே—தெள்ளு பரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்-தொண்டர் புராணந் தொகைச்சித்தி யோராறுந்—தண்டமிழின் மேலாந் தரம்" என்றருளிச் செய்தவ ராசங்கை தவிர்த்தருளினர். இவரிவ்வாறின்னனபல வற்புதங்களனைத்தும் விளைத்துச் சிற்சபேசன் றிருவடிநீழலிற் புக்கொடுங்கினர். இச்சந்தான குரவர் முறையே சிவபரிபூரணமடைந்த தலங்கள் திருவெண்ணெய்நல்லூரும், திருத்துறையூரும், திருக்களாஞ்சேரியும், கொற்றவன்குடியுமேயாம். அவரடைந்த நாட்களைச் 'சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடனி—லுத்திரஞ் சீர்கொண் மறைஞான தேசிக ரோதுகன்னிச்—சுத்தமெய்ப் பூர மருணந்தியைப் பசிச் சோதிதனில்—வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே" என்றபியுக்தருமருளிச்செய்திருக்கின்றனர்.

(தொடரும்.)

தி. சண்முகப்பிள்ளை.

ஸ்ரீ:

நட்பு.

(உ௮௱-ம் பக்கத் தொடர்ச்சி.)

இந்நன்மை நட்பினரான்மாத்திரமே உளதாவதொன்றன்று. நமது எண்ணங்களை,எவரும் இல்லையாயின் மனத்தில் அலையவிடாமல், ஒரு கல்லுருவிடத்திலாயினும் ஒரு புல்லுருவிடத்திலாயினும் உரைத்துக்கொள்வதே உத்தமம். நட்பினரிடத்தில் உரைத்துக்கொள்வது உத்தமோத்தமம். சித்திரப்பட்டாடைகளைச் சிப்பமாகக் கட்டிவைத்தால் அவற்றின் சீர்சிறப்புக்கள் விளங்கமாட்டா: விரித்துவைப்பின், கண்டமாத்திரத்தில் அவற்றின் அருமை நன்குவிளங்கும். வெளியிடாத எண்ணங்கள் சிப்பமாகக் கட்டிவைத்த சித்திரத்துணிகளே.

3. நண்பனே எதற்கும் ஏற்றபெற்றி சூழ்ச்சிசொல்லுதற்குரியவன். தன்தொழிலைக்குறித்து ஒருவன் தானே சூழ்ந்திடல், தன்

னைப்புகழ்ந்து முகமனுரைப்பானொருவனிடத்திற் சூழ்ச்சிசெய்வதை யொக்கும். ஒருவனுக்கு நண்பன் உரைக்கலான சூழ்ச்சி இருவகைத்து. ஒன்று ஒழுக்கத்தை நோக்கியது. மற்றொன்று காரியசித்தியைக்கருதியது. தனது ஒழுக்கந்தவறியவிடத்து அத்தவற்றினைநீக்சித் தன்னை ஒழுக்கத்தில் உய்க்கத்தக்கவன் நண்பனே.

> நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
> மேற்சென் றிடித்தற் பொருட்டு.

ஒருவன் தன் தவறுகளைத் தானே குறித்தறிந்து அவற்றைத் திருத்திக்கொள்வது வெறுப்புத்தரலான அதமபரிகாரமாகும். அங்ஙனந் திருத்திக்கொள்ளும்பொருட்டு நன்னெறிவிளக்கும் நீதிநூல்களை ஓதுவதும் மந்தமான பரிகாரமே. ஏனையரிடத்திற்கண்ட தவறுகளின் உதவியால் ஒருவன் தனது தவறுகளைத் திருத்திக்கொள்வது, தனது சுற்றுச்சார்புகளோடு பொருந்துவதில்லையாகக்கூடும். நண்பன் உரைக்கும் கழற்றுரையே உத்தமபரிகாரமாகும். கழறியுரைக்கும் நண்பன் இன்மையால், உன்னதபதவியிலுள்ளார் சிலர் பெருந்தவறிழைத்துச் சீருஞ்செல்வமுமிழந்து இடர்ப்படுவது பிரத்தியக்ஷமாக இராநின்றது. இவர்கள், கண்ணாடியிற்கண்ட தங்கள் உருவை உடனே மறப்பவரையொப்பர்.

காரியசித்திக்கும் நண்பனுடைய சூழ்ச்சி இன்றியமையாதது. கணக்கன் கணக்கறிவான் தன்கணக்கைத் தானறியான். எல்லாப் பொருள்களையும் கண்டறிகின்ற கண் தன்னைத்தான் காண்பதில்லை. கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியுமா? தன்கருமத்தின் குற்றமற்றங்கள் ஒருவனுக்குத் தோன்றா. தீவட்டிக்காரனுக்குக் கண் தெரியாது.

> அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்
> அல்ல லுழப்பதா நட்பு.

ஆகையால் தான்தொடங்குங் கருமம் சித்தியாதற்பொருட்டு ஒருவன் தன்நண்பனுடன் உசாவுதல் ஒருதலை.

சிலர் ஒருதொழிலினிமித்தம் ஒருவனிடத்தும் மற்றொன்றினிமித்தம் மற்றொருவனிடத்தும் சூழ்வர். இதனால் இருவகைத் தீமை

விளையும். உண்மையான நண்பனல்லாதவன், தான்கருதியிருக்கும் சிலகருமங்களுக்குச் சாதகமாகும் விதமாய்ச் சூழ்ச்சி கூறுவதல்லது, சூழ்ச்சிகேட்டவனுக்கே நன்மை விளையுமாறு கூறுவதரிது. தனது உடற்கூறு அறியாத மருத்துவன்கொடுக்கும் மருந்தால், அதற்குரிய நோய்நீங்கியும், உள்ளடங்கியிருந்த வேறுநோய் மேலெழுவதாகி, உயிர்க்கிறுதிவிளைவதுமுண்டு: அங்ஙனமே தனது சுற்றுச்சார்புகளை நன்குணராதவொருவர் கூறும் சூழ்ச்சி, நற்சிந்தையுடன் பொருந்தியதாயினும், அதனால் ஒருகூறு நன்மையுண்டாகியும், வேறு எதிர்பாராத தீமையால் தன்கருமம் சிதைதலுங்கூடும். ஒருவனுடைய கருமங்களனைத்தையும் உள்ளபடி நன்கறிந்த உண்மைநண்பன் கூறும் சூழ்ச்சியால், ஏனைக்கருமங்களும் பழுதுறாது, கருதியகருமமுங்கடைபோவதாகும். அவ்வக்கருமத்தின் தொழிற்றிறங்களைத் தீரவுணர்ந்தவரான பலரிடம் சூழ்ச்சி கேட்பினும், அவருரைப்பனவற்றில் தன் கருமத்துக்கு ஆவதை அறிந்துகொள்ள வல்லவன், நண்பனிடத்தில் மாத்திரமே சூழ்தல்வேண்டும் என்கிற நியதியில்லை. தனக்கு ஆனவற்றைத் தானே உய்த்தறியும் ஆற்றலில்லாதவன், தனது கருமங்களையுஞ் சுற்றுச்சார்புகளையு முற்றுநன்குணர்ந்த நண்பனிடத்தே சூழ்தல்வேண்டும்.

4. தன்திறங்களை ஒருவன் பிறரிடம் அறிவிக்கத்தக்க சந்தர்ப்பம் நேர்தலாகும். அப்போது அவற்றைத் தானே எடுத்துரைப்பது தற்புகழ்ச்சியாகக்கொள்ளவும்படும். தன்காலைத் தானே கும்பிட்டுக்கொள்ளலாமா? சான்றற்புகழ்தல் தகுதியன்றே. பிறரிடத்தில் ஒன்றை விண்ணப்பித்துக்கொள்வதும் ஒருபொருளை இரந்துகொள்வதும் ஒருவன் தானேசெய்யப் பொருதவனுதல் உண்டு. தன்னளவிலே நாணுதலுங் கூசுதலுமான இவற்றை நண்பன் செய்தல் பொருந்தும். மைந்தனிடத்தில் தந்தை முறையாகவும் தந்தையிடத்தில் மைந்தன் முறையாகவும் தம்முனிடத்தில் தம்பிமுறையாகவும் தம்பியிடத்தில் தம்முன்முறையாகவுமன்றி ஒருவன் வேறுமுறையாக ஒன்றுரைத்தலும் செய்தலுமாகா. பகைவனிடத்தும் பகைபாராட்டாமல் தன்பெருமைக்கேற்றவாறு ஒன்றுரைத்தலும் செய்தலுமாகா. தான் உத்தியோகிக்கும் உத்தியோகமில்லைமையில், தான்கருதிய

சிலபொதுநன்மைகளை, அவ்வுத்தியோகத்துக்குப் பாதகமின்றி, ஒருவன் தானே செய்யவியலாத சந்தர்ப்பங்களுமுண்டு. நண்பனுயின் அவ்வத்திறத்துக்கியைந்தவாறு உரைத்தும் செய்தும் தனது எண்ணங்களை அனுகூலிக்கும்விதமாக முடித்தல்கூடும். மக்களுக்கு மணம்புரிதல் பொருளைப்பங்கிடுதல் கருதியகருமமுடித்தல் முதலியவற்றைத் தாம் விரும்பியவாறு நிறைவுறுத்துமுன்னரே பலர் ஆயுளின் எல்லையைக் கடந்துவிடுகின்றனர். “இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக், கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை” யாயினும் உண்மை நண்பன் ஒருவனுளனுயின் தன் விருப்பமெல்லாவற்றையும் தான் விரும்பியவிதமே அவன் தலைக்கட்டுவான் எனக் கடைப்பிடித்திருக்கலாம். இங்ஙனம் நண்பனலன்றி ஒருவன் தானே செய்துகொள்ளலாகாத கருமங்கள் எத்தனையோ உள்ளன. எக்காலத்தும் எக்கருமத்திலும் உதவிசெய்யத்தக்கவன் நண்பனே.

நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
ஒல்லும்வா யூன்றும் நிலை.

தாமவரென்னும் வேற்றுமையின்மையால், உண்மைநண்பனுற் பெறலான இவ்வகை நன்மைகட்குக் கங்குகரையில்லை. இதனைப்பல படப்பாரித்தல் வேண்டா. ஒருகாரியத்தை முடிக்ககில்லாதவன் உண்மை நண்பன் இல்லாவிடத்து, அதனை அகாரியமென்றே விட்டொழிதற்பாலன்.

இங்ஙனம்,
தி. செல்வக்கேசவராய முதலியார்.

உ

கந்தபுராணம்.

பரமகருணாநிதியாகிய பரமேசுவரனுடைய கட்டளைப்படி வியாசமுநிவராலே யாவருங் கற்றுணர்ந்து சித்திபெறும்பொருட்டு வேதசாத்திர சாரங்களை யெல்லாம் விளக்கமாகச் சுருக்கி யமைத்துப் புராணவடிவமாகச் செய்யப்பட்டிருக்கும் நூல்கள் பதினெட்டு வகைப்படும்; அவை சைவபுராணம் முதலியன.

கந்தபுராணம்.

எதிரில் சைவமே பவுடிய மார்க்கண்ட மிலிங்கம்
மதிகொள் காந்தநல் வராகமே வாமன மற்சம்
புதிய கூர்மமே பிரமாண்ட மிவைசிவ புராணம்
பதும மேலவன் புராணமாம் பதுமமே பிரமம்.

கருது காருட நாரதம் விண்டுபா கவதம்
அரிகதைப்பெயராக்கிநேயமழற்கதையாம்
இரவிதன்கதை பிரமகை வர்த்தமா மிவைதாங்
தெரியு மொன்பதிற் றிருவகைப் புராணமாந் திறனே.

இந்தப் பதினெண்புராணங்களுள்ளே ஒன்ருகிய கந்தபுராணம் சனற்குமாரசங்கிதை, சூதசங்கிதை, பிரமசங்கிதை, விஷ்ணு சங்கிதை, சங்கரசங்கிதை, சூரியசங்கிதை என்னும் ஆறுசங்கிதைகளாயமைந்த ஐம்பது கண்டங்களுடையது. சங்கிதை=நன்கு போதிப்பது. இந்த ஆறு சங்கிதைகளுள்ளும் சங்கர சங்கிதை முப்பதினுபிரம் சுலோகங்களடங்கிய பன்னிரண்டு கண்டங்களுடையது. அந்தக் கண்டங்களுள்ளே. சிவரகசிய கண்டமும் ஒன்று.

சிவரகசியகண்டம்—சம்பவகாண்டம், ஆசுரகாண்டம், மாகேந்திர காண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தக்ஷகாண்டம், உபதேசகாண்டம் என எழுகாண்டங்களையுடையது. உபதேசகாண்டமொழிந்த ஆறுகாண்டங்களிலும் சுப்பிரமணியக்கடவுளுடைய சரித்திரங்களும், பராக்கிரமங்களும் பெரும்பாலுஞ் சொல்லப்படும். இந்த ஆறு காண்டங்களின் கதைகளையும் ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியர் தமிழ்ப்பாஷையிலே பெயர்த்து விருத்தப் பாவினத்திலே பெருங் காப்பியம் என்று சொல்லும்படி அலங்கரித்துப் பாடியருளினுர். இதுவே கந்தபுராணம் என்னும் பெயரோடும் யாவராலுங் கொள்ளப்படுகின்றது.

இஃதறியாத சிலர் இக்கந்தபுராணத்திலே வடமொழிக்காந்த புராணத்துள்ள சரித்திரம் முழுதும் பெயர்த்துக் கூறப்பட்டுளதெனவும், உபதேசகாண்டம் முதலியன காந்தபுராணத்தின் வேறு எனவுங் கூறுவர்; அவரெல்லாம் உபதேசகாண்டம், காசிகாண்டம், தணிகைப்புராணம், காஞ்சிப்புராணம், சேதுபுராணம் முதலியனவும் காந்தபுராணத்தின் பாகங்களென அறிக.

இந்தக் கந்தபுராணத்திலுள்ள கவிதைகளெல்லாம் சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கினிமை, நன்மொழி புணர்த்தல் முதலிய அழகெல்லாம் அமையப்பெற்றுள்ளன. சில கவிகள் முதனூல் கொண்டு தெரிதற்குரியன. சில கவிகள் சங்கச்சான்றோர் நூலுரைகள் கொண்டு தெரிதற்குரியன. சில கவிகள் சீவகசிந்தாமணி முதலிய நூலுரைகள் கொண்டு தெரிதற்குரியன. சில கவிகள் மற்றைப்புராணகதைகள் கொண்டு தெரிதற்குரியன. சில கவிகள் சித்தாந்த சாத்திரங் கொண்டு தெரிதற்குரியன. சில கவிகள் தரிசனசாத்திரங்கொண்டு தெரிதற்குரியன. சில கவிகள் அலங்கார சாத்திரங்கொண்டு தெரிதற்குரியன.

முதனூல் கொண்டு அறிதற்குரியன பலவாயினும் சூரபன்மன் வதையிலே சுப்பிரமணியப்பெருமானுடைய விச்சுவரூபங் கூறுங் கவிகளும் வேறுசில கவிகளும் இப்பொழுது முதனூலோடும் ஆராயப்படுகின்றன.

சூரபன்மன்வதை.

உள்ளடிவரைகள்யாவுமொண்புறவடியினீத்தம்
வள்ளுகிர்விரல்கண்முற்றும்வானுருமேறுநாள்கோள்
எள்ளரும்பரடுதன்னிலிரும்புனற்கிறைவன்சோமன்
நள்ளிருளனையமேனிநிருதியோடாரக்கர்நண்ண.

வரைகள்=மலைகள். நீத்தம்=சமுத்திரம். வள்ளுகிர்விரல்=கூரியநகங்களையுடையவிரல். "மலைகளெல்லாம் பாதமத்தியிலும், சமுத்திரங்களெல்லாம் பாதநுனியிலும், நட்சத்திரங்களும், மின்னலும், நவக்கிரகங்களும் கால்விரல்களிலும் அடங்கியிருந்தன; சூரியன், சந்திரன், வருணன், நிருதி என்னும் இவர்கள் காற்பரடுகளில் அடங்கியிருந்தார்கள்" என்பது முதனூலாகிய காந்தபுராணம்.

அடிதிரள்கணைக்காறன்னிலாரிடர்மணிகள்சானு
வடிவமைமுழந்தாள்விஞ்சைவானவராதியானோர்
தொடைதனின்மகவான்மைந்தன்றொடைமுதனடுவென்காலன்
சடிதடத்தசுரர்பக்கங்கடவுளர்யாருநண்ண.

கணைக்கால் தன்னில் ஆரிடர் மணிகள்=கணைக்காலிலே முனிவரும் சிந்தாமணியும். சானு வடிவு அமை முழந்தாள்=சானுவாகிய

வடிவமைந்த முழந்தாள். மகவான் மைந்தன்=மகவானும் மைந்தனும்.

இருப்பினிறகர்கோசவெல்லையின் மருந்தேயுந்திக்
கருப்படுயிர்கண்மார்பிற்கலைகண்முந்நூலிற்போதம்
அருப்பயிலுரோமத்தண்டமங்கையிலகிலபோகம்
திருப்பெருந்தடந்தோள்வைப்பிற்செங்கண்மால்விரிஞ்சனண்ண.

இருப்பு=சககபாகம். மருந்து=அமுதம். கலைகள்=சாத்திரங்கள். போதம்=ஞானம்.

மெல்லிதழனையசெங்கைவிரன்மிசையணங்கினல்லார்
ஒல்லொலியங்கிகண்டமொப்பிலாமணிவாய்வேதம்
பல்லிடையெழுத்துநாவிற்பரமவாகமத்தின்பேதம்
நல்லிதழ்மனுவின்விஞ்சைநாசியிற்பவனன்மன்ன.

அணங்கினல்லார்=தேவப்பெண்கள். மனுவின் விஞ்சை=மந்திரவித்தை. பவனன்=காற்று.

கருணைகொள்விழியிற்சோமன்கதிரவன்செவியிற்றிக்கு
திருநுதற்குடிலைவைப்புச்சென்னியிற்பரமவான்மா
மரபினின்மேவித்தோன்றமாறிலாதிருக்குந்தொல்லை
ஒருதனதுருவங்காட்டிநிற்றலுமும்பர்கண்டார்.

சோமன்=சந்திரன். குடிலை=பிரணவம். பரமவான்மா=பரமசிவம்.

அரக்கர் நண்ண என்பதும், கடி நடத்தசுரர் என்பதும், ஒல்லொலியங்கிகண்டம் என்பதும் மூதனூலுடன் சிறிது வேறுபடுவன போலக் காணப்படுதலால் ஆராய்ந்து பின்னர்ப் பேசப்படுவனவாயின.

தெய்வயானை திருமணப்படலம்.

கொற்றவெண்குடையெடுத்தனர்குளிர்பனிக்கவரிக்
கற்றைவீசினராலவட்டங்கள்காலசைத்தார்
ஒற்றைவாட்படையேந்தினருடுபதிக்கடவுள்
மற்றையாதவன்மருத்துவன்சலபதிமறலி.

சூரியன், சந்திரன் என்னும் இருவரும் இருகுடைகளை எடுத்தார்கள். வாயுவும் வருணனுஞ் சாமரத்தாலும், விசிறியாலுஞ்

சேவித்தார்கள். இயமன் வாட்படையை ஏந்தினன்: என்பது முதனூல். மருத்துவன் சலபதி என்பதற்கு வாயுவும் வலிய வருணனும் என உரைக்க. மருத்துவன் எனக்கொண்டு இந்திரன் என்று பொருள் கூறுதல் முதனூலுடன் முரணும்.

வள்ளியம்மை திருமணப்படலம்.

கட்டுவரிவிற்கருங்குறவர்கைத்தொழிலால்
இட்டவிதணத்திருந்தெம்பெருமாட்டி
தட்டைகுளிர்தழலைத்தாங்கித்தினைப்புனத்தைக்
கிட்டவுருவண்ணங்கிளிமுதற்புள்ளோட்டினளே.

இக்கவியிலே வரும் தட்டை, குளிர், தழல் என்பன சங்கச் சான்றோர் நூலாகிய குறிஞ்சிப்பாட்டிலே வரும் "தழலுந் தட்டையுங் குளிரும் பிறவும்" என்பதனுரைகொண்டு உணரத்தக்கன.

ஆண்டொழிலின்மேதகையவண்ணலிதுகேண்மோ
நீண்டதனிமூப்பகலநெஞ்சமருணீங்க
ஈண்டுநும்வரைக்குமரியெய்தியினிதாட
வேண்டிவருகின்றனன்மெலிந்துகடிதென்றான்.

இக்கவி சீவகசிந்தாமணியிலே சுரமஞ்சரியாரிலம்பகத்திலே வருகின்ற "வந்தவரவென்னையென வாட்கண்மடவாய்கேள்—சிந்தை நலிகின்றதிருநீர்க்குமரியாட — வந்திலதனுயபயனென்னைமொழிகென்றான்—முந்திநலிகின்றமுது மூப்பொழியுமென்றான்" என்னுங்கவியோடு பொருளாவியையுடையது. "கார்க்கடற்பவளவண்ணன்" என்று விட்டுணுவைக் கூறியது காஞ்சிப்புராணங்கொண்டு அறியத்தக்கது.

கல்லகங்குடைந்தசெவ்வேற்கந்தனோர்தருவதாகி
வல்லியர்கிரியைஞானவல்லியின்கிளையாய்ச்சூழப்
பல்லுயிர்க்கருளைப்பூத்துப்பவநெறிகாய்த்திட்டன்பர்
எல்லவர்தமக்குமுத்தியிருங்கனியுதவுமன்றே.

இங்கே பல்லுயிர்க் கருளைப்பூத்து என்றது ஆணவவிருளினலே ஒன்றுமறியாதுதடுமாறிய பலவாகியஆன்மாக்களுக்கெல்லாம் வெளியில் வருமாறு செய்த திருவருளை எனவும், பவநெறி என்றது தனு

கரணபுவனபோகங்களை அவ்வுயிர்கள் அடையுமாறுசெய்த பிறவி வழியை எனவும் அறிக. இவை சித்தாந்தநூல்கொண்டு தெளியத் தக்கன. பாயிரப்படலத்திலே வரும் சிலகவிகளும் பிறவும் நியாயம் முதலிய பிறநூல்கள்கொண்டுணரத்தக்கன.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
குரோதி௵ ஆடி௴

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

௨

பிராசீனதர்மங்களின் உயர்வும் இக்கால ஆசாரங்களும்.*

முகவுரை.

ஞானோபதேசம் செய்யவரும் ஒவ்வொருவரும் தம்முடைய நிலைமை எவ்வளவு தாழ்மையுள்ளதாக இருப்பினும், தாம் செய்ய வேண்டிய கடமைகள் உண்டு. அவையாவன;—உயர்வான மனோபாவத்தை அநுஷ்டானத்துக்கு லக்ஷியமாக எடுத்துக் காட்டல், தற்கால உலகநடைகளில் தீயவற்றைக் கண்டித்தல், உயர்வான பாவங்களை அநுஷ்டிக்கும் நெறிகளைச் சுட்டிக் காட்டல் என்பவைகளாம். அடியில் வரும் உபந்நியாசங்களில் மேற்கண்ட முறைகளை வெளியிட முயன்றிருக்கிறேன். ஆனால் அவற்றை நிறைவேற்றுவதிற் பலசங்கடங்கள் உண்டு. அக்காரணம் பற்றி அக்கடமைகளைக் கொண்டு செலுத்தாமல் விட்டு விடலாகாது. கஷ்டங்களுக்குப் பயந்து அதைரியமுள்ளவர்கள் பின் வாங்குவார்கள். தீரர்களோ அவற்றை மேற்கொண்டு நடத்துவார்கள்.

---

* காசிப்பட்டணத்தில் 1900௵ டிசம்பர்௴ "பிரஹ்மஞானசபை"யின் 25-ஆம் ஆண்டு நிறைவிற்கூடிய மகாசபையில் அன்னிபெசண்டுஅம்மை ஆங்கிலபாஷையிற் செய்த நான்கு உபந்நியாசங்கள் இவை.

இந்த 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியதேசமானது இரண்டு மார்க்கங்களின் மத்தியிலிருக்கின்றது. ஒன்று—அதோமுகமான நாசத்திற்கும், மற்றொன்று—ஊர்த்வமுகமான க்ஷேமத்திற்கும் ஏதுவாக விருக்கின்றன. இத்தேசத்தினர்களில் உத்தமமானவர்கள்பலர் இந்தியதேசம் நற்கதி அடையுமா என்று சங்கிக்கிறார்கள். பயன்படாத முறைகளைச் செய்து, அதனால்நேரும் மரணகதி தாமதமாக நடைபெறுவதைவிட, 'இந்திய தேசம் யாதொரு முயற்சியுமின்றித் தானாகவே நாசம் அடைவதாக' என்று அவர்கள் சும்மாஇருப்பார்கள்போலும்! மற்றவர்களோ வென்றால், தேசாபிமானமுடையவர்களாயினும், தங்கள்தேசத்தைக்காப்பாற்றுவதற்குரிய வழிதெரியாமல் அறிவின்மையான முறைகளை அநுஷ்டிக்கிறார்கள். அதாவது இத்தேசத்தின் பிராசீனமுறைகளைக் காற்றிற்பறக்கவிட்டு, மேல்நாட்டாரின் முறைகளே இத்தேசத்துக்கும் பரமௌஷதமென்றெண்ணி, அவற்றை அநுஷ்டிப்பாராயினார்கள். அது, உண்மையில், தேசத்தின் நாசத்துக்கு ஏதுவாகவே முடியும். பின்னுஞ் சிலர் அடியில் வருமாறு நம்புகின்றார்கள். இத்தேசத்துக்கு இனி இகபரசம்பத்துகள் வரப்போகின்றன என்னும் நம்பிக்கையுள்ளவர்களாய், பிராசீன சிரேயஸ்கரமான முறைகளை இக்காலத்துக்குத் தக்க முறைகளுடன் சம்பந்தித்துச் செய்ய முயல்வாராகின்றனர். இத்தகையார்களில் யானும் ஒருத்தி. இந்நோக்கத்தை முதன் முதல் வெளியிட அடியில்வரும் உபந்நியாசங்கள் செய்திருக்கிறேன்.

யான் மஹாத்துமாக்களின் தாழ்மையான ஒருவேலைக்காரி. இந்திய தேசத்தை மேன்மையான பதவிக்குக் கொண்டுவரச்செய்யும் முயற்சிகளில், யார் வருவாரேனும் அவரவர்களுக்கு அங்கீகாரமான முயற்சியில் யானும் ஒரு சிறிய பாகத்தைக் கைக்கொள்ள ஆசையுடையவளாக இருக்கிறேன்.

இதுகாறும் 7-வருஷங்களாக நான் செய்துவந்த உபந்நியாசங்களில் பிராசீன சிரேயஸ்கரமான மனோபாவங்களை இந்தியர்களும், மற்றுமுள்ள உலகத்தினரும் அறியும்படியாகவும், இந்தியர்க்குத் தங்களுடைய சனாதனமான மதத்தில் பக்தியும் சிரத்தையும் உண்டாக

வேண்டியும் பிரஸ்தாபித்துமாத்திரம் வந்தேன். அவைகள் பயன் படாமற் போகவில்லை.

எச். பி. பிளவாட்ஸ்கி அம்மையார் (H. P. Blavatsky) செய்துள்ள கிரந்தங்களாலும், எச். எஸ். ஆல்காட் (H. S. Olcott) துரையவர்கள் செய்துவந்த நற்செய்கையாலும் இந்து மதத்திற்கு உண்டாயிருக்கிற ஊக்கம் உறுதிப்பட்டதோடு, அவ் இந்துமதத்துக்குத் திரும்ப ஜீவகலை ஏற்படுவதற்குப் பிரஹ்மஞானசபையே முக்கிய காரணமென்பதை சத்துருக்களும் மித்துருக்களும் சமமாக ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால் நன்மையைத் தொடர்ந்து தீமையும் விளைந்திருக்கிறதென்பது ஆச்சரியமன்றாயினும், பார்க்க வியசனமாகவே யிருக்கிறது. ஹிந்து மதம் உயர்விக்கப் பெற்று நடைபெறுவதுடன், துராசாரங்களும், மூடபக்தியும், அறிவீனமான மனோபாவங்களும் இப்போது பலப்பட்டுத் தலைதூக்கி நடமாடத் தொடங்கியிருக்கின்றன, ஆகவே, சனாதனமதத்தின் பெருமையைப் பற்றிப் பேசுவதுடன், இத்துராசாரங்கள்மூடபக்திகளைப் பற்றியும் வெளிப்படையாய்க் கண்டித்துப் பேசுவதும் என் கடமையாக நேர்ந்திருக்கிறது. இந்த துராசாரங்களை அநுஷ்டிக்கும்படி நான் சொல்வதாக நினைக்காமலும், சனாதனதர்மத்தின் சிறப்பை வற்புறுத்துவதால் இந்த அநாசாரங்களையும், மூடபக்திகளையும் நானும் அங்கீகாரஞ் செய்கிறேன் என்ற எண்ணமுண்டாகாமல் தடுக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். இவைகள் மேலிட்டாலும், ஹிந்துமதக் கோட்பாட்டுடன் சம்பந்தித்தாலும் இந்திய தேசம் நாசத்தை அடையும்; இகழ்ச்சிக்குள்ளாகும். அழுகி வருகின்றவற்றைச் சுத்தமானவைகளினின்று வேறுபடுத்தி இயலுவதுதான் க்ஷேமசாதகமாகும். அன்றி, சுத்தமானவற்றுடன் சம்பந்தித்திருக்கின்ற காரணம்பற்றி அழுகியவற்றை நீக்காமற் பிறரறியாதவண்ணம் புதைத்து மூடிவைப்பவர்கள் இந்திய தேசத்தை உண்மையில் அபிமானிக்கிறவர்கள் அல்லர். அழுகலானவை புரையோடும்: புரையோடவே நாசம் சம்பவிக்கும். அது சரீரத்தில் இருந்தாலும் சரி: ஒரு தேசத்திலிருந்தாலும் சரி; ஆகையால் துராசாரங்களையும், அவற்றை நீக்கும்

உபாயங்களையும்பற்றி மறைக்காமல் வெளிப்படையாகவும் பேசியிருக்கிறேன்.

இவ்வாறு உபந்நியாசங்கள் செய்தகாலத்தில் விடப்பட்ட சில விஷயங்கள் ஆங்காங்கு இப்போதுசேர்த்து அச்சிடப்பட்டுள்ளன.

இந்த உபந்நியாசங்கள் இந்துக்களை நோக்கிச் செய்திருந்தபோதிலும், அவற்றிற் பெரும்பான்மையான விஷயங்கள்—முக்கியமாய் முதல்வியாசத்திலும் கடைவியாசத்திலு முள்ளவை—ஹிந்துமதத்துக்குப் புறம்பாயுள்ளவர்க்கும் உபயோகமாகவிருக்கும். தற்காலத்தில் உலகநடையில் நன்றாய்ச்சேர்த்துக்கொள்ளக்கூடிய உயர்வான கருத்துக்களும், ஆசரணைகளும் இவ்வுபந்நியாசங்களில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்திய தேசத்தின் பகுதிகளாகவுள்ள இராஜ்ஜியங்களைச் சார்ந்த ஒவ்வொருவரும் இந்திய தேசத்தின் க்ஷேமத்தில் சிரத்தையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்த உபந்நியாசங்களிற் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்கள் நேர்மையாகவும், சாதகமானவையாகவும் இருக்குமாயின், இந்தியர்கள் அவற்றை அங்கீகரிப்பார்களாக. அவை, அவர்களின் மேம்பாட்டுக்கு அநுகூலமான உபகரணங்கள் ஆகுக.

அன்னிபெஸண்டு.

முதலாவது உபந்நியாசம்

நான்கு ஆசிரமங்கள்.

சகோதரர்காள்!

பிரஹ்மஞானசபை என்ற தியசாபிகல் ஸொஸைடியானது, அநேக சங்கடங்களின் மத்தியிலும், பலஇடையூறுகளிருந்தும், தான் சிரமேற் கொண்ட உயர்வான விஷயம் நிறைவேறும்வண்ணம் சென்ற 25-வருஷங்களாக நடைபெற்று வருகின்றது. அக்காலத்திற்குள் உலக அநுபவம் பெற்றும், தன் பலாபலத்தை உணர்ந்தும், குற்றங்களை அறிந்தும், தவறுகளை விலக்கியும், வருங்காலத்து

க்குச்சாதகமான அநேக அநுபவங்களை அடைந்துமுள்ளது. மேற்றிசையார் கணக்குப்படி நூற்றாண்டு முடிவும், சபையின் 25-ம் ஆண்டு நிறைவும் ஒரே சமயத்தில் நேர்ந்திருக்கின்றன. இதேசமயம், கீழ்த்திசையார் கணக்குப்படி காலச்சிறுவட்டங்களுள் ஒன்று முடிவும் பெறுகின்றது. ஆக, இன்று நாம் நிற்கும்நிலை எத்தகையதென்றால், உலகசரிதத்தில் உயர்ந்த மாறுதல்களுக்கு அங்குரார்ப்பணம் செய்தற்கும், மாநுஷ்யமேம்பாட்டைப் பயக்கும் நற்காரிய முயற்சி தொடங்குதற்கும் உரிய ஒரு காலவட்டத்தின் முகப்பாக இருக்கின்றது. இது ஏற்றதொரு நல்லசமயம்; உத்தரவாதமுந் தங்கிய சமயம். இத்தருணத்திற் செய்யுந் தீர்மானங்கள் பெரிதான பலப்பிராப்திக்கு உரியவாக விருக்கும். இச்சமயத்தை முன்னோக்கிச்செய்யும் யத்தனங்களினால், நெடுங்காலம் வரை, தேசத்தார் நடக்கவேண்டிய நெறிகள் இன்னவை என்று உறுதியாகும். மேற்கண்ட விஷயத்தைக் கருத்தில் வைத்துக்கொண்டு முன்னோக்கியும் பின்னோக்கியும் பாருங்கள். உலகத்துக்கு இந்தியாவைக்கொண்டு என்ன சாதகம் செய்யலாகுமென்று முன்னோக்குங்கள். சரியான நெறியைக் கைக்கொண்டால் இந்தியாவாற் செய்து முடிக்கக்கூடியவை என்ன என்று உற்றுணருங்கள். இப்போது இரண்டு மார்க்கங்கள் இருக்கின்றன; எந்த மார்க்கத்தைப்பற்றி ஒழுகலாமென்று யோசியுங்கள். தெய்வங்களின் தீர்மானமான கதியை அதிக்கிரமிக்க முடியாது. அக்கதியைப்பற்றியே ஒருஜாதியாரின் க்ஷேமமும், அதன் நாசமும் நிகழ்கின்றன. அன்றியும் இனிவரும் முறையும் அதுபற்றியே இருக்கிறது.

இந்த பிரஹ்ம ஞானசபையானது, உலகத்துக்குச் சில நன்மையான காரியத்தைச் செய்யவேண்டுமென்ற நன்னோக்கத்துடன், இந்திய தேசத்துள்ள மஹாருஷிகள் சிலரால் ஸ்தாபிக்கப்பெற்றுள்ளது. அதன் சுபாவமான கொள்கையை அநுசரித்தே, இந்து தேசத்தின் விருத்திவிஷயமாக முயற்சி எடுத்துக்கொள்வது அந்தசபையின் கடமையாகும். இந்த சபையில் இந்துக்கள் அங்கத்தினராகவிருப்பதில், இந்தியாவின் தற்காலநிலைக்கு ஏற்ப அதற்கு மேம்பாடு பயக்கும் முயற்சியைத் தாங்களே தலைக்கொண்டுநடத்தத் தைரியமும், ஊக்க

மும் அவர்கட்கு இல்லாமற்போகுமாயின், கீழ்த்திசையாரைப்பற்றிய அந்தசபையின் உத்தேசம் சபலமின்றிப் பொய்த்துப்போம். அக்காரணம்பற்றியே மேற்றிசையாரைப்பற்றிய நோக்கமும் பயனற்றதாக முடியும். இந்தியதேசத்தில் இனி நடக்கவேண்டிய முறையைத் தீர்மானிப்பது எவ்வளவு முக்கியமோ—அவ்விதமே இந்த சபையில் இனி நடத்தவேண்டிய முறையைத் தெரிந்துநிச்சயிப்பதும்.

சென்ற 7-வருஷங்களாக உங்களுடன் ஜீவித்துக்காலக்ஷேபம் செய்துவந்திருக்கிறேன். உங்களுக்காக உழைத்தும் வந்திருக்கிறேன். இந்தியாவின் தற்காலநிலைமைக்கு விமோசனம், எந்தவழியைப்பற்றி ஒழுகினாற் கைகூடுமென்னும் நினைப்புள்ளவளாய் அதன் தற்காலநிலையையும், அதன் சங்கடங்களையும், குற்றங்களையும் தெரிந்துகொள்ள முயன்றிருக்கிறேன். இவ்வேழுவருஷங்களில் உங்களுடன் நான் இருந்தமாதிரியால், என்னுடைய மனோபாவங்களெல்லாம் ஹிந்துவினுடையதாகவேயுள்ளனவென்னும் நம்பிக்கை உங்களுக்கு உண்டாயிருக்குமென்றுவது எண்ணுவதற்கு இடமுண்டென்று நினைக்கிறேன். இனி நான் சொல்லப்போகும் விஷயங்களில் ஏதேனும் நீங்கள் இணங்காதவைகளும் இருக்கலாம். ஆனால், இந்த விஷயங்களில் ஒற்றுமையும் ஏகபாவமும் நிகழ்வது துர்லபம். அப்படியிருக்குமாயின், இந்தியாவின் க்ஷேமத்தை உத்தேசித்தும், இத்தேசத்தில் எனக்கிருக்கும் அன்பின்மிகுதியைக் கருதியும், நல்லெண்ணத்துடன் நான் சொல்லுகிறேனென்று நீங்கள் நம்புமாறு வேண்டுகிறேன். ஏதேனுந் தவறான அபிப்பிராயங்களை நான் வசனிப்பேனாயின், அவைகள் அறியாமையால் நேர்ந்திருக்குமேயல்லது, மனசுடனே வேண்டுமென்று சொன்னேனென்று நினைக்க ஒண்ணாது. உங்களுக்கு வியஸனத்தையும் வெட்கத்தையும் விளக்கக்கூடிய சில பிரத்யக்ஷவிஷயங்களைப்பற்றி நான் வெளிப்படையாய்ப் பிரஸ்தாபித்தால், அது, அவற்றின் விமோசனார்த்தமான வழியை நாடவேண்டுமென்று வற்புறுத்துவதற்கேயாம்; அக்குற்றங்களைத் தெரிந்து அவற்றை நிவர்த்திசெய்து தெய்வங்கள் ஆசீர்வதிக்கக்கூடிய சிரேயஸ்கரமான மார்க்கத்தை நாடவும், இந்தியதேசம் மேன்மையான சம்பத்தைப் பெற

*

வும், இந்தியர் உலகத்தாருள்ளும் உயர்நிலையை அடைந்து, உலகத்தார்க்கு ஞானசாரியர் என்ற சிறந்தபதவியை வகிக்க யோக்கியதை பெறவும்வேண்டும் என்பதற்கேயாம்.

இவ்விஷயங்களைப்பற்றிச் சொல்லப்போவதால், அடியிற் கண்டமுறையை அநுசரிக்க உத்தேசிக்கிறேன். முதலில், பிராசீனதர்மம் இன்னபடியிருந்தது என்று என்னாற் கூடியவரை விவரிப்பேன். ஆனல், தேவர்களுக்குத் தோன்றியவிதமாகவும், மஹாருஷிகள் மனோபாவத்தில் உதயமாகி, அவர்கள் உலகத்தார்க்கு வெளியிடும் விதமாகவும் அவ்வுயர்வான தெய்விகம்பொருந்திய தர்மத்தை உள்ளபடியே விரிவாக வெளியிட மனுஷநாவினுல் முடியாது. ஆயினும், அத்தர்மத்தின்அழகை நீங்கள்அறியும்படியும், அது இந்தியாவுக்கும் பொதுவாய் உலகத்தார்க்கும் எவ்வளவு பிரயோஜன முள்ளதாக இருக்கிறதென்பதை மதிக்கும்படியும் நான் அதைப்பற்றிப் பேசலாமென்றுநினைக்கிறேன். இந்த ஒருதேசத்தில் மாத்திரம் அத்தர்மஉபதேசம் எற்படினும், இதற்குமாத்திரமன்று, உலகமுழுமைக்கும் அது எற்பட்டுள்ளது; அது இந்தியாமூலமாகப்பரவினுலன்றி வேறுவழியாக உலகத்திற் பரவல் இயலாது. அத்தகைய பிராசீனதர்ம முறைகளை ஆதிருஷிகள் உங்களிடந்தான் ஒப்பிவைத்தார்கள். தற்காலகதிக்கிணங்க, இந்தியாவில் ஏதேனும் மாறுதல்அவசியம் நிகழ்வதாக இருப்பினும், இந்த உயர்வான தர்மங்கள் மங்கவாவது குறையவாவது கூடா. அவற்றின் ஆதிநிலை பூர்ணமான தெய்வத்தன்மை குன்றுமல் இருக்கக் கடவது. அவைகளின் பரஸ்பரநேர்மையும், பரிசுத்தமானவியல்பும் இருந்தே தீரவேண்டும். இக்காலத்திற் செய்ய வேண்டுமென்ற மாறுதல்கள் எல்லாம், அந்த ஆதிதர்மங்களை, முன்போல, அநுஷ்டான பூர்வமாக விளைவிப்பதுதான். இக்காலத்தியக்ஷணிகசுபாவமுள்ள மனோபாவங்களுக்கும், வழக்கங்களுக்குந் தக்கவாறு, அந்த தர்மங்களை மாற்றவுந் தாழ்த்தவும் ஒண்ணுது. இனிச் சொல்லப்புகும் ஒவ்வொரு சங்கதியிலும், முதலில் அதன் பிராசீனமுறை எவ்விதமிருந்தது என்பதைக் காட்டமுயலுவேன். பின்னர், தற்காலத்தில் அம்முறை எவ்விதமாக பாறிச்சீர்குலைந்து கெட்டுப்போயிருக்கிறதென்பதையும் எடுத்துக் காட்டு

வேன். முன்னதுடன் பின்னதானஇக்கால வழக்கங்களை ஒப்பிட்டு ப்பார்க்கும்போது, இந்திய தேசாபிமானி ஒவ்வொருவனும் முற்றும் மனநொந்து கண்ணீருங் கம்பலையுமாயிருக்கும்படி செய்யக்கூடிய அவ்வளவு கொடுமையுடையனவாகவும், தாழ்மையுடையனவாகவும், உயர்வான ஆதிமுறைகள் தடுமாறிப்போயிருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியவரும். இந்திய தேசத்துக்குத் தெய்வபலம் எப்போதுமுள்ளது என்ற நம்பிக்கை நமக்கு இல்லாமற்போகுமேயானுல், இந்தியாவிற்கு இனி விமோசனம் இல்லையென்றும், இந்த துர்க்கதிப்பிரவாகத்தினின்றும் அதைக்கரையேற்றுவது இயலாதென்றும் சொல்லக்கூடும். நாமும் இவ்விதமனோபாவத்தாற் சோர்வையடைந்து களைப்புமடைவோம். ஆனுல், இத்துன்பங்களை ஜயித்துக்கீழ்ப்படுத்தும்படியான தெய்வபலம் பூர்த்தியாயிருக்கிறதென்ற நம்பிக்கை நமக்கு இருக்கின்றமையால், சரியானமார்க்கத்தில் இன்றியமையாத சீர்திருத்தங்களை உண்டுபண்ணவும், அவசியமாயின், தேசநன்மைக்காகத் தங்களுடைய உயிரையே தியாகஞ்செய்யவுங்கூடியதீரர்கள் இந்தியாவில் இனிக் கிளம்புவார்கள் என்று என்போலியசிலர் நம்ப இடமுண்டு. அவர்களால் இந்தியாவிற்கு விமோசனகாலம் எப்போதுவருமென்று எண்ணிக்கொண்டிருக்குங்கனுவெல்லாம் இனிச்சம்பவிக்குமென்றுநம்பத்தைரியமுண்டாயிருக்கின்றது. நான்செய்யப்போகின்ற ஒவ்வோர் உபந்நியாசத்திலும் உயர்வான தர்மமின்னதென்றும், அது தற்காலம் இவ்விதம் குறைவுற்றிருக்கிறதென்றும் எடுத்துக்காட்டியபிறகு, எவ்விதமான சீர்திருத்தங்களைக் கைக்கொண்டு நடந்தால் இந்தியா பிருகிருத நிலையைவிட்டுத் தன் சுதந்தரமான உயர்பதவியைப் பெறுமோ—இனி உலகத்தில் ஜனவிகாஸ முறையில் உலகிற்கே ஞானகுருவின் ஸ்தானத்தை வகிக்கக்கூடுமோ, அத்தகைய சீர்திருத்தங்களைப்பற்றித்தெரிவிப்பேன். இந்த விஷயங்களைப் பற்றித்தான் இந்த வியாசங்களில் விசாரிக்கப்போகிறேம். அவைகள் உங்களுக்கு சம்மதமாக இருக்கும்படியாகவும், அவற்றை உங்கள் அநுஷ்டானத்திற் கொண்டுவர உங்களைத் தூண்டவும் நான் முயல்வேன். இம்முதல் உபந்நியாசமானது பின்வருவனவற்றிற்கு முகவுரையாகவிருக்கும். இதில் உலகவியல்பும் அதன் கதியும் இவ்வண்ணமென்று சொல்லவேண்டியிருக்

தலால் அது சிறிது விரிவாகத் தோன்றும். அவ்விரிவினால் நீங்கள் கேட்க சிரமப்படுவீர்களென்று மதிக்கிறேன். நாம் எண்ணியிருக்கும் உயர்வான முடிவு இன்னதென்று வெளியிட்டாலொழிய, அதை நோக்கிய முறைவிவரங்கள் உங்களுக்குப் புலப்படா. உத்தேசத்துக்கும் அதற்குரிய பிரேரணைகளுக்குமுள்ள நேர்மை உங்கள் மனசுக்கு வாராது. வழி நேர் அல்லது நேரன்று என்ற விஷயம், கதியின்முடிவு தெரிந்தாலொழியச் சொல்ல இயலாது. அந்த முடிவு நீங்கள் இதுவரையிற் கண்ட கனவின் திறத்திற்கு மேற்பட்டதாகும்.

(தொடரும்.)

ஸ்ரீ:

நன்னூற் குறிப்பு.

(௨௯௬-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, முதலெழுத் திவ்விரண்டென்பவற்றுள், (ய-ர) (ல-வ) (ழ-ள) என்பன தனித்தனி அவ்வவ்விரண்டெழுத்துக்கள் மாத்திரம் தானே முதலியவற்றுள் ஒன்றானும் தம்முளொப்புமை இன்மையால் அவை இவ்விரண்டோரினமாகாமையும் கண்டு கொள்க.

(௯௧) இசைகெடின்..................................குறியே.

(குறிப்பு) இசைகெடின்—தானில்லையாமிடத்து ஓசைகெடுமாயின்: இசைகெடாமைப் பொருட்டென்பது கருத்து. இசைகெடின் எனப்பொதுப்படக் கூறினமையால் இவ்வளபெடை, சொல்லிசை கெடாமையும், இன்னிசை கெடாமையும், செய்யுளிசை கெடாமையும்நிமித்தமாக, முறையேசொல்லிசையளபெடையும், இன்னிசை யளபெடையும், செய்யுளிசை யளபெடையும் என மூவகைப்படும். அவை முறையே சொல்லிசையாகிய அளபெடை, இன்னிசையாகிய அளபெடை, செய்யுளிசையாகிய அளபெடை என விரியும். சொல்லிசை யளபெடைக்கு உதாரணம்—நசைஇ, செய்யூஉ,

குரீஇ, ஆடூஉ முதலியனவாம். இவற்றுள் ஒவ்வொரு சொல்லினு முள்ள எழுத்தோசையே அவ்வச்சொற்குரிய இசையாம். நசைஇ என்னும் சொல்லுக்கு நகர வுயிர்மெய்யும், சகர ஐகார அளபெடை யும் இசையாம். செய்யூஉ என்பதற்குச் செகரமும், யகரமெய்யும், யகர ஊகார அளபெடையும் இசையாம். இவ்வாறே பிறவற்றிற் குங் கண்டு கொள்க. இவற்றுள் அவ்வச் சொல்லின்கண்ணுள்ள அளபெடையும் அவ்வச்சொல்லோசையாதலால், அவை சொல்லி சையளபெடை யெனப்பட்டன. இவ்வா றன்றி நசை என்னும் பெயர்ச்சொல் வினையெச்சமாதற்பொருட்டு அளபெழுந்ததாயின், ஆடு என்னும் அஃறிணைப்பெயரும் உயர்திணைப்பெயராதற் பொ ருட்டு ஆடூஉ என நீண்டு அளபெழுந்ததெனக்கொள்ளல் வேண்டும்.

இனி, இன்னிசையளபெடைக்குதாரணம்—"கெடுப்பதூஉங் கெட்டார்க்குச்சார்பாய்மற்றாங்கே, யெடுப்பதூஉமெல்லாமழை" என்பதனுட் கெடுப்பதூஉம் எடுப்பதூஉம், என்பனவாம். இவற் றுள்சொல்லிசை-கெடுப்பதும், எடுப்பதும் என்பதனளவுமேயுள்ள எழுத்தொலிகளாம். அவ்வெழுத்தொலிகளே இங்கு அச்சொற்களிற் செய்யுளிசையாயும் அமைதலால் அவ்வெழுத்தொலிகளின் மிக்கொ லிக்கும் அளபெடையொலி இங்குச் சொல்லிசையும், செய்யுளிசையு மாகாது, இனிய ஓசையாயமைதலால் அவை யின்னிசையளபெடை யாயின. செய்யுளோசை சீர்தளைசிதையாத அளவும் வேண்டப் படும் எழுத்தொலி. அது, முற்காட்டிய செய்யுளில் "கெடுப்பதுங் கெட்டார்க்குச் சார்பாய்மற் றாங்கே, யெடுப்பது மெல்லா மழை" என்பதனளவேயாம். சீர்தளை சிதையாமைப் பொருட்டு வந்த அள பெடை செய்யுளிசையளபெடை யெனவறிக.

(௧௨௯) எழுத்தேதனித்தும் .... மேன்ப.

(குறிப்பு) பதம்.—இக்குறியீடு வடமொழிக்கண்ணு முள்ள தாயினும் அதன்கண் வழங்கும் பொருளளவில் நில்லாது, பகுதி, விகுதி, இடைநிலை, எச்சம் முதலியவற்றையும் பொருளாகக் கொள் ளுதலால் இங்குத்தனியே இஃதிடுகுறியாக்கமாயிற்று. வடமொழி யில் வேற்றுமையுருபையேனும் வினைமுற்றுருபையேனும் ஈற்றிற் பெற்றியல்வதும், சில விகுதிநோக்கி நிற்பதும் பதமென வழங்கப்

படுவதன்றிப் பகுதி விகுதி இடைநிலை எச்சம் முதலியனவும் பதமென வழங்கப்படாவெனவறிக. இதனால் இப்பெயரை இவ்வியலுட் பலவிடத்தெடுத்தாளுதல் தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தலென்னு முத்தியாயிற்று.

(௧௩௫) செம்மை சிறுமை .... பதமே.

(குறிப்பு) இச்சூத்திரத்திலுள்ள செம்மை நேர்மைப்பொருளுணர்த்துவது. அதற்கெதிர் கொடுமை. உதாரணம்—செங்கோல், செந்நெறி, செந்தமிழ் முதலியனவும்: கொடுமரம், கொடுங்கோல், கொடுந்தமிழ் முதலியனவுமாம். நிறப்பண்பாகிய செம்மைக்கு, கருமை வெண்மை பசுமை முதலியவற்றுள் ஒவ்வொன்றும் அன்மைப் பொருளாகி வேறெனப்படுவதேயன்றி மறுதலைப்பொருளாகி எதிர் எனப்படாமையால் அந்நிறப்பண்புப்பகாப்பதங்களையும் இன்னவுமென்றதனாலமைத்துக் கொள்க. செம்மை தொடங்கி யெண்ணிய சிறுமை முதலிய மற்றைப்பண்புகளுக்கும் அன்மைப்பொருள் எதிராகாது மறுதலைப்பொருளே எதிராயமைதல்கண்டுகொள்க,

(௧௪௫) றவ்வொடுகர..................................மீங்கே.

(குறிப்பு) முற்றென்றாயினும், எச்சமென்றாயினும் விதவாது பொதுப்படச் 'செய்புநிகழ்பெதிர்வு' மென்றமையால், அவ்விரண்டு வாய்பாட்டு வினைச்சொற்களும் தனித்தனி அவ்விரண்டு காலத்தை யுமுணர்த்துமென்பது பெறப்பட்டது. செய்புமென்னும் பெயரெச்சம் எதிர்காலமொன்றையே யுணர்த்தவேண்டுமென்னும் நியமமில்லையென்பது மேற் பெயரெச்சச்சூத்திரவுரையில் விளங்கும்.

(௧௪௭) ஏழா முயிரிய்யும் ....றிகரமும்.

(குறிப்பு) மூன்றேயகவு மென்றது ஹகாரம் யகரமாகவும் சுகரமாகவும் திரியுமென்றவாறு. யகரமாய்த் திரிதற்குதாரணம் மஹிஷ:—மயிடம். குஹ்ய:—குய்யம். ஸஹ்ய:—சய்யம். ஸ்நேஹஃ நேயம். அஹிம்ஸா—அயிஞ்சை. சாஹித்யம்—சாயித்தியம் என்றற் றொடக்கத்தனவாம். ஹரி, ஹரம், ஹித: என்பவற்றின் முதலிலுள்ள ஹகாரம் ஸ்தலம், ஸ்ரீயாமளா, என்பவற்றின் முதலிலுள்ள மெய்போற் கெடுமென் வறிக.

(௧௫௰) றனழ எ ஒவ்வு முயிர்மெய்யு முயிரள
பல்லாச் சார்புந் தமிழ்பிற பொதுவே.

(இதன் பொருள்) றனழ எ ஒவ்வும்—றகர னகர ழகர மெய்யும், எகர ஒகர வுயிர்களுமாகிய ஐந்து முதலெழுத்துக்களும்: உயிர்மெய்யும்—இவற்றினுயிர் மெய்யெழுத்துக்களும்: உயிரள பல்லாச் சார்பும்—உயிரள பெடையொழிந்த சார்பெழுத்துக்களும்: தமிழ்—தமிழ்ச்சிறப்பெழுத்துக்களாம். பிற—மற்றைத் தமிழெழுத்துக்கள்: பொது—தமிழுக்கும் ஆரியத்துக்கும் பொதுவெழுத்துக்களாம். (என்றவாறு)

(குறிப்பு) இச்சூத்திரத்துள் உயிர்மெய் யென்பதற்கு உயிர்மெய்யெழுத்து இருநூற்றுப் பதினாறும் பொருளாகக் கொள்ளாது, ற ன ழ எ ஒக்களின் இயைபுடைய உயிர்மெய்களை மாத்திரம் பொருளாகக் கொள்ள நிமித்தமென்னை? எனின், உயிர்மெய் யிருநூற்றுப் பதினாறும் தமிழ்ச் சிறப்பெழுத்தென்பது ஆசிரியர்க்குக் கருத்தன்றென்பதனை, உயிரளபல்லாச்சார்புமெனக் கூறி யொழியாது, உயிர் மெய்யுமென வேறுபிரித்துக் கூறினமையே நன்கு விளக்குகின்றது. ஆதலால் உயிர்மெய் யென்றதற்கு முற் சுட்டிய ற ன ழ எ ஒக்களின் உயிர்மெய்யெனப் பொருளுரைக்கப் பட்டது.

இதனால், உயிர்மெய் யெழுத்துக்கள், றகர னகர ழகர வரியுள் மூன்று—|—பன்னிரண்டு—முப்பத்தாறும், மற்றை எகர ஒகரங்களேறிய உயிர்மெய் இரண்டு—|—பதினைந்து முப்பதும்—|—ஆகிய அறுபத்தாறு உயிர்மெய்யெழுத்துக்களும் தமிழ்ச் சிறப்பெழுத்துக்கள் என்பதும் ஒழிந்த உயிர்மெய்யெழுத்துக்கள் நூற்றைம்பதும் பொது வெழுத்தென்பதும் பெறப்பட்டன.

(உ௬உ) நெல்லுஞ் ....மாகும்.

(குறிப்பு) கொல்—கருந்தாது செந்தாதுக்களின் பொதுப் பெயர். உதாரணம்—கொற் கடிது, பொன் கடிதென்பது பொருள்.

(தொடரும்)

திரு. நாராயணையங்கார்.

புத்தகக் குறிப்பு.

விவசாயதீபிகை :—இப்பெயர்வாய்ந்த மாதப்பத்திரத்தின் முதன் மூன்று பகுதிகள் கிடைக்கப் பெற்றோம். இப்பத்திரிகை நம் நாட்டுக்குடிகள் விவசாய முறையிற் சீர்திருந்திப் பெரும்பயனடைதற்குச் சிறந்த ஞாபகக்கருவியாகவுள்ளது. விவசாயச் சீர்திருத்தம் பெற்றுவரும் மேனாட்டாரைப் போலாது, பண்டைக் காலத்து மாதிரிகையையே பின்பற்றி யொழுகி வரும் நம்மவர்க்கு, இப்பத்திரம், நல்லறிவூட்டி நாளடைவில் உயர்வளிக்குமென்பது திண்ணம். நமது காருண்ய இராஜாங்கத்தார் விவசாயவிருத்தியைக்கருதி ஆங்காங்குச் சோதனைப்பண்ணைகள் முதலியவை ஸ்தாபித்து நாட்டுக்குடிகளது க்ஷேமத்தைநாடி முயன்றுவரும் இக்காலத்தே, அதற்கநுகுணமாக, அவ்விவசாய விஷயங்களை வெளியிடற் கென்றே இவ்வாறு ஒருபத்திரிகையுந் தோன்றியது ஒருநற்குறியாகவே தெரிகின்றது. இப்பத்திரிகைக்கு விவசாயத் துறையிற் சிறந்த அறிஞர்கள்பலர் அரியபலவிஷயங்கள் இனியநடையில்எழுதியுள்ளார்கள். இதனை நம் சென்னை இராசாங்கத்தாரும் மதித்து ஆதரிப்பதாக உறுதிதந்திருக்கிறார்கள் என்று கேட்கப் பெரிதும் மகிழ்கின்றோம். இத்தகைய சிறந்த உலோகோபகாரத்தைச்செய்ய முன்வந்த அதன் பத்திராதிபர்க்குத் தமிழ்நாடு என்றும் நன்றிகூறுங் கடப்பாடுடையது. சொற்ப சந்தாவுக்கு அனுப்பப்பெறும் இப்பத்திரிகையை நம் நாட்டாரெல்லாம் பெற்றுப் படித்து, அதனைத்தொடங்கி நடாத்தும் பத்திராதிபரை மேலும் ஊக்கிப் பெரும்பயனடைவார்களாக. பத்திராதிபரது விலாசம்—ஸ்ரீமத். என். வானமாமலைப்பிள்ளையவர்கள், "விவசாய தீபிகை" ப்பத்திராதிபர், சைதாபேட்டை, சென்னை. சந்தா ரூ 1—8—0.——பத்திராசிரியர்.

ஸ்ரீ:

கடவுள் துணை.

விளம்பிநாகனார்

அருளிச்செய்த

நான்மணிக்கடிகை

மூலமும் உரையும்.

க மதிமன்னு மாயவன் வாண்முக மொக்குங்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கு
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளி
னெதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமல ரொக்கு நிறம்.

இதன்பொருள்; மதி மாயவனது ஒளிமுகம் ஒக்கும்; ஒளிசிறந்த ஞாயிறு அவனது சக்கரமொக்கும்; முதுநீர்ப் பழனத்துத் தாமரைத்தாளின்கட் செவ்விமலரை மற்றவன் கண்ணொக்கும்; நிறம் காயாவின் புதுமலரை ஒக்கும்; என்றவாறு.

உ படியை *மடியகத் திட்டா னடியினான்
முக்காற் கடந்தான் முழுநில—மக்காலத்
தாப்பனித்† தாங்கிய குன்றெடுத்தான் சோவி
னருமை யழித்த மகன்.

இ-ள்; உலகத்தைத் தன்வயிற்றின்கண் வைத்தானும், எல்லாவுலகையும் தன்சேவடியான் மும்முறையாற் கடந்தானும், முற்காலத்து ஆநி

* 'மடியகத் திட்டாண் மகவை' என்னுங் களத்திறமுரைத்தகாதைக் கண், மடி-வயிறென்பதற்கு இதனையே எடுத்துக்காட்டினார் அடியார்க்குநல்லார்.

† 'தானிரை' எனவும் பாடம்.

ரையைத் துயர்கெடுக்கவேண்டி மலையையெடுத்தானும், சோவென்னும் *குறும்பினருமையை அழித்தமகனும் முன்சொல்லிய மாயவன்;எ-று.

இவை யிரண்டும் கடவுள்வாழ்த்து.

நூல்.

ங. எள்ளற்க வென்று மெளியரென் றென்பெறினுங்
கொள்ளற்க கொள்ளார்கை †மேற்பட—வுள்சுடினுஞ்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

இ-ள்; எளியரென்று ஒருவரையும் என்றும் இகழாதொழிக; எல்லாம்பெறினும் தான் சென்று கொள்ளத்தகாதார் கை மேற்படக் கொள்ளா தொழிக; சிற்றிற் பிறந்தார் செய்த பிழை தன்னுள்ளத்தைச் சுடுகின்றதாயினும் அவரை வெகுளாதொழிக; தனக்குத் தகுதியில்லாத சொற்களை ஆராயாது விரைந்து கூறாதொழிக; எ-று. (க)

கொள்ளாரென்றது பகைவரென்றுமாம்.

ச பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழா ‡ரூரவோர்—நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு.

இ-ள்; பறையொலித்தால் உயிர்வாழா அசுணமா¶; மனங் குறைபட உயிர் வாழார் அறிவுடையார்; மிக்க காட்டின்கண் உள்ள மூங்கில்கள் நெற்பட்டபொழுதே சாம்; அவைபோல, ஒருவன் தனக்குத் தகாத பழிச்சொற்கள் படவரிற் சாவது சால்பாவது; எ-று. (உ)

---

*குறும்பு - அரண். சோவரணம் - அசுரர் நகரம்: என்ப.

† 'மேல்வர'

‡ 'உரவோரெனினு மடவோரெனினும்' என்றார் பதிற்றுப்பத்தினும் (அ-ங). உரம்-அறிவு 'உரமொருவற் குள்ள வெறுக்கை' என்னுந்திருக்குறளா னுணர்க.

¶ அசுணம் இசையறிவதோர் விலங்கு(சிந்தாமணியுரை-பதுமை-உ௩எ) ஒருவன் முதற்கண் யாழிசையைக் கேட்பித்து, இஃது அவ்விசையின் பத்தே யின்புற்றுமூழ்கியவளவில் வலியதோர் பறையை ஒலிக்க, அதன்

௫ மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் *கெட்டறிப
கேளிரா னாய பயன்.

இ-ள்; மணியினது நன்மையைக் கழுவி அறிவர்; பண்ணினை யமைத்து எறியபின்னர் அறிவர் மாவினது நன்மையை; குற்றம் அறுபடச் சுட்டறிவர் பொன்னினன்மையைக் காண்பார்: அதுபோலத் தாங்கள் கெட்டால் அறிவர் கேளிரானாய பயன்; எ-று. (௫)

௬ கள்ளி வயிற்றி னகிற்பிறக்கு மான்வயிற்றி
னொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
†நல்லாள் பிறக்குங் குடி.

இ-ள்; கள்ளியின் வயிற்றின் அகில் தோன்றும்; மானின்வயிற்றின் ஒள்ளிய அரிதாரம் தோன்றும்; பெருங்கடலுட் பலபொருள்களையும் விலை

வல்லோசையைக் கேட்கலாற்றாது இவ்விலங்கினரியவுயிர் விட்டு நீங்கும் என்ப. இதனை 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை யருளா, தறைகொன்று மற்றத னாருயி ரெஞ்சப், பறையறைந் தாங்கு' என்னும்நெய்தற்கலியானும், (௨௬) அதற்கு **நச்சினார்க்கினியர்** 'வஞ்சனையாலே தான் வாசித்த யாழிசையைக் கேட்ட அசுணமாவை இவ்வின்ப முற்றதென்று அருள்பண்ணாதே, முன்புசெய்த வஞ்சனையைக் கெடுத்துப் பின்னை அதனரியஉயிர் போம்படி பறையைத் தட்டினாற்போல' எனக் கூறிய உரையானும் அறிக. 'யாழ்நறையடுத்த வசுணநன்மாச்செவி பறையடுத்ததுபோலும்'(இராமாவதாரம்-அயோத்தியா... யட்க்கம்)என்பதூஉம் இதுபற்றி வந்தது.'இருஞ்சிறைத்தொழுதி யார்ப்ப யா**ழ்செத், திநங்கல் விடரளை யசுண மோர்க்கும்**' என்றுஅகப்பாட்டினும் (௮௮) வருதல் காண்க. 'அசுணங் கொல்பவர் கைபோ னன்று, மின்பமுந் துன்பமுமுடைத்தே' என்பது **நற்றிணை** (௩௦௪) இன்பம்யாழிசைத்தலாலும் துன்பம் பறையொலிப்பித்தலாலுங் கொள்க. "அச்சப்பொருளாவன 'வள்ளெயிற் றரிமா வாள்வரி வேங்கை, முள்ளெயிற் றரவே முழங்கழற் செந்தீ, யீற்று மகண்மா வேக பாதங், கூற்றங் கோண்மா **துன்றுறை யசுணம்**' என்று சொல்லப் பட்டாற் போல்வன" என மெய்ப்பாட்டியலுரையிற்(௧) காணப்படுதலால் இது தீங்கிழைக்கும் வலியுடையதென்றும், அதுபற்றி அஞ்சத்தக்கதென்றும், மலையின்கண் உறைவதென்றும் விளங்கிக்கொள்க. பிங்கலநூலார் இவ்வசுணத்தை 'அசுணமா விசையறி பறவை கேகயப்புள்' என்பதனாற் பறவையெனக் கூறுகின்றார். 'மறையிற்றன் யாழ்கேட்ட மானை' என வழங்கிய சான்றோர்க்கு இதனைப் புள் எனல் கருத்தில்லைப் போலும்!

* 'கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை, நீட்டி யளப்பதோர் கோல்' என்னுந் திருக்குறளை நோக்குக.

† 'நல்லாளிலாதகுடி' என்னுந்திருக்குறளுரையையும் (௧௦௫௦)நோக்குக.

யாகப்பெறும் முத்தங்கள் தோன்றும்; அவைபோல, அறிவார்யார் நல்லறிவினை உடையானொருமகன் பிறக்குங்குடியினை? எ-று. (௪)

௭ கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
சொல்லிற் பிறக்கு முயர்மத—மெல்லெ
னருளிற் பிறக்கு மறநெறி* யெல்லாம்
பொருளிற் பிறந்து விடும்†.

இ-ள்; மலையின்கட் பிறக்கும் ஒளியையுடைய மணி; மகளிரது மெல்லிய சொல்லின்கட் பிறக்கும் தன்மனத்தின்கட் களிப்பு; மெல்லென்ற அருளின்கட் பிறக்கும் நல்ல அறநெறிகள்; அவ்வற முதலாயின எல்லாம் பொருளின்கட் பிறக்கும்; எ-று. (௫)

௮ திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
வறனொக்கு மாற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

இ-ள்; தான் பிறந்த குலத்திற்குத் தீது வாராமல் ஒழுகுமொழுக்கம் செல்வத்தோடொக்கும்; மிக்க அறஞ்செய்கையோடு ஒக்கும் நெறியின்கணின்று ஒழுகுமொழுக்கம்; பிறனொருவனைத் தனக்கு நட்பாகக்கொண்டுவைத்துப் பின்பு அவன்மாட்டுக் கண்மாறுதல் அவனைக்கொன்றதனோடு ஒக்கும்; தன்னை விரும்பாதார்மாட்டு அவராலாகும் பயன்கருதிச் சேறல் புலையோடு ஒக்கும்; எ-று. (௬)

௯ கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
‡செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லைத் துயில்.

இ-ள்; களவுகாணுதும் என்று சோர்வுபார்ப்பார்க்குந் துயிலில்லை; தன்னாற் காதலிக்கப்பட்டாளொருத்திமாட்டுத் தம்முள்ளம் வைப்பார்க்கும் அவளைக் கூடுமட்டுந் துயிலில்லை; ஒள்ளிய பொருளைத் தேடுவமென்பார்க்

* 'அறனு மருளுடையான் கண்ணதே யாகும்' என்பது சிறுபஞ்சமூலம்.
† 'பொருளானா மெல்லாம்' என்பது திருக்குறள்-௭௫௨.
‡ 'சேர்ப்பாமென்'

கும் அப்பொருள் கூடுமளவுந் துயிலில்லை; அக்கூடிய பொருளைப் பிறர் கொள்ளாமற் காப்பார்க்குந் துயிலில்லை; எ-று. (எ)

கo கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தோன்
றுற்றார்முற் றோன்றா வுறாமுத—றெற்றென
வல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

இ-ள்; கற்றார்மாட்டுக் கழிந்த பொருட்கு இரக்கந்* தோன்றா; அன்பு பட்ட பொருளைப் பெறுவதற்கு முயல்வார் அவர்மாட்டு அவ்வன்பு பட்டன தமக்கெய்தாமைக் காரணந் தோன்றா; தெளியப் பாவமுள்ளவாம் வினைகளைப்பயின்று பழகி வந்தார்க்கு அறவினைதோன்றா; வெகுண்டார்க்கு எல்லா நன்மைகளுந் தோன்றா; எ-று.

உறாமுத லென்பதனை 'உறுமது' என்றும் 'உசாவுதல்' என்றும் பாடம் ஓதுவாருமுளர். (அ)

கக நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்புங்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி
தான்செல் லுலகத் தறம்.

இ-ள்; நிலத்துக்கு அழகென்று சொல்லுவர் நெல்லையும் கரும்பையும்; குளத்துக்கு அழகென்று சொல்லுவர் தாமரைப்பூவை; அவைபோல, பெண்டிரழகிற்கு அழகாவது நாணுடைமை; ஒருவன்தனக்கழகாவது தான்செல்லும் உலகிற்குத் துணையாகச் செய்யப்பட்ட அறம்; எ-று. (கூ)

க௨ கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத்தி னாற்பிணிப்பர் மாநாகங்—கொந்தி†
யிரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

இ-ள்; தறியினிற் பிணிப்படுப்பர் யானையை; சினந்தணியும் வகை ‡மறை மொழியிற் பிணிப்படுப்பர் மாநாகத்தை; அவைபோல, கழறித்

---

* 'இரங்கல் கழிந்த பொருட்டு மாகும்' என்பது தொல்காப்பியம் (உரி சுக).

† கொந்துதல் - எரிதல்: 'கொந்தழல்' என்ப (சிந்-கேம-அஅ): ஈண்டுச் சுடச்சொல்லுதலின் மேற்று.

‡ 'மறைமொழி தானே மந்திர மென்ப' என்பது தொல்காப்பியம் (செய்-களகூ)

தளைமுதலாயினவற்றூற் பிணிப்படுப்பர் கீழ்மக்களை; இதத்தாற் பிணிப் படுக்க சான்றோரை; எ-று. (கo)

கங. கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியை நன்றாக் கொளல்வேண்டு—மென்றும்
விடல்வேண்டுந் தன்கண் வெகுளி யடல்வேண்டு
மாக்கஞ் சிதைக்கும் வினை.

இ-ள்; பிறர் *அஞ்சத்தக்கவற்றின்கட் †டளம்பாதொழியவேண்டும்; தனக்குப்பிறர்செய்த நன்றியை மிகமனத்தின்கட் கொள்ளவேண்டும்; எஞ்ஞான்றுந் தன்மாட்டு வெகுளியை நீக்கவேண்டும்; தன் செல்வத்தைக்கேடு செய்யுஞ் செய்கையைக் கெடுக்கவேண்டும்; எ-று. (கச)

கச பல்லினு னேய்செய்யும் பாம்பெல்லாங் கொல்களிறு
கோட்டானேய் செய்யுங் குறித்தாரை யூடி
முகத்தானேய் செய்வர் மகளிர் முனிவர்
தவத்திற் றருக்குவர் நோய்.

இ-ள்; பல்லானே பிறரைத் துன்பஞ்செய்யும் பாம்பெல்லாம்; கொல்களிறுதான் கொலைகுறித்தாரைக் கோட்டானே துன்பஞ்செய்யும்; மகளிர் தங்காதலரைப் புலந்து முகத்தானே துன்பம் செய்வர்; அவைபோல, அருந் தவரும் தமது தவத்தானே தம்மையிகழ்ந்தார்க்குத் துன்பத்தை மிகுவிப் பர்‡; எ-று. (கஉ)

கரு பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரிற்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரிற்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

இ-ள்; வீக்குதலமையாத யாழோசையிற் பறையோசை நன்று; பெருமையில்லாத ஆடவரின் நிறையுடைமையினின்ற பெண்ணேநன்று; ஒழுக்

* கடி — அச்சம்.

† தளம்புதல் - மாணட்ஆழ்தல்.

‡ தருக்கும் செருக்கும் மிகுதியையுங்குறித்துவரும்; "மிகுதியான் மிக் கவை செய்தாரை" (திருக்குறள்-கரு௮), 'கவறுங் கழகமுங் கையுந் தருக்கி' (ஷ-கூ௩ரு) 'மிகுதியிறுவாய செல்வங்கள்' (நான்மணி-கக) என்பவற்றுரை களான் உய்த்துணர்க.

கமழ்ந்துண்டலிற் பசித்தலேநன்று; அன்புபட்டாரி னீங்குதலிற் றீயின்கட் புகுதலேநன்று; எ-று. (கங)

கச வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழா
மின்சொற் குழியி னினிதெழூஉம் வன்சொற்
கரவெழூஉங் கண்ணில் குழியி னிரவெழூஉ
மின்மைக் குழியின் விரைந்து.

இ-ள்; செல்வப்பாத்தியுள்ளே தோன்றி வளரும் ஈகை; இன்சொற் பாத்தியுள்ளே இடையூறின்றியே தோன்றிவளரும் தன் சுற்றக்குழாம்; கண்ணோட்டமில்லாத பாத்தியுட் கடுஞ்சொல்லும் கரத்தலும் தோன்றிவளரும்; வறுமைப் பாத்தியுட் டோன்றிவளரும் இரப்பு; எ-று. (கச)

கரு இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

இ-ள்; ஒருவன் தனக்குப் பொல்லாப்பு வேண்டின் இரப்பினைத் தொடங்குக; இவ்வுலகின்கண் என்றும் உளனாகவேண்டிற் புகழை நிறுத்துக; தன்னொடு மறுமைக்குத் துணையாகச் செல்வதனை வேண்டினனாயின் அறத்தைச் செய்க; வென்றியை வேண்டினனாயின் வெகுளியைத் தவிர்க; எ-று.

கசு கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமி
றவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

இ-ள்; கடலி னாழத்தை ஊடறுத்துச்செல்வர் நாவாயினை யுடையார்; சேனையி னருமையை வென்றுசெல்லும் பாய்மாவினையுடையவன்; குற்றமில்லாத தவத்தினருமையைத் தன்மனத்தினைத்தனக்கெனவுடையான் நீந்திக் கடக்கும்; அவையினதருமையைக் கற்றுவல்லவன் வென்று விடும்; எ-று. (கசு)

கஎ பொய்த்த லிறுவாய நட்புக்கண் மெய்த்தாக
மூத்த லிறுவாய்த் திளநலந்—தூக்கின்
மிகுதி யிறுவாய செல்வங்க டத்தந்
தகுதி யிறுவாய்த் துயிர்.

இ-ள்; வஞ்சித்தலை ஈறாகவுடையவாயிருக்கும் நட்புக்கள்; மெய்ம்மையாக மூத்தலைத் தனக்கிறுவாயாக வுடைத்து இளமைநலம்; ஆராய்தலையில்லாத செருக்கினை இறுவாயாகவுடையவா யிருக்கும் செல்வங்கள்; தம்முடைய ஒழுக்கங்களை இறுவாயாகவுடையது உயிர்வாழ்வு; எ-று. (கஎ)

உ0 மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல்—சினச்செவ்வே
லாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கங்
கேளி ரொரீஇ விடல்.

இ-ள்; ஒருவனது மனைக்குச் செல்வமாவது மாட்சிமையுடைய மகளிருளராதல்; ஒருவனது காரியத்துக்கு ஆக்கமாவது செப்பமுடையவனாதல்; நாட்டுக்கு ஆக்கமாவது அந்நாட்டை ஆளுஞ் சினச்செவ்வேலையுடைய வேந்தன் நல்லனென்று பிறராற் சொல்லப்படுதல்; ஒருவன் கேட்டுக்கு ஆக்கமாவது தன் சுற்றத்தாரை மேவாது நீங்கி விடுதல்; எ-று. (கஅ)

உக* பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா டானதிர்க்குங்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிர்க்கும்—பற்றிய
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்பிற்
பாட லதிர்ந்து விடும்.

இ-ள்; தன்கொழுநன் ஒழுக்கத்திற் கலங்கினானாயின் அவன் மனையாளும் அவன்வழியினளாகலான் அவளுங் கலங்கும்; கற்றான் கலங்குமாயின் அவன்கற்ற நூலுங்கலங்கும்; தன்னான் ஆளப்படுகின்ற நாடு நெறிநில்லாது கலங்குமாயின் அரசன் செங்கோலுங் கலங்கும்; யாழின்கண் வீக்கங் கலங்குமாயிற் பாடலுங் கலங்கும்; எ-று. (கக)

உஉ மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லுந்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
வவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

இ-ள்; தன்மனைக்குப் பாழாவது மனையாளை இல்லாமை; தான் செல்லக்கடவ திசைக்குப் பாழாவது தன்னொடு நட்புடையாரை இல்லாமை; தானிருந்த அவைக்குப் பாழாவது அறிவான் முதிர்ந்தாரை இல்லாமை; தனக்குப் பாழாவது கற்றுணர்வில்லாத வுடம்பு; எ-று. (உ0)

* பெற்றான்-கொழுநன்: "பெற்றாற் பிழையாத பெண்டிரும்" என்றார் 'மாநிலந் தோன்றாமை' என்னும் பரிபாடலினும்.

௫. குறிலிணை யுகர மல்வழி யான.

இது தனிக்குறிலானாகிய நேரசைப்பின்னும் இருவகை உகரம் வந்து நேர்பசையாதலை விலக்கினமையான் எய்தியதுவிலக்கியதூஉமாம். குற்றுகரங் குற்றெழுத்துப்போன்று அலகுபெறுமென்றமையின் எய்தாதது எய்துவித்து வழுவமைத்ததூஉமாம்.

இ-ள். குற்றெழுத்தோடிணைந்த குற்றியலுகரமும் முற்றியலுகரமும் அல்லாதவிடத்தே முற்கூறிய நேர்பசையாவன; எனவே குற்றெழுத்தோடிணைந்த குற்றியலுகரமும் முற்றியலுகரமும் வந்துழி நிரையசையாம். எ-று.

இனி, 'உடம்பொடுபுணர்த்தல்' என்பதனாற் குறிலிணையெனக் குற்றுகரத்தையும் குற்றெழுத்தென வேண்டினமைபெற்றாம். உ-ம்;—ஞாயிறு வலியது என ஓரசைப்பின்னர் வருகின்ற குறிற்பின்வந்தகுற்றுகரம் குற்றெழுத்துப்போன்று குறிலிணையுகரமாய் அலகுபெற்றதேனும் குற்றுகரமே யென்று இலக்கணமல்லதோர் வழுவமைத்தவாறு. இங்ஙனம் குற்றுகரம் எழுத்தளபெஞ்சுமெனவே, 'குற்றிய லுகர முறைப்பெயர் மருங்கி, னொற்றிய நகரமிசை நகரமொடு முதலும்' (எழுத்-மொழி-௩௪) என விதித்த நுந்தையென்னு முதற்கட் குற்றுகரம், எழுத்தளபெஞ்சிக் குற்றெழுத்துப்போன்று அலகுபெறுதலுங் கொள்க. கரு, மழு இவை முற்றுகரநிரையசையாம். (௫)

௬. இயலசை முதலிரண் *டேனைய வுரியசை.

இது முற்கூறிய அசையை இருகூறுசெய்து அவற்றிற்கு எய்தாதது எய்துவிக்கின்றது.

இ-ள். இயலசை முதலிரண்டு எ-து முதற்கண்ணின்ற நேரும் நிரையும் இயற்றிக்கொள்ளப்படாது இயற்கைவகையான் நின்றாங்குநின்று தளைத்தலின் இயலசை யென்றும்: ஏனைய வுரியசை எ-து ஒழிந்த இரண்டும் இயற்றிக்கொள்ளப்பட்டுந் தொழில்செய்தற்குரியவாதலின் உரியசையென்றும் பெயராம். எ-று. அங்ஙனம் இயற்றுதல் சீருட் காண்க. (௬)

௭. தனிக்குறின் முதலசை மொழிசிதைத் தாகாது.

இஃது எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வகுத்தது.

இ-ள். மொழி சிதைத்து எ-து பொருடந்து ஒற்றுமைப்பட்டு நிற்பதோர் சொல்லைப் பொருளைக்கெடுத்து: தனிக் குறில்-முதலெழுத்தைத் தனிக்குறிலாக்கின்: முதலசையாகாது எ-து அது நேரசையாகாது. எ-று.

---

* 'டேனை யுரியசை' எனவும் பிரதிபேதம்.

எனவே, பொருள்தந்து ஒற்றுமைப்பட்டுநில்லாது விட்டிசைத்து நின்றுழி நேரசையாம் என்றவாறாயிற்று. புளிமா என்றவழிப் புளியென்று ஒற்றுமைப்பட்டுநின்ற சொல்லைச் சிதைத்து முதல்நின்ற பகர உகரத்தை நேரசையாக அலகிடப்படாது. இனி விட்டிசைத்து நேரசையாங்கால் ஏவல், குறிப்பு, தற்சுட்டு, வினா, சுட்டு என *ஐந்து பொருளின்கண் விட்டிசைத்து நேரசையாம். உதாரணம்;—

'வெறிகமழ் தண்புறவின் வீங்கி யுகளு
மறிமுலை யுண்ணுமை வேண்டிப்—பறிமுன்கை
அ உ மறியா வறிவி லிடைமகனே
நொ அலைய னின்னாட் டை நீ'

என்பது ஏவல். அ உ என்பது அகரந்தன்னையே சுட்டுதலிற் றற்சுட்டு. 'அ ஆ விழந்தானென் றெண்ணப் படும்' (நாலடி-௯) என்பது அருட்குறிப்பு. அ அவனும், இ இவனும், உ உவனும் என்பது சுட்டு. எ எவன் என்பது வினா. 'உரையிற்கோடல்' என்பதனான் ஐந்திடத்தும் விட்டிசைத்தல் கொள்க; 'அ, இ, உ, எ, ஒ என்னுமப்பா லைந்தும்' (தொல்-எழுத். நான்-௩) எனவரும். இவை மொழிசிதைத்துத் தனிக்குறிலாய் நேரசையாயின வாறு காண்க. (எ)

அ. ஒற்றெழுத் தியற்றே குற்றிய லிகரம்.

இது குற்றியலிகரம் அல்குபெற்றும் அலகுபெறாதும்வருமென்கிறது.

இ-ள். குற்றியலிகரம் ஒற்றியற்று எழுத்தியற்றுஎ-து குற்றியலிகரமாவது ஒற்றியல்பினையுடைத்து: அதுவேயன்றி, எழுத்தியல்பினையும் உடைத்து. எ-று.

என்றது அலகுபெறாதவழி ஒற்றாம்: அலகுபெற்றவழி யெழுத்தாம் என்றவாறு. உ-ம்;—'குழலினி தியாழினி தென்ப' (திருக்குறள்-௬௬) என ஆசிரியத்தளையாயும் 'அருளல்லதியாதெனின்' (ஷை-உ௫௪) எனக் கலித்தளையாயும் வருதலிற் குற்றியலிகரம் அலகுபெறாது ஒற்றியற்றாயிற்று. "நினக்கி யாரோ மாகுது மென்று, வனப்பு நினக்கியா னுரைப்பக் கேண்மதி" என இக்குற்றியலிகரங்கள் அலகுபெறுதலின் எழுத்தியற்றாயிற்று.

---

* "இனி விட்டிசைக்கும் இடந்தான் மூன்றென்பது உரையிற்கொள்க. அவை 'அ ஆ விழந்தான்' எனக்குறிப்பின்கண் வருதலும், 'அ உ மறியா' எனச்சுட்டின்கண் வருதலும், 'நொ அலையல்' என ஏவற்கண் வருதலும் என விட்டிசைக்கும் இடந்தான் மூன்றெனப்பட்டது" என்பர் பேராசிரியர்.

இங்ஙனம் *சான்றோர் செய்யுள்வருதல் பெருவரவிற்று. ஒற்றினையும் எழுத்தென்று †ஒரோரிடத்துக்கூறினாரேனும், ஈண்டு ஒற்றுஎழுத்து எனக்கூறலின் ஒற்றல்லாவெழுத்தை யுணர்த்திற்று ‡. (அ)

கூ. முற்றிய லுகரமு மொழிசினை தத்துக்கொளாஅ
நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்.

இது குற்றியலுகரத்திற் கினமாகிய முற்றுகரத்திற்கு இலக்கணங் கூறுகின்றது.

இ-ள். முற்றிய........... கொளாஅ எ-து முற்றியலுகரமும் வருமொழியைச் சிதைத்துப் பிரித்து அவற்றினின்றும் வாங்கிக் கொடுக்கப்படா: எனவே நிலைமொழித்தொழிலாகிய உகரமும் நிலைமொழியீறு கெடநின்ற உகரமுமே கொள்க எ-று. நிற்ற...........மருங்கினும் எ-து அது தான் இடையினன்றி ஈற்றடி யிடத்திலும் இயலசையாய் நிற்றலின்று; எனவே உரியசையாயே நிற்கும். எ-று.

'நாணுடை யரிவை' (அகம்-நச) என்புழி வருமொழியின் உகரம் வந்தேறியது முற்றுகரமாகாதென்றுணர்க. இனி 'நாணுத்தளை யாக வைகி' 'இரவுத்துயின் மடிந்த தானை' (அகம்-உச) 'சுறவுக்கொடி' (சிந்-முத்-சகூ) 'விழவுத்தலைக்கொண்ட' (அகம்-கஎ) 'மின்னுநிமிர்ந்தன்ன' (நற்றிணை-டுக) இவை நிலைமொழித்தொழிலாகிய உகரம்பெற்றன. நீர்க்கு,நிழற்குஎனநின்ற நான்கனுருபு நிலைமொழித்தொழிலுகரமாம். உலவுகடல், விரவுகொடிஎனி

---

* 'மற்றியா னென்னுளேன் கொல்லோ' என்னுந் திருக்குறளினையும், (கசஂ0கூ) 'ஈசற் கியான்வைத்த வன்பி னகன்று' என்னுந் திருச்சிற்றம்பலக்கோவையினையும் (க0கூ) நோக்குக.

† 'உயிரில் லெழுத்து மெண்ணப் படாஅ' (செய்-சச) என ஒற்றினையும் எழுத்தென்றல் காண்க.

‡ பேராசிரியர், குற்றியலிகரம் ஒற்றியற்று யலகுபெறுமலே வரும் என்றுகூறி, யாப்பருங்கலவிருத்திகாரர் காட்டிய 'முந்தியாய் பெய்த வளைகழலும்' என்பன முதலிய உதாரணங்களைச் 'சான்றோர் செய்யுளல்லவென மறுக்க' எனவுரைப்பர்.

ன் அதுவாம். '*சுரும்புலவு நறுந்தொடையலள், கலனளவு நலனளவு 'இவை நிலைமொழியீற்று மகரங்கெட நின்ற உகரம் முற்றுகரமாயின. இனி 'இனத்துள்ள தாகு மறிவு' (திருக்குறள்-சுஙச) 'இன்னு தினியார்ப் பிரிவு' (ஃ-ககடுஅ) 'கருமமே கல்லார்கட் டீர்வு' 'பேரறிவாளர் துணிவு' 'பாடறியாதானை யிரவு' 'போற்று தார்முன்னர்ச்செலவு' (நான்மணி-கo) 'புன்கணுடைத்தாற் புணர்வு' (திருக்குறள்-ககடு௨) †'புனைமலர்த்தாரகலம் புல்லு' ‡'அஞ்சொன் மடவார்க்கருளு' 'கோலு' இவை யடியிறுதிக்கண் உரியசையாய் நின்ற வாறு காண்க.

'நிற்றலின்றே' என்றதற்கு ஈற்றடிக்கண் நிற்றலில்லையென்றுகூறின் அவை முடியாவாம். இவை அசைக்கும் ஓசைக்கும் உறுப்பாம். உகரமும் என்ற உம்மையாற் குற்றுகரமும் §'சேற்றுக்கானீலம்' எனப்பிரித்துக் கொடாமனின்றவாறும் 'எய்போற்கிடந்தானென்னேறு' (வெண்-வாகை-௨௨) என இறுதிக்கண் உரியசையாய் நின்றவாறுங்காண்க. நாகுண்டு என்பது குற்றுகரமாகாது. (கூ)

---

* "பேர்ந்து பேர்ந்து சார்ந்து சார்ந்து, தேர்ந்து தேர்ந்து மூசி நோர்ந்து, வண்டு சூழ விண்டு நீங்கி, நீர்வாய்க் கொண்ட நீல மூர்வா, யூதை வீச வூர வாய, மதியேர் நுண்டோ டொல்கி மாலை, நன்மணங் கமழும் பன்னல் லூர, வமையேர் வளைத்தோ ளம்பரி நெடுங்க, ணீணைப் ரோதி யேந்திள வன முலை, யிரும்பன் மலரிடை யெழுந்த மாவி, னறுந்தழை துயல்வருஞ் செறிந்தேந் தல்கு, லணிநகை நசைஇய வரியமர் சிலம்பின், மணிமருள் வார்குழல் வளரிளம் பிறைநுத, லொளிநிலவு வயங்கிழை யுருவுடை மகளிரொடு, நளி முழவு முழங்கிய வணிநிலவு மணிநக, ரிருந்தளவு மலரளவு சுரும்புலவு நறுந்தொடையலள், கலனளவு கலனளவு நலனளவு நலனளவு, பெருமணம் புணர்ந்தனை யென்பவஃ, தொருநீ மறைப்ப வொழிகுவ தன்றே." இது செய்யுளியலுரையில் 'இழைபு' என்பதற்கு உரையாசிரியர் எடுத்தோதிய பாட்டு.

† இனமலர்க் கோதா யிலங்குநீர்ச் சேர்ப்பன்
புனைமலர்த் தாரகலம் புல்லு.

‡ மஞ்சுசூழ் சோலை மலைநாட மூத்தாலு
மஞ்சொன் மடவாட் கருளு. இவை யாப்பருங்கலவிருத்தி மேற்கோள் (ருஅ).

§ சேற்றுக்கா னீலஞ் செருவென்ற வேந்தன்வேல்
கூற்றுறழ் மொய்ம்பிற் பகழி பொருகய
லேற்றந் தொழில்வடிவு தம்முட் டமொற்றம்
வேற்றுமை யின்றியே யொத்தன மாவேட
ராற்றுக்கா லாட்டியர் கண்—இஃது இன்னிசைப்பஃறொடைக்கு உரையாசிரியர் காட்டிய பாட்டு.

௧0. குற்றிய லுகரமு முற்றிய லுகரமு
மொற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

இது உரியசைகள் ஒற்றுப்பெற்று நிற்குமென எய்தாததெய்துவித்தது.

இ-ள். குற்றியலுகரமும் முற்றியலுகரமும்எ-து முற்கூறிய குற்றியலுகரமும் முற்றியலுகரமும். ஒற்றொடு..........பெறுமே எ-து வருமொழி வல்லெழுத்துவரும்வழி வல்லொற்றோடு தோன்றி நிற்கவும் பெறும் எ-று.

உதாரணம்;—'சேற்றுக்கானீலம்' 'நாணுத்தளையாகவைகி' 'நெருப்புச்சினந்தணிந்த' 'கனவுக்கொனீ கண்டது' என இருவகை உகரமும் ஒற்றடுத்து உரியசையாயினவாறு காண்க. உம்மை எதிர்மறையாதலின் ஒற்றடாது வருதலே பெரும்பான்மை யென்றுணர்க. நிலையொழி ஒற்றுமிக்கு உண்ணும், நடக்கும் என்பன தேமா புளிமாவாயே நிற்கும்; விக்குள், கடவுள் என்பனவும் அவை. (௧0)

௧௧. அசையுஞ் சீரு மிசையொடு சேர்த்தி
வகுத்தன ருணர்த்தலும் வல்லோ ராறே.

இது முற்கூறியவற்றிற்கும் இனி வருஞ் சீர்க்குமெல்லாம் புறநடை.

இ-ள். அசை..........சேர்த்தி எ-து அசைகளையும் சீர்களையும் ஓசையோடு சேர்த்தி. வகுத்..............ராறே எ-து வேறுபாடுணர்வித்தலும் செய்யுளிலக்கணத்துறைபோயினாரதுநெறி. எ-று.

முற்கூறிய மாத்திரையென்னு முறுப்பின் ஓசையை யளந்து இன்னோசையும், இன்னாவோசையும் அறிந்து உணர்த்துக. எ-று.

உ—ம். 'தருக்கிப் புணர்ந்து தணந்த தமது, பொருப்புப் புடைத்துப் புடைத்து' என்றால் வெண்பாவீற்றடி இன்னோசைத்தாகாமையிற் 'பொருப்புத் தழைந்தபொழிந்து' என மெல்லினவோசைசேர்க்க இன்னோசைத்தாயிற்று. 'நிலமிசை நீடுவாழ் வார்' (திருக்குறள்-௩) இதனுள் வாழ்வாரென்னும் ஓசையைவகுத்து வார் என நேரசைச்சீராக்க அசையான் இன்னோசைத்தாயிற்று. இதனை வகையுளி யென வேறோருறுப்பாக்குவாருமுளர். இனிக்கட்டளையடியையும் சீர்வகையடியையும் இசையொடுசேர்த்தி இன்னோசை யுணர்க. அஃது 'அளவுஞ் சிந்தும் வெள்ளைக் குரிய' (செய்-௫௮) என்ற பதினான்கெழுத்தளவும்வருங் கட்டளைவெண்பாவும் வெண் சீரோயொன்றிற் கலித்தளைதட்டு இன்னோசை பெறாதாம். மாசேர்வாய் மாசேர்

வாய் மாசேர்வாய் மாசேர்வாய் என்றூற் றுள்ளலோசையும்பிறக்கும். இதனை மாசேர்வாய் பாதிரி காருருமுக் காருருமு எனின் இன்னோசைத்தாய்ச் செப்பலோசைபிறந்தது. இனிச்சீர்வகையடிக்கும் 'யாதானு நாடாமா லூராமால்* யாதோதான்' என்றூற் சீர்வகைத்துள்ளலோசையும், 'என்னொருவன்'* என்றூற் சீர்வகைச் செப்பலோசையும் பிறக்குமாறு இசையொடு சேர்த்தியுணர்க. இனி ஞாயிறு புலிவருவாய் புலிவருவாய் மாசேர்வாய் என்றூல் ஞாயிறு என்ற இயற்சீர்ப்பின் நிரையொன்றி ஆசிரியத்தளையாயிற்றேனும் கலித்தளைப்பாற்படுதலும்: ஞாயிறு புலிசேர்வாய் புலிசேர்வாய் மாசேர்வாய் என்றவழிப் புலிசேர்வாய் மாசேர்வாயென நேரொன்றிற்றேனும் கலித்தளைப்பாற்படுதலும் இசையொடு சேர்த்தியுணர்க. இவ்வாறே பிறவும் வகுத்துணர்த்துதல் அத்துறைபோயினூர்க்கே தெரிவதாம்.

இனி உம்மையான் அடியுமிவ்வாறே வகுத்துணர்த்துக. 'நுதல திமையா நாட்ட மிகலட்டுக், கையது கணிச்சியொடு மழுவே' (அகம் - கடவுள் வாழ்த்து) என்புழி இகலட்டு என்னுஞ்சீர் குறித்தபொருளை முடியநாட்டும் யாப்பென்னும் உறுப்பினுள் அடங்காது 'இகலட்டுக்கையது' எனமேலிலடியோடு பொருள்கூடிற்றேனும் இசையொடு சேர்த்தி வகுத்ததாயிற்று. இன்னும் அதனுனே எழுத்தல்கிளவியாகிய 'சுஃறென்னுந்தண்டோட்டுப் பெண்ணை' என்பதனை அசையொடுஞ் சீரொடுஞ் சேர்த்துணர்த்தலுங் கொள்க. இனி அகவன் முதலிய நான்கோசையினையும் ஒன்று மூன்றாக்கி வகுத்தல் **தொல்காப்பியனூர்** கருத்தன்றாயிற்று ; என்னை ? இயலசை மயங்கிய இயற்சீரும், உரியசை மயங்கிய இயற்சீரும், வெண்சீரும்பற்றி யோசை வேறுபடத்தோன்றலின் அவை பன்னிரண்டென்னும் வரையுளடங்காவென்பது பற்றி. இன்னும் 'இசையொடு சேர்த்தி' என்றதனூனே 'ஓஒள பாகு மிடனுமா ருண்டே' (தொல்-மொழிமரபு-௨௪) என்ற ஐகாரமும் பொருள் சிதைந்திசையொடுசேர்தல் கொள்க. 'வண்கொன்றையை மருட்டுங் காண்' '† புகழ்த லானுப்பெருவண் மையனே' இவைமுதலிடைகடைகளிற் சிதைந்தும் வருமென்று கொள்க. (௧௧)

௧௨. ஈரசை கொண்டு மூவசை ‡புணர்த்துஞ்
சீரியைந் திற்றது சீரெனப் படுமே.

---

* **திருக்குறள்**—௩௧௭.

† "செங்கண்மேதி கரும்புழக்கி, யங்கணீலத் தலராருந்திப், பொழிற் காஞ்சி நிழற்றுயிலுஞ், செழுநீர் நல்வய லூரன், புகழ்த லானுப் பெருவண் மையனே" இது **யாப்பருங்கலவிருத்திமேற்கோள்** (௧௫).

‡ **உரையாசிரியரும்** இதுவே பாடங்கொண்டார். பேராசிரியர் 'புணர்ந்தும்' என ஓதுவர்.

இது நிறுத்தமுறையானே சீருணர்த்துவான் றொடங்கி அவற்றின் பகுதியும் அவற்றது பொதுவிலக்கணமும் உணர்த்திற்று.

இ-ள். ஈரசை யியைந்துகொண்டும் எ-து ஈரசை தன்னில் இயைந்து பொருள்கொண்டும். மூவசை யியைந்துகொண்டும் எ-து மூவசை தன்னி லியைந்து பொருள்கொண்டும். இற்றது சீரெனப்படும் எ-து அற்றுநிற்பது சீரென்று சிறப்பித்துச்சொல்லப்படும். சீர்புணர்த்தும் சீரெனப்படும் எ-து அவ்வாறன்றி அச்சீர்தான் ஒருசீரோடொருசீர் தொடரப் பிறர்கூட்டப்பட்டு நின்றாலுஞ் சீரென்று சொல்லப்படுமென்றுங் கொள்க. எ-று.

'இயைந்து' என்றதனையும் 'கொண்டு' என்றதனையும் ஈரசைக்கும் மூவசைக்குங் கூட்டிக் 'கொண்டு' என்பதற்குப் பொருள்கொண்டு என்று பொருளுரைக்க. நடுவுநின்ற 'சீர்' என்றதனைப் 'புணர்த்தும்' என்றதனோடு மாறிக்கூட்டுக. இயைந்து என்றதனான் ஒருசீர்க்கட் பலசொற்றொடர்ந்து வரினும் அவையொன்றுபட்டுநிற்றல் வேண்டுமென்றுணர்க.* எனவே,சொல்லெல்லாம் ஈரசையும் மூவசையுமாயல்லது வாராவென்பதூஉம், இனிப் புணர்த்து என்றதனான் அச்சீர்கள் அவ்வாறற்றுநிற்குமேனும் பிறர் தொடர்பு படுத்தும்வழிப் புணர்ச்சிவிகாரமெய்தாமற் றம்முட்டொடர்ந்துநிற்றலும் புணர்ச்சிவிகாரமெய்தியுந்தொடர்ந்துநிற்றலுமுடைய என்பதூஉங் கொள்க. உ—ம் 'போந்து சென்று சார்ந்து சார்ந்து, மதனுடை நெஞ்சமொடு நடுநாளென்னாது' இவை புணர்ச்சிவிகாரமெய்தாமல் இசையற்றுத்தொடர்ந்தன. 'கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி' இது வல்லெழுத்துப்புணர்ச்சியெய்திற்று. இன்னும் அதனானே ஒரு சொல்லைப் பகுத்துச் சீர்க்குவேண்டுமாற்றான் வேறுசீராக்கியவழியும் அச்சீர்வகையான் வேறுசொல்லிலக்கணம் பெறுதும். அது 'மம்மர் நெஞ்சினேன் றொழுதுநின் றதுவே' என்புழிநின்றது என்னுங் குற்றுகரவீற்றுச்சொல்லினைப்பிரித்து அதுவேஎன வேறொரு சீராக்க முற்றுகரமாகி வேறுபடுதல் கொள்க. எனப்படும் என்று சிறப்பித்தவதனான் இவை சிறப்புடையஎன்பதூஉம், ஓரசைச்சீர் இவைபோலச் சிறப்பில என்பதூஉம் உணர்த்திற்று. உண்ணாநின்றான் என நாலசையாலும் வருமாலெனின், அவை பிளவுபட்டு நிற்றலின் ஒரு சீரெனப்படாமையானும், அவை சீராகவருஞ்செய்யுளின்மையானும், வஞ்சியுள் 'நேரிழை மகளிருணங்குணாக் கவரும்' (பட்டினப்பாலை) என்ற ஆசிரியவடியினை நாலசைச்சீர் காட்டவேண்டுவார் இருசீரடியாகவுரைப்பினும் அவற்றிற்குத் தூங்க

---

* 'மற்றுச் சீரென்றதென்னையெனின், பாணிபோன்று இலயம்படநிற்றலான் அது சீரெனத் தொழிற்பெயராம்; என்னை? சொற்சீர்த்திறுதல் என்புழித் தொழிற்படுத்தோதினமையின்' என்றார் பேராசிரியர்.

லோசையின்றாகலானும், சீர்தம்முட்புணர்ந்திறுதலின்மையானும், வஞ்சிச் சீர் அறுபது காட்டுகின்றவழி யாண்டும் நேர்பசை நிரைபசைகள் அலகுபெறாமையானும் தொல்காப்பியனார் கொள்ளார். உ-ம் 'சாத்தன், கொற்றன்,தேமா ஈரசைச்சீர்கொண்டன. கானப்பேர், சாய்க்கானம், தேமாங்காய் எனவும் உண்ணுதன, தின்னுதன, தேமாங்கனி எனவும் இவை மூவசைகொண்டன. பிறர் தொடர்புபடுத்தின செய்யுள் 'உலகமுவப்ப வலனேர்பு' (திருமுருகாற்றுப்படை) 'யாதானு நாடாமால்' எனவும் 'வசையில் புகழ்வயங்கு வெண் மீன்' (பட்டினப்பாலை)எனவும் ஈரசைச்சீரும் மூவசைச்சீரும் வந்தன. (கஉ)

கா. இயலசை மயக்க மியற்சீ ரேனை
யுரியசை மயக்க மாசிரிய வுரிச்சீர்.

இது முறையானே இயலசையும் உரியசையும் வேறு வேறு தம்முண் மயங்கிவரும் ஈரசைச்சீர் உணர்த்திற்று.

இ-ள். இயலசை மயங்கினவற்றை இயற்சீரென்றும் உரியசை மயங்கினவற்றை ஆசிரியவுரிச்சீரென்றும் கூறுக. எ-று.

மயக்கம் என்றது தம்மொடுதாமயங்குதலும் தம்மொடுபிறிதுமயங்குதலுமாம். உ-ம். நேர்நேர், நிரைநிரை எனத் தம்மொடுதாமயங்கின; இரண்டினையும் பிறித்து நேர்நிரை நிரைநேர் எனப் பிறிதொடுமயக்க இந்நான்கும் இயற்சீராயிற்று. இந்நான்கு வழியுமல்லது வேறுகூட்டமின்மையும் உணர்க. இவற்றைத் தேமா, புளிமா, பாதிரி, கணவிரிஎனவும், கருவிளம் கூவிளம் எனவும் காட்டுப; பிறவாறுங்காட்டுப. நேர்புநேர்பு நிரைபுநிரைபு எனத் தம்மொடுதாமயங்கின. இரண்டினையும் பிறித்து நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு எனப் பிறிதொடுமயக்க இந்நான்கும் ஆசிரிய வுரிச்சீராயிற்று. இவற்றை வீடுபேறு, தடவுமருது, பாறுகுருகு, வரகுசோறு எனக்காட்டுப. செய்யுள்—'அவரோ, சேடில் விழுப்பொரு டருமார் பாசிலை' (குறுந்தொகை-உகசு) என நான்கியற்சீரும் வந்தன. 'வெளிற்றுப் பனந்துணியின் வீற்றுவீற்றுக் கிடப்ப' எனவும் 'நறவுண் மண்டை நுடக்கலி னிறவுக்கலித்து' (அகம்-கூசு) எனவும் 'பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வன்' எனவும் 'வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்' (திருமுருகாற்றுப்படை) எனவும் வந்தவற்றுள் வீற்றுவீற்றுஎனவும் இறவுக்கலித்துஎனவும் பூண்டுகிடந்து எனவும் வசிந்துவாங்குஎனவும் நான்காசிரியவுரிச்சீரும் வந்தன. நான்கு பாவிற்கும்இயற்றலானும், இயல்புவகையான் ஓரோசொல்லாய்வருதல் பெரும்பான்மையாகலானும் இயற்சீரெனவும், ஆசிரியத்திற்கு உரிமையான் உரிச்சீரெனவும் ஆட்சியுங்குணமுங்காரணமாகப் பெற்றபெயர். 'இயற்சீ

குடியானவர்கள் நல்ல எருவைத்தருவதோடுகூட, வேண்டிய அளவு தண்ணீரும் கருத்தும் கிடைப்பதால், நல்ல லாபம் உண்டாவதன்றியும்; சாதம் ருசியாகவும், வைக்கோலை மாடுகள்விரும்பிஉண்ணும் படியுமாகிறது. ஆற்றுப் பாய்ச்சலில் விளையும் வைக்கோலில் நீச்சு நாற்றமிருப்பதால் சில மாடுகள் சரியாக உண்ணா.

ஈரோட்டில் மூன்று ஏகர் விஸ்தீரணமுள்ள நிலத்தை நெற்பயிர் செய்வதற்குப் பிடிக்கும் செலவையும், வரவையும் அடியிற் காணலாம்;—

	ரூ.	அ.	ப.
3-ஏகர் நிலத்தை உழுவதற்குக் கூலி	6	0	0
50-தலைச்சுமை பச்சை எரு	4	0	0
விதை நெல் 85-முதல் 120 இராத்தல்	3	0	0
நாற்று நடவு கூலி 20 (ஆள்களுக்கு)	2	8	0
களையெடுக்கவும், அறுவடை செய்யவும் கூலி (14 ஆளுக்கு)	1	12	0
போர் மிதிக்கும் மாடுகளுக்குக் கூலி	0	12	0
ஆகச் செலவு	18	0	0

இதற்கு வரவு விவரம்	ரூ.	அ.	பை.
நெல் 30-வள்ளம் அல்லது 60 பெரியபடி கொண்ட 10-சலகை (2,4000-இராத்தலுக்கு)...	40	0	0
வைக்கோல் விலை	7	0	0
ஆக வரவு ரூபா	47	0	0

இதனால் 47-ரூபாவில், 18-ரூபா செலவைக் கழிக்க லாபம் ரூ 29. இது ஒரு போகத்துக்காம். இருபோகத்துக்கு 58 ரூ லாபம். இதில் சர்க்கார் தீர்வை, நீர்க்கூலி முதலியவை சேர்ந்து 18-ரூபா போக; மிச்சமாக நிற்கும் இலாபம் ரூபாய் 40. மேலும், நன்செய் நிலத்தையுடைய குடியானவர்கள் அதை எவருக்காவது வருஷக்குத்தகைக்குக் கொடுத்தாலும், வருஷம் பத்துச்சலகையைக்

கொடுப்போருமுண்டு. அதன் கிரயம் ஏறக்குறைய 40-ரூபாவா கும். இதில் சர்க்கார் கந்தாயம்போக எஞ்சியவை நிலக்காரருக்குச் சேரும்.

நமது இந்தியாவைச் சார்ந்த ஒரிசாமாகாணத்திலிருந்து ஒரிசா என்னும் பெயரால் ஐரோபாகண்டத்தைச் சார்ந்த இத்தாலியாவில் நெல் விளைவிக்கிறார்கள். அங்கு ஒரு ஏகரில் 2500 இராத்தல் அரிசி கிடைத்து வருகிறது. 1879௵ முதல் 1883-௵ வரையில் 5-௵த் தில் அங்கு 4,98,463 ஏகர்நிலத்தில் நெல்விளைவிக்கப்பட்டது. இந்தி யா தேசத்துக்கு இயற்கையான இந்த நெல்லை 8-ம் நூற்றாண்டில், இத்தாலியாவிலும் கொண்டு போகப்பட்டு பயிரிடப் பட்டாலும், 1523௵ முதல் தான் இதன் விளைவைப்பற்றிக் கவனித்தார்கள் பிறகு தக்க எருவிட்டுப் பயிர் செய்ததில், அதிக லாபத்தை அடை ந்து வருகிறார்கள். இப்போது ரோமாபுரியில் 347 வகை அரிசிக ளிருக்கின்றன.

நெல்லுக்கு உண்டாகும் நோய் முதலியன.

இந்த நெற்பயிருக்குச் சில சமயங்களில் நாவாப்பூச்சி விழுந்து நோயுண்டாக்கிக் கெடுதலைச் செய்யவும் கூடும். மேலும் அதிகமாகத் தண்ணீர் இருந்தாலன்றி, இந்தப்பயிர் தழைத்தோங்காதாகையால்; மகாா-ா-ஸ்ரீ கணியூர் கிருஷ்ணையரவர்களைப் போன்ற புத்திமான்கள் இந்த ஒரு நெற்பயிருக்கே அதிகத் தண்ணீரைத்தந்து நஷ்டப்படக் கூடாதெனக் கண்டு, தம் விஸ்தீரணமான நிலங்களில் நெல்லுக்குப் பிரதியாகக் கரும்புவைத்துப் பயிர்செய்கிறார்கள். இப்படி நன்செய் நிலத்தில் நெல்லுக்குப் பிரதி கரும்பு வைத்துத் பயிர் செய்வதில், தண்ணீர்ச் செலவும் குறைவதுடன், லாபம் அதிகமாவதையும் கண்டு கொண்டிருக்கிறார்கள். ஈரோடு முதலான சிலவிடங்களில், சிலஏழைக் குடியானவர்கள் ஒரு ஏகர் நிலத்தில் 20 ரூபாச் செலவுசெய்து நெற் பயிர் விளைவித்து 40 ரூபா சம்பாதிக்கிறார்கள். இதற்குச் செல வாகும் தண்ணீரை நம்பி, கரும்பையாகிலும் வாழையையாகிலும் அந்தநிலத்தில் நூறு நூற்றைம்பதுரூபா செலவுசெய்து பயிரிட்டால், சுமார் 300-முதல் 500 ரூபா வரையில் லாபம் சம்பாதிக்கலாம். இந்தக் கரும்பு, வாழைக்கு, நெல்லுக்குப் பிடிக்கும் அவ்வளவு தண்

ணீர் வேண்டியதில்லை. நெல்லுக்கு அதிகத் தண்ணீர் வேண்டியதைக் கருதியே "மதகடி நன்செயும், மலையடிப் புன்செயும்" என்ற பழமொழி வழங்கி வருகிறார்கள்.

நெல்லைப் பயிரிடுவோர் இந்நூலின் முதற் பாகம் 128-வது பக்கம் முதல் 130-வது பக்கம் வரையிற் காட்டியிருக்கும் பழமொழிகளைப் படித்துப் பார்த்தாற் பெரியோர்களுடைய அனுபவங்கள் விளக்கமாகும்.

நெல்லிலிருந்து அரிசி எடுக்கும் விதம்.

ஐரோபா அமெரிக்கா தேசங்களில், நெல்லை இயந்திரங்களினால் உமியைப் போக்குவதால் அரிசி முனைமுறியாமலிருக்கின்றது. நமது தென் தேசத்தில் உலக்கைகளால் குத்துவதால் நொய்யாகி விடுகின்றது. இப்படி உலக்கையாற் குத்திக் கெடுப்பதைப் பார்க்கிலும், கடப்பை ஜில்லா ஜனங்கள் உபயோகிக்கும் மர இயந்திரத்தையும், பல்லாரி ஜில்லாவில் உபயோகப் படுத்தும் கருங்கல் இயந்திரத்தையும், உபயோகப்படுத்தினால் மெத்த நலமடையலாம். கடப்பைக்காரர் மரத்தால் மாவறைக்கும் இயந்திரத்தைப்போல 3-அடி அகலமும் 2-அடி உயரமுமாகச் செய்து, தேய்வு பாகங்களில் பல் செதுக்கியிருப்பதால்; அதில் நெல்லைப் போட்டு ஆட்டினால் ஒரு தினத்தில் 4000 படி நெல்லை முனைமுறியாமல் அறைக்கும். இவ்வேலைக்கு நாலு பெயர் வேண்டும். பல்லாரியில் கல்இயந்திரமாகையால் ஒரேஆள் போதும். கோயம்புத்தூரையடுத்த குணியமுத்தூரில் இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பு அமெரிக்காவிலிருந்து வந்த பார்நெட் இயந்திர கருவியைக் கொண்டு உமியைப் பிரித்து வந்தார்கள்: அரிசியும் நன்றாக இருந்தது. யாது காரணத்தினாலோ அந்த இயந்திரசாலையின் வேலை இப்போது நின்றிருக்கிறது.

புழுங்க லரிசியைப் பார்க்கிலும் பச்சரிசியில் பலம் அதிகம். பச்சையரிசியின் முனைகள் முறியாமலும், நொய்யாகாமலும் இருக்க வேண்டுமானால், நெற்பயிர் முற்றும் பழுக்காமல் கொஞ்சம் பச்சையாகவே இருக்கும்போது அறுத்து அடித்துவிட்டால் அதிக நொய்யாகாமல் நல்ல அரிசியை அடையலாம்.

1890-ஆம் இவ்வுலகத்தில் 1,46,80,00,000-ஜனங்களிருந்தார்கள். அவர்களில் 79,60,00,000 ஜனங்கள் அல்லது நூற்றுக்கு ஐம்பத்து நாலு பெயர் அரிசியைச் சமைத்து உண்பவர்களாம்.

1895—1896ஆம் பெங்காளம், இந்தியாவின் வடபர்மாவைத் தவிர இந்தியாவின் மற்ற விடங்களில் 3,00,15,903 ஏகர் நிலத்தில் நெல் பயிரிடப்பெற்றது.

கோதுமை—WHEAT.

நமது நாட்டில் நெல்லுக்குப்பிறகு அதிகமாக போஜனத்துக்கு உபயோகப்படும் தானியம் கோதுமையே. இது நெல்லைப்போற் புல் வகுப்பைச் சார்ந்தது. அரிசி முதலான சிலதானியங்கள் தேகத்துக்கு உஷ்ணத்தைத்தரும் மாவுள்ள பதார்த்தம். கோதுமை மற்ற தானியங்களைவிட மாநுஷீகதேகமாமிசத்தையும், பலத்தையும், அதிகப்படுத்தும் சிகணம் (ரவைகள்)உள்ளதாக இருப்பதால்; இது மனுஷருக்கு ஒருவிசேஷமான போஜனப்பொருள்.

இந்தக்கோதுமையில் வாற்கோதுமை, மாக்கோதுமை, இரவைக் கோதுமை, அரிசிக்கோதுமை என்றுதிப் பலவகைகளுண்டு.

கோயம்புத்தூர்ப் பிரதேசங்களில் நெற்கோதுமையையும், கர்நூல், பல்லாரி முதலான சிலவிடங்களில் அரிசிக்கோதுமையையும் புன்செய்ப்பயிராக விளைவிக்கிறார்கள்.

கோதுமைக்கேற்ற நிலம்.

இதற்கு அதிகமாசப் பனிபெய்யும் இடங்களும் கரிசல், வண்டல், படுகைநிலங்களும், கடலைமுதலான கோதுப்பயிர் விளையக்கூடிய நிலங்களுந்தகுந்தவை. இதற்கு முதலில் மழையும், கதிர்விடும்போது பனியும்வேண்டும்.

கோதுமைக்கேற்ற உழவு.

இதற்கு நாட்டுக்கலப்பையானுல் ஏழு உழவுவேண்டும். சீமைக்கலப்பையானுல் இரண்டு மூன்று உழவுபோதும். பல்லாரி முதலான

சிலவிடங்களில் ஆறுமாடுகேள்கட்டி இழுக்கும் பாந்துக்கலப்பைகளால் உழுது நல்ல லாபம் அடைந்துவருவதைப் பார்க்கலாம்.

கோதுமைக்கேற்ற எரு.

இதற்கு மாடு முதலானவைகளின் எருவை உபயோகப்படுத்தக் கூடினும்; எலும்புப்பொடி, மீன்சத்துக்களாலுண்டாகும் பிரகாசித எரு இன்றியமையாததாகையால்; இதன் பெருமையையறிந்த ஐரோபா, அமெரிக்காநாட்டார், பக்ஷிகளின் புழுக்கை, மீன்எலும் புச்சத்துக்களை உபயோகப்படுத்திவருவதுடன்; சிலர், நீலிஇலையைப் போன்ற (Clover) ஒருவித பசுந்தழைகளையும் உபயோகித்து இலாபமடைகிறார்கள்.

கோதுமையை வடநாடுகளிற் பலதானியங்களோடு கலந்து கரிசல் மண்ணில் விதைத்துவருகிறார்கள். கோயம்புத்தூர், பல்லடம்முதலானவிடங்களில் தோட்டப்பயிராகப் பயிர்செய்துவருகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்பு பல்லடம் தாலூகாவின் சிலபாகங்களில் கோதுமையைப் பருத்திக்கொட்டையோடு சேர்த்துப் புன்செய்ப்பூமிகளிலும்பயிர்செய்துவந்ததுண்டு. ஆனால் நன்செய்ப்பூமியில் விளைவதைப் போல புன்செய்க்காடுகளிலும், தோட்டங்களிலும் விளைவுகாணாது.

கோதுமை பயிரிடும் காலம்.

ஐப்பசி (அக்டோபர் நவம்பர்) மாதத்தில் விதைவிதைத்து, மாசி (பிப்ரவரி மார்ச்சு) மாதத்தில் அறுத்துவிடுகிறார்கள். இப்பயிர் ஓர் அடி உயரமானபிறகு ஆடுகளைவிட்டு மேய்த்தாவது, அல்லது தலைசிகரங்களைக் கத்தரித்தாவது விட்டால், அடியிலிருந்து அனேக தூறுகள் உண்டாகி அதிக ஆதாயத்தைத் தரும். இதற்கு இரண்டு தரம் களையெடுத்தும், பதினெட்டுமுதல் இருபது தடவை தண்ணீர் பாய்ச்சியும் ஜாக்கிரதையாகப் பயிரிடவேண்டும். கோதுமை விதைத் தானியம் மற்றப்புன்செய்த்தானியங்களைவிடஏகர்ஒன்றுக்குநாற்பது படி அல்லது 90-இராத்தலென்று சிலர்சொல்லுகிறார்கள். இது அதிகமான அளவு. நல்ல நிலத்தில் ஒரு ஏகரில் 1900 இராத்தல் முதல் 1400 இராத்தல்கோதுமைவரையில் கோயம்புத்தூர் கலெக்ட்டர் கச்சேரித்தோட்டத்தில் விளைந்ததைக்கண்டதுண்டு. அதாவது ஏறக்

குறைய 18 சலகை அல்லது 56 ரூபா வருமானம். இதைத் தோட்டத்தில்வைத்துத்தண்ணீர்விட்டுக் கஷ்டப்படுவதைப் பார்க்கிலும்நன் செய்ப்பூமியில் கோடைமழைகாலத்திலும், இராகிப்பயிரை முதற்போகமாகப்பயிர்செய்து; பிறகு சம்பாநெல்லுக்குப் பிரதி கோதுமையைப்பயிர்செய்தால் அதிக லாபத்தையடையலாம். இதைநமது குடியானவர்கள் கவனிக்கவேண்டியது.

நிற்க, இந்தக்கோதுமைத் தானியம் ஜனங்களுக்கு எவ்வளவோ புஷ்டிகரமான போஜனமாக இருக்கும்போது, இதன் புல்லை மாடுகளுக்குப்போட்டால் கால்விழுந்துவிடுமென்றும், மஹா சூடானதென்றும் சிலர் இதன் தாளைச்சுட்டுச் சாம்பலாக்கிவிடுகிறார்கள். இது வீண் பீதியே. கோதுமைத் தாளை ஓரடி அளவுக்கு வெட்டி அதன் மேல் வெந்நீரைக்கொஞ்சம் துளித்துவைத்துப் பிறகு மாடுகளுக்குப் போட்டால் முதல்தரமான தீவனமாகும்.

1895—96ஸு நமது நாட்டில் 170,88,004 ஏகர் நிலத்தில் கோதுமை பயிர்செய்யப்பெற்றது.

ஜவ்வரிசி—SAGO.

ஜவ்வரிசியானது கூந்தற்பனையில் உற்பத்தியாகிறது. மலையாள நாட்டில்விளைந்த, உத்தேசம் 15 அல்லது 20 வருஷம் முதிர்ந்த கூந்தற் பனைமரத்தை வெட்டி, அதன் குருத்தண்டை இருக்கும் மிருதுவானசோற்றை எடுத்து, ஜலத்தோடுசேர்த்து உரலிற் போட்டு இடித்து எடுக்கும் மாவே சவ்வரிசியாம். இது குளிர்ச்சியைத்தரும் உணவு.

சோளம்—CHOLAM.

இதுவரையில்இந்த இந்தியாநாட்டிற் பெரும்பான்மையானதனவான்களுடையவும், மத்திய ஸ்திதியையுடையவர்களுடையவும், உணவுப்பொருள்களான நெல் கோதுமையின் விளைவு விவரத்தைச் சொன்னோம். இனி ஏழைகளான அனந்தலக்ஷ குடிகளுடைய உணவாகிய சோளத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். சோளம் அதிக சுவற்பப் பிரயாசையினால் விளைவிக்கக்கூடிய தானியமாகையால் "சோம்பேறிக்குச் சோளம் வேளாண்மை" என்ற பழமொழி வழங்கிவருகிறார்கள்.

சோள விளைவுக்கேற்ற நிலம்.

இது புன்செய்க்காட்டிலும், தோட்டங்களிலும், குளத்தின் உள்வாய் நிலங்களிலும், அதிகத்தண்ணீரோட்டமில்லாதகால்வாய் நிலங்களிலும் மிகுதியாகப்பயிரிடினும், நொய்க்கரிசல் நிலமே சிறந்தது. செவ்வல் நிலத்திற் பலவிதக் கார்சோளம் விளைகின்றன.

சோளத்துக்கு வேண்டிய உழவு.

சோளப்பயிருக்கு நல்ல கலப்பையால் நான்குழவு போடுவது வழக்கம். பல்லாரி முதலான சிலவிடங்களிலுள்ள கரிசல் நிலங்களில் 12 மாடுகள் கட்டிய பந்துக்கலப்பையால் உழுவதில் வேர்கள் ஆழத்தில் இறங்கப், பயிர்கள் மதாளித்து நல்ல லாபத்தை தருகிறதன்றியும்; மழைக்காற்றுக்குப் பயிரும் சேதமாவதில்லை. ஆகவே, சோளத்துக்கும் ஆழமாக உழுதல் உத்தமம்.

சோளத்துக்கு ஏற்ற எரு.

சோளத்துக்கு தொழு எருவே சிரேஷ்டமாயினும், சோளம் அறுவடையானபிறகு பூமியை உழுது அதிற் கொள்விதைத்து பூப்பிடிக்கும் தருணத்தில் உழுதுவிட்டால் நல்ல எருவாகும். கடலை துவரை முதலாய கோதுப்பயிர்களின் செடி கொடிகளை மக்கவைத்துப்போடுவதிலும் பலன் அதிகமாகக்காணும். மேலும் ஒரே இடத்தில் அடிக்கடி சோளத்தைப்பயிரிடாமல் இடத்தைமாற்றிப்பயிரிட்டால் நன்றாக விளையும்.

சோளத்தின் பல வகைகள்.

கோயம்புத்தூரில் விளையும் சோளத்தின் பலவகைகளாவன :—பெரியவெள்ளை, கறுப்புரெட்டு, சின்ன வெள்ளை, சென்ரெட்டு, தலைவிரிச்சான், முத்துவெள்ளை, எண்ணெக்கிட்டான், உப்பஞ்சோளம், பெரியமஞ்சள், சின்னமஞ்சள், சடைமஞ்சள் ஆணைக்கருஞ்சோளம், அரிசிச்சோளம், மாப்பிள்ளைமஞ்சட்சோளம், சிலுசிலுத்தான், செஞ்சோளம், மதனச்சோளம், துவர்ச்சோளம் என்பவைகளே.

திருச்சிராப்பள்ளி, மதுரை, சேலம், திருநெல்வேலிகளில் காக்கா, இறுங்கு, மல்லிச்சோளம், சாம்பிராணிஇறுங்கு, திருமலைக்கடுக்கன்

கல்இறுங்கு, மதுரைப்பால்இறுங்கு, சம்பா இறுங்கு, கொத்தமல்லி இறுங்கு, திருச்சங்கொட்டை சோளம், மத்தாபுசோளம், வெள்ளை இறுங்கு, சடைஇறுங்கு, மாப்பிள்ளை இறுங்கு, செகப்பு இறுங்கு சுல்குச்சோளம், கண்டிச்சோளம், வெள்ளைக்கட்டை முதலானவை; விளைகின்றன.

திண்டுக்கல்லில் கோடை வெள்ளை, பில்லைச்சோளம், மயிர்ச் சோளம், துவரஞ்சோளமும் விளைகின்றன.

பல்லாரி, கடப்பை, கர்நூல், அனந்தப்பூரில் சித்தபச்ச (மஞ்சள்) செருகுஜொன்ன, தெல்லஜொன்ன, மல்லமாபு ஜொன்ன, அத்த கோடலு ஜொன்ன, சீதம்மவாரி ஜொன்ன, முருகனிஜொன்ன என்பவைகளே.

மேற்கண்டவைகள் குளிர்ச்சியான கரிசல் பூமியில் கம்பீரமாக விளைகின்றன. செவ்வல் பூமியில் முன் காரிச்சோளம் செழிப்பாக வளரும். திருச்சிராப்பள்ளி, மதுரையாதி ஜில்லாக்களில் இறுங்குச் சோளம் விளைகின்றது. இதில்நெல்லைப்போலப் பாதி உமியால் மூடப் பட்டிருக்கும். இதன் கதிரிலிருக்கும் உமியைப்பிரிப்பது கஷ்டம். நந்தியால் முதலான இடங்களில் கரும்புச் சோளம் விளைகிறது. இதன் தானியமும், தட்டும் ருசியாக இருக்கும். தட்டை ஆலையாடி ரசமெடுத்து வெல்லம் சர்க்கரை செய்வதுண்டு. விதையிலிருந்து ஓர் விதச் சாயம் எடுக்கிறார்கள்.

சோளம் விளைவிக்கும் காலம்.

இவைகளைச் சித்திரைப்பட்டம், ஆவணிப்பட்டம், தைப்பட்டம் என்றுதி பருவகாலங்களில் அதாவது பங்குனி, சித்திரை (மார்ச்சு) மாதங்களில் நிலத்தைத்தக்கபடி உழுது எருவிடப்பட்ட பூமியில் விதைத்து ஆனி, ஆடி, (ஜூன் ஜூலை) மாதங்களில் அறுவடைசெய்தும்; புரட்டாசி (அக்டோபர்) மாதத்தில் விதைத்து மாசி (பிப்ரவரி மார்ச்சு) மாதத்திலும்; தைமாதத்தில் (ஜனவரி பிப்ரவரியில்) விதைத்து பங்குனி (மார்ச்சு எப்ரல்) மாதத்திலும் அறுவடை செய்யலாம். சிலவிடங்களில் வேறுவேறு காலங்களிலும் பயிரிடுவதுண்டு. சிலவிடங்களில் பூமியைத்தக்கபடி உழுது, மந்தையெரு

களும் செய்துவருகின்றார்கள். ஜலம் அதிகமாகவில்லாத விடங்களிற் சில வேளைகளில் கூரைகளின் கூடல்வாய் வழியாய்வழியும் மழை ஜலத்தைச் சேர்க்கின்றார்கள். சிலவிடங்களில் மலையாகவிருந்தால் அதன் பள்ளத்தாக்குகளில் தேங்கும் ஜலத்தை ஓடிப்போகாமல் அணைகட்டித் தேக்குகின்றார்சள். சமதரைகளில் மழை பொழியும்பொழுது அத்தரையின் நடுவே சிறுகால்கள் வெட்டி அவைகளின்வழியே ஓடிவரும் ஜலத்தைக் குளமாகவும் குட்டையாகவும் சேர்த்து வைத்துக்கொள்ளுகின்றார்கள்.

எப்பொழுதும் இவ்வாறு நாம் செய்யும் முயற்சிகள்யாவும் மழை பொழிந்து விழுந்த ஜலம் மண்ணில் ஊறும்முன்னமேயே அச்சலம் நமக்குக் கிடைக்கும்படியாக விருக்கவேண்டும்.

ஆனல், சில வைத்தியர்கள் பூமிக்குள் ஊறின ஜலத்தையே குழாய்கள் வைத்துப் பாதாளகங்கைக் கிணறு (Artesian well) வழியாகவும் மற்றக் கிணறுகள் வழியாகவும் நாம் எடுத்து உபயோகிக்கவேண்டும் என்றும் அவ்வாறு உபயோகிப்பதால் இருவகைக்குணம்—(அதாவது 1-பூமியை உலறச்செய்தல், 2-அவ்வாறு உலறச்செய்வதால் உண்டாகும் ஜலத்தைஉபயோகித்தல்)—உண்டாகும் என்று சொல்லுகின்றார்கள்.

ஜலாசயம்—பெரிய நகரங்களுக்குத் தேவையானஜலத்தை ஒருவாறு கணக்கிட்டு அதற்கு எற்றபடி ஒரு ஜலாசயம் உண்டாக்கி அவ்வாசயத்தில் ஜலத்தைத்தேக்கி வைத்துக் கொள்ளவேண்டும். சென்னைக்கு ஜலாசயம் புழலேரி.

மழை ஜலத்தை அவ்வாசயத்திற் கொண்டுபோகவேண்டியதாகவிருந்தால் அம்மழைஜலத்தை ஒருபெரும் மணல்அணைகட்டித் தேக்கி அவ்வணைவழியே வடிகட்டி ஓடும்படி செய்து அதன்பிறகு அச்சலம் நமக்கு உபயோகமாகும்படி செய்யவேண்டும். இம்மணலணையையும் வருஷத்தில் 2-3 தடவையாவது பரிசோதித்துப் பரிசுத்தமாக வைக்கவேண்டும்.

இவ்வாறு வழிந்தோடிவரும் ஜலத்தைச் சிறு ஜலாசயத்திற் றேக்கிக் கொள்ளவேண்டும். இவைகள் கல்லும் சிமட்டும்போட்டு நன்றாகக் கட்டப்பட்டு இருப்பதுடன் வெயில், வெளிச்சம் முதலியவைகள் படாமல் நன்றாக மூடப்பட்டும், காற்றோட்டத்துக்குக் குறைவில்லாதபடி ஏற்பாடுகள் செய்யப்பட்டுமிருக்கவேண்டும்.

இச்சிறு ஜலாசயத்திலிருந்து குழல்கள் வழியாக நமக்கு ஒரு நகரத்தில் ஜலம் கிடைக்கும்.

மழை ஜலத்தை நாம் குளத்தில் தேக்கிவைத்து அதை உபயோகிப்பதாகவிருந்தால் அக்குளத்தை அடிக்கடி வெகு ஜாக்கிரதையாகப் பரீக்ஷித்துப் பார்க்கவேண்டும். கிணற்று ஜலத்தை நாம் உபயோகிக்கிறதாகவிருந்தால் மழை பொழியும்பொழுது அக்கிணற்றில் மேற்றரைக்கசிவுஜல மிறங்குமாகையால் அக்கிணற்றைச் சுற்றிச் சுவரெடுத்து மேடைபோட்டு மேடைஜலம் பூமியில் நிற்காமலோடும்படி எற்பாடு செய்யவேண்டும். கிணற்றில் நீர்மட்டத்துக்குமேல் உள்வாயிலிருந்து நீர் கசிந்து கிணற்றில் இறங்குவதாகவிருந்தால் அவ்வாறுண்டாகாமற்றடுக்க நன்றாகச் செங்கலாலும் சிமட்டாலும் கட்டிடம் கட்டவேண்டும்.

சிறு ஜலாசயத்திலிருந்து குழல்கள்வழியாக நகரங்களில் நமக்கு வேண்டும் ஜலம் கிடைக்கின்றதென்று நாம் முன்னமே சொல்லியிருக்கின்றோம். இக்குழல் எந்த உலோகத்தாற் பண்ணப்பட்ட குழலாகவிருக்கவேண்டும் என்ற கேள்வி பலதடவைகளிலுண்டாகி இரும்புக்குழல்கள்தாம் எல்லாவிதத்திலும் மேலானவைகள் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

ஜலநிபந்தனம்:—நாம் குடிப்பதற்கும், நமது உணவுகளைச் சமைப்பதற்கும் முக்கியமாகப் பரிசுத்தமானஜலம் நமக்குவேண்டும் என்பதும், மற்ற உபயோகங்களுக்குப் பரிசுத்தமான ஜலம் கிடைக்காதபக்ஷத்தில் அவ்வளவு சிரமமின்றிமற்றஜலத்தையும் ஒருவாறுஉபயோகிக்கலாம் என்பதும் எல்லாரும் அறிந்திருக்கின்றார்கள்.

நமக்குக் குடிப்பதற்குவேண்டிய தண்ணீரைக் கிணறுகளிலிருந்தும், ஆறுகள், ஊற்றுக்கள், மழை இவை முதலானவைகளிலிருந்தும் நாம் அடைகின்றோம். எல்லாவித ஜலத்துக்கும் மழையே முதற்காரணம். சூரியரசிமிகள் சமுத்திரத்தின்மேற்பரப்பில் அடித்துச்சலத்தைச்சோஷிக்கச்செய்து அவ்வாறு சோஷிக்கச்செய்த ஜலத்தை ஜலதூமமாக ஆகாயத்திற் கிளம்பச் செய்கின்றன. இவ்வாறு கிளம்பிய ஜலதூமம் மேகமாக மாறி சீதத்தால் திபிடமாகப்பண்ணப்பட்டு மறுபடியும் மழைஉருவமாகப் பூமியில் இறங்குகின்றது. இம்மழையாற்றான் ஆறுகள் ஊற்றுக்கள் கிணறுகள் முதலிய ஜலாதாரங்கள் நமக்கு உண்டாகின்றன.

மழைஜலம்:—ஆகாயமார்க்கமாய் மழை பூமியில் விழும்பொழுது ஆகாயத்திலேயே மழைஜலம் நன்றாக வாயுவுடன்சம்பந்தப்பட்டே விழுகின்றது. நகரங்களில் அதிகப்பரிசுத்தமான வாயுவில்லாததால் நகரத்தில் மழைபெய்யும்பொழுது அம்மழைஜலம் அதிகமான கெட்டகாற்றுடன் கலந்தே பூமியில் விழும். இவ்வாறு ஆகாயத்திலேயே வாயுவாற் கெடுவதுடன் மழைநீர்

வீட்டுக்கூரைகளில் விழுந்தால் அவைகளிற் படிந்திருக்கும் குப்பை கூளம் முதலிய அழுக்குகளுடன் பூமியில் விழும். மரங்களிலும் வீட்டுக்கூரைகளிலுமுள்ள பட்சி புரீஷங்கள் இம்மழையிற் கலக்கின்றன. பூமியில் விழுந்ததும் பூமியிலிருக்கும் பலவிதமான புரீஷங்களும் மலங்களும் அவ்வண்ணமே மழைஜலத்தில் சம்பந்தப்படுகின்றன. ஆகையால் மழைசலத்தை அது ஓடிவருகின்றபடியே கட்டித்தேக்கிக் குளத்திற் சேர்த்துவைத்தால் அதிற் பலவிதமான அசுத்தங்களும் கலந்திருக்கும்.

பூமியிற் பொழியும் மழை அப்படியே முற்றிலும் ஓடி குளமும் குட்டையுமாகத் தேங்குகிறதில்லை. இவ்வாறு சொற்பம் தேங்கலாம். மழையிற் சொற்பபாகம் பூமிக்குள் ஊறியிறங்கி ஊற்றுக்களாகவும் கிணறுகளாகவும் மறுபடியும் தோன்றுகின்றது. ஆறுகளாகப்பெருகுகின்றது. மழைஜலத்தில் எவ்வளவுபாகம் அவ்வாறு பூமிக்குள் இறங்குகின்றதென்பது பூமியின் அமைப்பை சம்பந்தித்ததாகவிருக்கின்றது. மழைஜலம் பூமியிலிறங்கும்பொழுது பூமிக்குள் அங்கங்குப்பதுங்கிநிற்கும் கரிமலவாயுவை கிரஸனம் பண்ணிக்கொண்டேயிறங்குகின்றது. மணற்பாங்கான தரையில் இக்கரிமலவாயு குறைவு.

ஆற்றுநீர்;—படுகைகளின் கழிவாலும் பலசிற்றாறுகள் பலவிதநீரைக் கொண்டுவந்து கலப்பதாலும் ஆற்றுநீர் ஊற்றுநீரைவிட வெகுகலப்பாகவிருக்கின்றது. இன்னும்ஆற்றுநீரில் பலர் துணிகளைத் துவைக்கின்றார்கள். பட்டணத்திற்கு அருகில் ஆற்றுநீரிற் சாக்கடைநீரும் கலக்கலாம். ஆற்றின் படுகைகளிற்பலவிதஓஷதிமலங்களும் பிராணிமலங்களுமிருக்கின்றபடியால் மழைபெய்யும்பொழுது இவைகள் கரைந்து ஆற்றுநீரில் ஓடிவந்து கலக்கும். பெரும்பாலும்மயானங்கள் ஆற்றங்கரையோரமேயிருப்பதால் அம்மயானங்களின் சாம்பல்களும் எலும்புகளும் ஆற்றிற் கொட்டப்படும். கால்நடைகளை ஆற்றில் எப்பொழுதும் குளிப்பாட்டுவார்கள். சாயக்காரர்கள் ஆற்றில் துணிகளுக்குச் சாயந்துவைப்பார்கள். தோல் பதமிடும்சாலை, பஞ்சுநூற்கும் சாலை இவைகளின் யந்திரக் கழிவுஜலங்களும் சிற்சில சமயங்களில் ஆற்றிலேயே ஓடிவந்து கலக்கும். இவ்வாறு பலவிதக்காரணங்களால் ஆற்றுஜலம் பெரும்பாலும் அசுத்தமாக்கப்படலாம்.

ஜலம் நதிஜலமாகவிருந்தாலும்சரி; மற்றஜலமாகவிருந்தாலும் சரி; அந்த ஜலம்ஓடிவந்து அல்லது ஊறி நமக்குக்கிடைக்கின்ற இடம் எவ்வகை? அந்நாடு எவ்வகைநாடு? அதாவது எவ்வகை மட்பாங்குள்ளது என்பதை முதன்முதற் பார்க்கவேண்டும். பாறையிலிருந்து கசியும் ஜலம் பெரும்பாலும் பரிசுத்தமான ஜலமாகவிருக்கும்.

போதிமணற்றரையிலிருந்து ஊறும் ஜலம்;—இது அநேகமாய்ப் பரிசுத்தமாகவேயிருக்கும். கொள்ளிடநதியிற் பொதிமணல் அதிகம். அவ்விடத்தில் ஊற்று வெட்டி எடுக்கும் ஜலம் எல்லாவிதத்திலும் உத்தமமான ஜலம் என்பது வைத்தியர்களின் கொள்கை. எல்லாப் பொதி மணற்றரையும் ஒருவாறுகவிருக்கும் என்று சொல்ல முடியாது. அத்தரையில் உவர்சம்பந்தமிருக்குமாயின் அந்த ஜலம் அதிக பிரயோசனப்படமாட்டாது.

களிமண்தரையிற் கிட்டும் ஊற்றுஜலம்;—இவ்வகை ஊற்றுக்கள் வெகு சொற்பம். இவைகளிலுண்டாகும் ஜலம் நல்லஜலமல்ல.

களியும் மணலுங்கலந்த தரையிலூறும் ஜலம்;—இதுவும்முன்சொன்ன களியிலுண்டாகும் ஜலம்போலவே பரிசுத்தமான ஜலமாகமாட்டாது.

கசிவு நீர் :—இது மிகவும் அசுத்தம்.

சதுப்பு நிலத்திலிருந்து ஊறிவரும் நீர் :—இதில்பலஜைஷதிவர்க்கங்கள் அழுகிப்படிந்த மலமும் இன்னும் மற்றவிதமலமும் அதிகமாகவிருக்கும்

மயானத்திலிருந்தும்பிணம்புதைக்குமிடத்திலிருந்தும்ஊறிவரும்ஜலம்.—இதிற் பிராணிகள்அழுகின நாற்றசம்பந்தமும் மற்ற விஷமும் அதிகமாகவிருக்குமாகையால் வெகுஅசுத்தம்.

பாதாளகங்கைக்கிணற்றுற் கிட்டும் ஜலம் (Artesian wells);—இந்த ஜலம் வெகு ஆழத்திலிருந்து கிளம்பி வருவதால் இதில் சில வேளைகளில் அயஸ்சம்பந்தம் அதிகமாகவிருக்கும். இது அநேகமாய்ப்பரிசுத்தமானஜலம். அன்றியும் பூமிக்குள்ளிருந்து எவ்வளவுக்கெவ்வளவு அதிக ஆழத்திலிருந்து கிளம்புகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகவெப்பமாகவுமிருக்கும். இதேகாரணத்தாற்றுன் அதிக ஆழமான கிணற்றிலிருந்து கிட்டும் ஜலத்தை மற்றஜலத்தைக்காட்டிலும் பரிசுத்தமாகச்சொல்லுகிறுர்கள்.

ஊற்றுஜலம்:—எவ்விதமான மண்ணின் வழியாக ஊற்றுஜலம் கசிந்து வருகின்றதோ அதைப்பொறுத்து ஊற்றின் ஜலம் சுத்தமா சுத்தமில்லையா வென்று நாம் சொல்லவேண்டும். ஆழமான ஊற்று என்பது அதிக முக்கியமல்ல. எவ்விதமான மண்வழியாக ஜலம் ஊறிவருகிறதென்பதைத்தான் நாம் அதிகமாகக் கவனிக்கவேண்டும். கிணற்றுஜலமும் ஊற்றுஜலமாகையால் அச்சலத்தைப்பற்றி நாம் சர்ச்சை செய்யும்பொழுதும் ஊற்றைப்போல் எண்ணியே சர்ச்சை செய்யவேண்டும். ஆனல் ஊற்றுஜலத்தைக்காட்டிலும் அதிகமான அசுத்தம் சிலவேளைகளில் கிணற்று ஜலத்திற் கலக்க அதிகக் காரணங்களுண்டு. கிணற்றின் மேலிருந்தபடியே பல்வித அசுத்தங்கள்

கிணற்றுஜலத்தில் வழிந்து கலக்கலாம். பல பிராணிகள் மரம் மட்டைகள் விழுந்து அழுகலாம். காற்று சருகுகளையும் தூசியையும் கிணற்றில் அடித்துத் தள்ளலாம்.

ஆகையால் நமக்குப்பலவிதமாகக் கிடைக்கும் நீரை நாம் சீர்தூக்கிப்பார்ப்போமானால் எல்லாவிதத்திலும் அசுத்தத்தின் பயமே அதிகமாகவிருக்கும். நாம் நம்மால் எவ்வளவுகூடுமோ அவ்வளவும் செய்து நமக்குக் கிடைக்கும் தண்ணீர் பரிசுத்தமான தண்ணீராகவிருக்க வழிதேடவேண்டும். எவ்வழியாக நமக்கு நீர் கிட்டுகின்றதோ அவ்வழியை எவ்வளவு விதமாக நாம் சுத்தப்படுத்திக்கொள்ளவேண்டுமோ அவ்வளவு விதமாகவும் சுத்தப்படுத்திவைத்துக்கொள்ளக்கடமைப்பட்டவர்களாகவிருக்கின்றோம்.

நாம் முதலாவது அத்தியாயத்திலேயே பூமிக்குள் நீரோட்டமிருக்கின்றதென்று சொல்லியிருக்கின்றோம். அந்த நீரோட்டமானது பலவித ஆழங்களிலிருக்கின்றது. அதிக சமீபத்திலிருக்கும் நீரோட்டம் பூமியிலிருந்து ஊறும் ஜலத்துடன் கலந்திருக்கும். ஆதலால் அந்த நீரோட்டத்திலிருந்து நாம் ஜலத்தை எடுப்பதாகவிருந்தால் அது அவ்வளவு பரிசுத்தமாகவிருக்காது. கிணற்றை ஆழமாகத்தோண்டி 100, 150 அடிகள் குடைந்து அதன் பிறகு ஊற்றை அடைவோமானால் அது வெகு பரிசுத்தமான நீராகவிருக்கும். அவ்வாறு கண்டு பிடித்த இடங்களிற்றான் குழல்களை பூமிக்குள்ளிறக்கி ஆர்டீஸன் கிணறு என்ற பாதாள கங்கைக்கிணறுகளை ஏற்படுத்துகின்றார்கள். அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நீரை அக்குழல் வழியாக வெளியே வருவித்துப் பலவிதமாக ஜனங்களுக்கு உபயோகப்படும்படி செய்கின்றார்கள். இவ்வார்டீஸன்கிணறுகளை நமது தேசத்தில் புதுச்சேரியிற் காணலாம்.

ஜலாசயத்தில் உண்டாகும் அசுத்தங்கள்;—நாமிதுவரையில் இயல்பாய் பூமியின் சம்பந்தத்தால் ஜலத்திற்கு உண்டாகும் தீமைகளைப்பற்றிச் சொன்னோம். இவைகளன்றிக் கிருத்திரமமாய்ச் சில தீமைகள் ஜலத்துக்குண்டாகலாம். அவைகளைப்பற்றிவிவரிப்போம். பெரும்பாலும் இவ்விதத் தீமைகளை நகரத்திலுள்ளவர்களே அனுபவிக்க வேண்டியவர்களாவார்கள். ஏனெனில் ஒருநகரத்துக்கு வேண்டிய ஜலத்தைக்கட்டிவைக்கத்தான் நாம் கிருத்திரமமான ஜலாசயங்களை உண்டுபண்ணுகின்றோம்,

இச்சலாசயங்களுக்கும் குழல்களுக்கும் சமீபத்திலே சாக்கடை நாற்றம் அல்லது வேறுவித நாற்றமிருந்து குழல்களும் பாதுகாப்புக் குறைவாகவிருந்தால் நகரங்களிற் குழல்கள் வழியாக நமக்குக்கிடைக்கும் ஜலம்

அசுத்தமாய்விடும். அப்படி யில்லாமலிருக்க அடிக்கடி ஜலக்குழல்களைப்பரி சோதித்துக் கொண்டே யிருக்கவேண்டும். ஜலாசயத்திலிருந்து பீப்பாய் களிலும் தோற்பைகளிலுங் கையால் முகந்து ஜலத்தைநிரப்பி அதிகாரிகள் நகரத்து ஜனங்களுக்கு ஜலம்கொடுக்கும்படி ஏற்பாடு செய்யலாம். இவ்வித ஏற்பாடுகளால் சுத்த ஜலம் கெட்டுவிடும். எப்பொழுதும் நிறுத்த அடைப் பான்போட்ட குழல்களையேவைத்து ஜலம் நேராக ஜனங்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜலத்தட்டு:—ஒரு நகரத்துக்கு வேண்டிய ஜலம் குறைந்தாலோ, அக் காரணத்தால் விளையும் தீமைகளுக்கு அளவேயில்லை: குளிக்கமுடியாது: துணிதுவைக்க முடியாது: வீடு வாயில்கள் நாறிப்போம்: சாக்கடைகள் கழுவ முடியா: எங்கும் துர்க்கந்தமே நிரம்பி நிற்கும். அத்துர்க்கந்தத்தால் அந் நகரம் முடிய விஷவாயுவே அதிகமாகப் பரவிநிற்கும். ஜனங்களுக்குத் தங் கள் உணவுகளைச் சித்தப்படுத்தவும் சரியான ஜலமிருக்கமாட்டாது. இவை களிவ்வாறாகவிருந்தால் அந்நகரத்து ஜனங்கள் எல்லாவித நோயாலும் வரு ந்துவார்கள். இவ்வாறு ஜலத்தட்டு வரும்பொழுதுதான் சருமசம்பந்தமான சொறி, சிரங்கு முதலிய நோய்களும், கண்வலி முதலிய வியாதிகளும் அதிக மாக உண்டாகின்றன. விஷஜ்வரத்துக்குச் சாக்கடைகழுவாததொன்றே மாதிருஸ்தானமாகவிளங்கும். ஜனங்களுக்குள் தேகபலமும், மனோபலமும் அவர்களுடைய உற்சாகத்துடன் குன்றும் என்பதைச்சொல்லவும் வேண்டு மா? அஜீர்ணம், மலபந்தம், வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, விஷஜ்வரம், நரம்புச் சிலந்தி இவ்வியாதிகள் நாம் உட்கொள்ளும் ஜலம் பரிசுத்தமாகவில்லாத கார ணத்தால் உண்டாவன.

நாம் குடிக்கும் நீர் நல்லது, நாம்குடிக்கும் நீர் எவ்வாறிருக்கவேண்டும் என்பதை விசாரிப்போம். பல வைத்தியர்கள் ஏற்படுத்திய சித்தாந்தங் களால் நாம் அருந்தும்நீர், (1) யாதொருவிதக் கசடுகளுமின்றி வெகு ஸ்வச் மாகவிருக்கவேண்டும். (2) அது ஒருவித மணமும் ருசியுமில்லாமலிருக்க வேண்டும். (3) அது குளிர்ச்சியாகவிருக்கவேண்டும். (4) அதைக்கொண்டு பருப்பு எளிதில் வேகவேண்டும். (5) அதில் நற்காற்றுச் சம்பந்தித்திருக்க வேண்டும்.

அவைகளை நாம் கூறினபிறகு இனி எந்தஜலத்திற் பருப்பு வேகவில் லையோ, எந்தஜலம் மணம்வீசுகின்றதோ அந்த ஜலத்தை பரிசுத்தமான ஜலமல்லவென்று நீக்கலாம்.

இவ்வாறு எல்லாவிதத்திலும் பரிசுத்தமான ஜலத்தை நாம் எவ் வாறு அடையக்கூடும் என்பதைப்பற்றி விசாரிப்போம்.

ஜலநிஷ்கர்ஷணம் (Distillation);—அதாவது நிஷ்கர்ஷண யந்திரத்தால் ஜலத்தைச் சோதித்து வடிகட்டிவாங்கி உபயோகிப்பது. இது எல்லாவிதத்தாலும் பரிசுத்தமான சலத்தை நமக்குத்தருகின்றது. ஆனால் இந்தவிஷயத்தில் நாம் ஜாக்கிரதையாகவிருக்கவேண்டிய முறைகளிரண்டொன்று உண்டு. முதன்முதல் யந்திரத்தில் ஓட்டை ஒழுக்கு முதலியவைகளில்லாமலிருக்கின்றனவா வென்று செவ்வையாகப் பரிசோதிக்கவேண்டும். ஜலத்தை நிஷ்கர்ஷணம் பண்ணி அதை நாம் பிடித்துக்கொள்ளும் பாத்திரம் பரிசுத்தமாவென்று பார்க்கவேண்டும்.

ஜலத்தை வெந்நீராக நன்றாகக்காய்ச்சிக்குடித்தல்;— நிஷ்கர்ஷணத்திற்கு அடுத்தபதவியில் இதைச்சொல்லலாம். இதன் முக்கியக்கருத்து நோயை விளைவிக்கும் வித்துக்கள் (*bacteria*) என்று சொல்லப்படும் பூச்சிகள் ஏதாவது ஜலத்திலிருக்குமாயின் அவைகளை ஜலத்தைக்கொதிக்க வைத்துக் கொல்லும் பொருட்டே. ஆகையால் நமது நாட்டார்கள் ஜலத்தை ஒரு பாத்திரத்தில் அடுப்பிற்பதித்துவைத்து அது வெதுவெது என்றானதும் அதை அருந்துவதானது ஒருவிதபிரயோசனமுமில்லை. நன்றாக உலை நீர் போல் களகள வென்று நீரைப்பொங்கவிட்டுக் கொதிக்கவைத்தாற்றான் வெந்நீரருந்துவதாற் குணமுண்டு.

சிலசமயங்களில் மலைஜ்வர முதலிய நோய்களுண்டாகுமிடங்களி வெந்நீரில் சுக்கு மஞ்சள் பனங்குருத்து இவைகளைத் தனியாகவாவது சேர்த்துப்போட்டாவது வெந்நீரைக் கொதிக்கவைத்துக் குடிப்பது வழக்கம். பனங்குருத்தைப் போட்டுக் காய்ச்சுவதில் எல்லாவித விஷகுணங்களும் ஜலத்தைவிட்டு நீங்குகின்றனவென்பது நாட்டு வைத்தியர்களின் கொள்கை. அதைச் சில பிரசித்தஆங்கிலேய வைத்தியர்களும் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆங்கிலேய வைத்தியர்கள் வெகு கெடுதலான ஜலத்தை நாம் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் விதியில்லாமற் குடிக்கும்படி நேரிட்டால் அச்சலத்தில் தேயிலை அல்லது கசப்பு வாதங்கொட்டை இவைகளைக் கலந்து காய்ச்சிக் குடித்தல் வெகு நன்மை யென்றும், அந்த ஜலத்தின் தீமை முற்றிலும் அகற்றப்படுகின்றதென்றும் சொல்லுகின்றார்கள்.

சுக்கான் ஜலத்தை நாம் எப்பொழுதும் வெந்நீராக பண்ணியே அருந்தவேண்டும்; ஏனெனில் அவ்வாறு வெந்நீராகக் காய்ச்சும் பொழுது அதிலுள்ள சுண்ணும்பு அடியிற் றங்கிவிடும்.

தேளிய வைத்தல்;—சிலசமயங்களில் நாம் ஊற்றுமுதலியஇடங்களில் எடுக்கும் ஜலம் பரிசுத்தமாகவேயிருக்கும். ஆனால் அதில் சிறுமணற்றுணுக்குகள் மிதக்கும். அதைச் சொற்பநாழிகை தெளியவைத்தால் சிறுமணற் கணங்கள் அடியிற் றங்கும். அப்புறம் வடிகட்டி நீரை உபயோகிக்கலாம். சிலர் தேற்றாங் கொட்டை முதலான சாதகங்களை ஜலத்திற் கலந்து தெளியச் செய்வதுண்டு. படிக்காரத்தைச் சொற்பம் பொடி பண்ணி ஜலத்திற் கலந்து வைத்தால் அது ஜலத்தின் மஷ்ட்டுகளைத் தெளியபண்ணும்.

ஜலத்தை வடிக்கட்டும் யந்திரம் (*Filters*);—மிகுதியாக ஜலத்தை வடிகட்டி ஒரு நகரம் போன்ற பெரிய விடங்களின் உதவிக்குச் சித்தப்படுத்துவது மணல் அணைகள் மூலமாக அவ்வாறு வேண்டிய ஜலம் புகுந்து கசிவதென்பதை நாம் முன்னமேயே சொல்லி யிருக்கிறோம். இம்மணலணை வழியாக ஜலம் புகுந்து வெளிக்கிளம்பும் பொழுது அந்த ஜலத்திலிருக்கும் அசுத்தங்கள் அம்மணற்கணங்களில் ஒட்டிக்கொள்ளுகின்றன. அக்காரணத்தைப்பற்றியே அவ்வணையிற் சிறுமணல்களின்றிப் பெருமணல்களிருக்கும்படி நாம் செய்யவேண்டும். அன்றியும் அசுத்தங்கள் அதிகமாகச் சேர்ந்தால் அவ்வாறு வடிகட்ட அவ்வணை உதவியாகமாட்டாதாகையால் அடிக்கடி அவ்வணையைச் சோதித்துப் புதிப்பிக்கவேண்டும்.

சாதாரணமாக ஜனங்கள் அதிகமாக உபயோகிக்கும் வடிகட்டும் யந்திரம்;- நாம் மரத்தாலோ அல்லது மூங்கிலாலோ முக்காலிநாட்டி அதில் ஒன்றின்மேலொன்றாக 3 சட்டிகள்நிற்கும்படிசெய்து, முதலிரண்டு சட்டியின் அடியில்துளைவிட்டு, அவ்விரண்டு சட்டிகளிலும் முதற்சட்டியில் நல்ல மணலும் இரண்டாவது சட்டியில் அடுப்புக்கரியும்போட்டு, நீரை முதற்சட்டியில் விட்டு அது மணல்வழியாக இரண்டாவது சட்டியிலிறங்கும்படியும் இரண்டாவது சட்டிநீர் அடுப்புக்கரிவழியாக 3-வது சட்டியிலிறங்கும்படியும்செய்கின்றோம். அவ்வாறு மூன்றாவது சட்டியிலிறங்கின நீரைப் பரிசுத்தமான நீராக எடுத்து அருந்துகின்றோம். இவ்வாறு வடிகட்ட உபயோகப்படுத்தும் மணலையும் அடுப்புக்கரியையும் அடிக்கடி புதுப்பிக்கவேண்டும். அப்படிச்செய்ய சாத்தியப்படாவிட்டால் அடிக்கடி வெயிலிற்போட்டு உலர்த்தவேண்டும். அவ்வாறு செய்யாமல் அடிக்கடி அதேமணலையும் அதே கரியையும் உபயோகித்துவந்தால் அதனால் விஷம் ஜலத்தில் அதிகரிக்குமேயல்லது நீங்கமாட்டாது. ஆங்கிலேய வைத்தியர்கள் சிலர் அம்மணலைக் கொதிக்கக்கொதிக்கச் சட்டியிற்போட்டு வருப்பதாலும் பரிசுத்தமாகின்றது என்று சொல்லுகிறார்கள். அவ்வளவு சரியென்று அதை யெல்லாரும் ஒப்புக்கொள்ளவில்லை. இவ்வகைமட்பாண்டத்தாலன்றிப் பலவிதக்கருவிகளிப்பொழுதுநமது

உ

கடவுள்துணை.

மதுரைத் தமிழ்ச் சங்கத்து

மூன்றுவது

வருஷோற்சவக் கூட்டம்.

தென்றிசையதற்கோர் திலதம்போன்றதும், செந்தமிழின்வளஞ்செழிக்கப்பெற்றதுமான இம்மதுராமாநகரில் ஸ்தாபிக்கப்பெற்ற இத்தமிழ்ச் சங்கம் தனது பலவகைப்பட்ட துறைகளினுஞ் செழிப்புற்று 1904ஆ மேமீ 24உ அன்று தன் மூன்றுமாண்டுநிறைவுபெற்று விளங்கிற்று. இவ் வப்தபூர்த்தி மகோற்சவத்தைக் கொண்டாடற்பொருட்டு இத்தமிழகத்தின் பலவிடங்களினின்றும் வந்திருந்த வித்துவான்களும், தமிழபிமானிகளும், சங்கத்தலைவர் ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்களால் நல்வரவுகூறி உபசரிக்கப்பெற்றனர். இவ்வுற்சவநடாத்தற்கென்று குறிக்கப்பட்ட இந்நகர்ச் சேதுபதி ஹைஸ்கூல் விக்டோரியாமண்டபத்தில் 24உ மாலை 3-மணிக்கு யாவரும் ஒன்றுகூடியபின்னர், வந்திருந்தோர்க்கு முதலிற் சிற்றுண்டி, பானகமுதலியன வழங்கப்பட்டன. அதன்பின் அனைவரும் மகாசபையிற் கூடியளித்த அழகியகாட்சி, சங்கத்திற்கு இனியுண்டாகும் பெருக்கத்தினறி குறியாகவிருந்தது.

அம்மகாசபையில், சங்கஸ்தாபகரும் அக்கிராசனாதிபதியுமாகிய தேவரவர்கள் முதலிலெழுந்து சங்கநோக்கங்களை முன்னிட்டு அரியதோர் உபந்நியாசஞ்செய்து, பின்னர், இந்நகர்ப் பிரபல வக்கீல்களில் ஒருவரும், சங்கத்தின் உபாக்கிராசனாதிபதியுமான ப்ரும்மஸ்ரீ பி. எஸ். சுப்பிரமணியஐயாவர்களை அச்சபைக்கு அக்கிராசனம்வகிக்கப் பிரேரித்தார்கள். அதனைச் சபையோர் தழுவி ஆமோதிக்க ஐயரவர்களும் அக்கிராசனம் பெற்றுச் சபையை நடத்தத்தொடங்கினார்கள். முதற்கண் சபாநாயகரது பொருட்பெருக்கம் வாய்ந்த பிரசங்கம் முடிந்ததும், இவ்வருஷோற்சவத்துக்கு வரமுடியாமைபற்றி வித்துவான்களிற் சிலர் வியாகுலித்து விடுத்த கடிதங்களும், [illegible]ந்திகளும் அதன்பின் சங்கத்தின் மூன்றுவதாண்டின் அறிக்கையும் சங்க[illegible]ரியதரிசியாகிய ஸ்ரீமத். டி. ஸி. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் நன்கு படிக்கப்பெற்றன. அதனையடுத்துக்கோயம்புத்தூர் ஸ்ரீமாந்-டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள், பீ. ஏ. அவ்வறிக்கையிற்கண்ட விஷயங்களின் குறைவுநிறைவுகளை ஏற்றபெற்றி சபையோர்க்கு இனிது விளக்கிக்காட்டினர்.

இது முடிந்ததும், சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். கா. கோபாலாசாரியாரவர்களும், ஷிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருளொருவராகிய ஸ்ரீமத். நா. வேதாசலம்பிள்ளையவர்களும், திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் போதகாசிரியர் ஸ்ரீமத். பி. சுநராயர், M. A. L. T., அவர்களும், சென்னை "யதார்த்தபாஸ்கரன்" பத்திராதிபர் ஸ்ரீமத். வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்களும், முன்னரே வேண்டப்பட்டிருந்தவாறு சங்க நோக்கங்கட்கேற்ற பிரசங்கங்களைச் செய்தனர். பின்னர், 1903வரு நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடத்தப்பெற்ற சங்கப்பரீக்ஷைகளில் நன்குதேறிய ஆங்கிலகலாசாலை மாணுக்கர்கள், சங்கத்தாரது தங்கவெள்ளிப் பதக்கமுதலிய பரிசுகள்பெற்ற விவரம் அம்மகாசபையறியப் பகிரங்கஞ்செய்யப்பெற்றது. இவற்றுக்குப் பின்பு சபாநாயகராகிய ஐயரவர்கள் தமிழ்ப்பாஷையின் அருமைபெருமைகளையும், அதனை வளர்த்தற்கெழுந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் மாட்சியையுங்குறித்து யாவரும் மகிழப்பேசினார்கள்.

பின்னர், போனகிராப் என்னும் யந்திரத்தாலெழுப்பப் பெற்ற இனிய பலபாடல்கள் அங்குநிறைந்தவர்களை மகிழ்வூட்டின. சந்தனம், வெற்றிலை பாக்கு முதலியன சபையோர்க்கு வழங்கப்பட்டன. முடிவில், சங்கத்தக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமாந்-பொ. பாண்டித்துரைத்தேவரவர்களால், மூன்றாம்வருஷோற்சவத்துக்கூடிய சபைக்கு அக்கிராசனம் வகித்த ஸ்ரீமத்: பி. எஸ். சுப்பிரமணிய ஐயரவர்கட்கும், வித்துவசமுகத்துக்குங், தமிழபிமானிகட்கும் வந்தனங்கள் அளிக்கப்பெற்று, அன்று மாலை 6-மணிக்கு சபைகலைந்தது.

ஆலோசனை சபை.

25—5—04. (காலை.)

இச்சங்கத்தின் மூன்றும் வருஷோற்சவநடந்ததினத்துக்கு மறுதினமான 1904ளு மேமீ 25உ காலை 9-மணிக்கு அடியிற் குறித்த வித்துவான்கள் சங்கத்தின் அபிவிர்த்திக்குற்ற விஷயங்களைத் தீர்மானிக்க ஒருங்கு கூடினர்கள். அவர்களாவார்:—

1. ஸ்ரீமத். அக்கிராசனாதிபதி ஸ்ரீமாந்-பொ.பாண்டித்துரைத்தேவரவர்கள்.
2. ,, பி. குருராயரவர்கள், M. A. L. T., திருச்சிராப்பள்ளி.
3. ,, டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள், B. A., கோயம்புத்தூர்.
4. ,, பூவை. கலியாணசுந்தர முதலியாரவர்கள், சென்னை.
5. ,, நா. வேதாசலம் பிள்ளையவர்கள், சென்னை.
6. ,, கா. கோபாலாசாரியாரவர்கள், சென்னை.
7. ,, சி. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள், கோயம்புத்தூர்.
8. ,, ஐ. சாமிநாத முதலியாரவர்கள், தஞ்சை.
9. ,, மேலகரம். சுப்பிரமணியக் கவிராயரவர்கள், திருநெல்வேலி.
10. ,, திருமயிலை-சண்முகம் பிள்ளையவர்கள், சென்னை.
11. ,, வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள், B. A., சென்னை.
12. ,, ரே. அப்புவையங்காரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.
13. ,, சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்கள், மதுரை.
14. ,, ரா. இராகவையங்காரவர்கள், இராமநாதபுரம்.
15. ,, வி. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்கள், மதுரை.
16. ,, திரு. நாராயணையங்காரவர்கள், மதுரை.
17. ,, ப. நாராயணையரவர்கள், பீ. ஏ. பி. எல்., மதுரை.
18. ,, டி. வி. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், பீ. ஏ. பீ. எல்., மதுரை.
19. ,, எம். கே. எம். அப்துல்காதுரவர்கள், இளையான்குடி.

இச்சங்கத்தின் அங்கத்தினராகிய பண்டிதர் சிலரும் ஆண்டுக் கூடியிருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. ஆங்கிலகலாசாலை மாணாக்கர்க்கு நடத்தப்பெற்ற சங்கப் பரீக்ஷை சம்பந்தமாக வினாப்பத்திரங் குறித்தும் விடைகளைச் சோதித்தும் உதவி புரிந்த வித்துவான்கட்கு வந்தன மளித்தல் வேண்டுமென்பது.

பிரேரகர்—ஸ்ரீமத்-டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள்.

ஆமோதகர் ,, நா. வேதாசலம்பிள்ளையவர்கள்.

சபையோரெல்லாரானும் அங்கீகரிக்கப்பட்டது.

2. சங்கப்பரீக்ஷை சம்பந்தமான எல்லா விஷயங்களையும் ஆலோசித்து உரியவற்றைச் செய்தற்கு, ஒன்பது பெயர் கொண்ட நிர்வாக சபை (Sub-Committee) யொன்று நியமித்தல் வேண்டுமென்பது.

பிரேரகர்—ஸ்ரீமத்-டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள்.
ஆமோதகர்— ,, ரே. அப்புவையங்காரவர்கள்.
சபையோரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

3. ஷை நிர்வாக சபைக்கு அங்கத்தினர்களை வருஷோற்சவத்துக்கு வந்துள்ள வித்துவான்களிலிருந்து தெரிந்தெடுப்பதா, வராமலிருப்பவர்களிலும் தெரிந்தெடுப்பதா என்று சந்தேகம் நேரிட, நிர்வாக சபையார் ஒன்று கூடி வேண்டியவற்றை யோசித்தற்குச் சௌகரியமாக வந்திருப்பவர்களினின்றே தெரிந்தெடுத்தல் வேண்டுமென்று ஸ்ரீமத் பி. குருராயரவர்கள் பிரேரிக்க, ஸ்ரீமத்-கா. கோபாலாசாரியாரவர்களும், ஸ்ரீமத். வி. சதாசிவசெட்டியாரவர்களும், ஸ்ரீமத். வி. முத்துக்குமாரசுவாமிமுதலியாரவர்களும் அதனை ஆமோதித்தார்கள். ஸ்ரீமத்-டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்களும், ஐ. சாமிநாத முதலியாரவர்களும், வாராதவர்களினின்றுந் தெரிந்தெடுக்கவேண்டுமென்று ஆக்ஷேபித்தார்கள். ஆயினும் சபையோர் பெரும்பாலரால் ஸ்ரீமத்-பி. குருராயரவர்கள் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது.

பரீக்ஷாசம்பந்தமான நிர்வாக சபையோர் (Sub-Committee.)

ஸ்ரீமத்-பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்.
,, பி. குருராயரவர்கள், M. A. L. T.
,, டி. இராமலிங்கஞ்செட்டியாரவர்கள், B. A.
,, கா. கோபாலாசாரியாரவர்கள்.
,, நா. வேதாசலம் பிள்ளையவர்கள்.
,, வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள்.
,, ஐ. சாமிநாத முதலியாரவர்கள்.
,, சி. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்கள்.
,, மேலகரம் சுப்பிரமணியக் கவிராயரவர்கள்.

பிரேரகர்.—பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்.
ஆமோதகர்.—வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள்.
சபையோரெல்லாராலும் அங்கீகரிக்கப்பெற்றது.

4. ஷை நிர்வாகசபையாரே இவ்வாண்டிற் சங்கத்தின் அங்கத்தினராக விரும்பும் வித்துவான்களை நியமனஞ் செய்ய வேண்டுமென்பது.

பிரேரகர்.—ஸ்ரீமத்- டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள்.
ஆமோதகர்.—,, ரே. அப்புவையங்காரவர்கள்.

சபையோரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

5. கலாசாலை மாணுக்கர்க்குச் "செந்தமிழ்" ப்பத்திரிகை அரைச்சந்தாவுக்குக் கொடுக்கப்பட-வேண்டு மென்பது. அவ்வாறு பெற விரும்பும் மாணுக்கர் தங்கள் கலாசாலைத் தலைமையதிகாரிகள் மூலமேனும் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் மூலமேனுந் தாங்கள் மாணுக்கரென்பதைக் குறிக்குங் கடிதம் பெற்று அதனைச் சங்கத்துக்கு அனுப்பல் வேண்டுமென்பது.

பிரேரகர் ஸ்ரீமத்-வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள்.
ஆமோதகர் ,, பி. குருராயரவர்கள்.
சபையோரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

6. சங்கத்தின் அங்கத்தினராய வித்துவான்கட்கு, ராயல் ஏஷ்யாடிக் சொஸைடி முதலியவற்றில் டிப்ளோமாக்கொடுப்பதுபோல **"மதுரைத்தமிழ்ச் சங்க வித்துவான்"** "The Fellow of Madura Tamil Sangam" எனத் தமிழினும், ஆங்கிலத்தினுங் கௌரவசாசனமளிக்க வேண்டுமென்பது.

பிரேரகர் ஸ்ரீமத்-கா. கோபாலாசாரியாரவர்கள்.
ஆமோதகர் ,, வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள்.
சபையோரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

7. தமிழிற்குச் சிறந்த அகராதி யொன்றில்லாததால், அவ்வகராதி வேலையைச் சங்கத்தார் தொடரவேண்டுமென்பதும், அவ்வாறு தொடங்குவதற்கு முன்பு பல தமிழ் நூல்களையும் ஆராய்ந்து அரும்பதங்களை இடங்காட்டித் தொகுத்துக் கொள்ளவேண்டுமென்பதும்.

பிரேரகர் ஸ்ரீமத்-ரா. இராகவையங்காரவர்கள்.
ஆமோதகர். ,, குருராயரவர்கள்.
சபையோரெல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டது.

8. அடியிற் குறித்தவாறு, வித்துவான்கள், தாந்தாங் குறித்துக் கொண்ட நூல்களில் அரும்பத முதலியவற்றைத் திரட்டிச் சங்கத்துக்கு அனுப்புவதாக வாக்களித்தார்கள்.

திருவாசகம், திருக்கோவையார்	ஸ்ரீமத்-		நா. வேதாசலம்பிள்ளையவர்கள்.
கலித்தொகை	,,	,,	பி. குருராயரவர்கள்.
இராமாயணம்	,,	,,	கா. கோபாலாசாரியரவர்கள்.
,,	,,	,,	தி. சண்முகம் பிள்ளையவர்கள்.
பெரியபுராணம்	,,	,,	பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்.
சிந்தாமணி	,,	,,	மு. இராகவையங்காரவர்கள்.
திருவிளையாடல்	,,	,,	ஐ. சாமிநாத முதலியாரவர்கள்.

மெய்கண்டசாஸ்திரங்கள் ஸ்ரீமத்-பூ. கலியாணசுந்தரமுதலியாரவர்கள்.
அகநானூறு, தொல்காப்பியம் ,, ரா. இராகவையங்காரவர்கள்.
காஞ்சிபுராணம் ,, ,, மேலகரம் சுப்பிரமணியக் கவிராயரவர்கள்.
அப்பமூர்த்திசுவாமிகள்தேவாரம் ஸ்ரீமத்-வி. சதாசிவஞ் செட்டியாரவர்கள்.
சம்பந்தமூர்த்திசுவாமிகள்தேவாரம் ஸ்ரீமத் திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள்.
சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்ஸ்ரீமத்-சுப்பிரமணிய முதலியாரவர்கள்.
தர்க்கசோதிடபரிபாஷைகள் ,, திரு. நாராயணையங்காரவர்கள்.
தணிகைப்புராணம் ,, ,, சேற்றூர்-சுப்பிரமணியக்கவிராயரவர்கள்.
புறப்பொருள்வெண்பாமாலை ,, டி. இராமலிங்கஞ் செட்டியாரவர்கள்.
கலிங்கத்துப்பரணி ,, ,, டி. வி. ஸ்ரீநிவாசையங்காரவர்கள்.
வில்லிபாரதம்—எ. சுந்தரராஜ ஐயங்காரவர்கள்.
சேதுபுராணம்—வி. முத்துக்குமாரசுவாமி முதலியாரவர்கள்.

அன்று காலைச் சபை கலையுமுன் சங்கப்பரீட்சைகட்கு ஏற்பட்டுள்ள பரிசுகளிற் சிலவற்றைத் தங்கள் சொந்தத்தில் ஏற்றுக்கொண்டு உதவுவதாக சிலதனவான்கள் அன்போடு முன் வந்தார்கள்:—

(1) சங்கத்துத் தனித்தமிழ்ப் பரீட்சைகளுள் ஒன்றாகிய பிரவேச பண்டித பரீட்சையின் இரண்டாம் பரிசாகிய ரூபா முப்பதை (30) யும் மதுரை ஜில்லா இளையான்குடி ஸ்பெஷல் மாஜிஸ்ட்ரேட் மகா-ள-ள-ஸ்ரீ **எம். கே. எம். அப்துல்காதுறு ராவுத்த**ரவர்கள் அளிப்பதாகவும்,

(2) ஆங்கிலகலாசாலைச் சங்கத் தமிழ்ப் பரீட்சைகளுள் பீ. எ. வகுப்பின் முதற்பரிசாகிய ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கத்தையும், தனித் தமிழ்ப் பரீட்சைகளுள் பிரவேசபண்டித பரீட்சையின் முதற்பரிசாகிய ரூ 50 பெறத்தக்க தங்கப்பதக்கத்தையும் ஸ்ரீமாந்- **பொ. பாண்டித்துரைத் தேவ**ரவர்கள் அளிப்பதாகவும்,

(3) பிரவேச பண்டித பரீட்சையின் மூன்றாம் பரிசாகிய ரூபா இருபதை (20) யும் இராமநாதபுரம் சப் டிவிஷன் ஜமீந்தார் ஸ்ரீமாந்-**முத்துத் துரைசாமித் தேவ**ரவர்கள் அளிப்பதாகவும்,

(4) ஆங்கில கலாசாலைச் சங்கப்பரீட்சைகளுள் மெட்ரிக்குலேஷன் வகுப்பின் நான்காவது பரிசாகிய ரூபா பதினைந்தை (15) யும் மதுரை ஸ்ரீமத் **டி. ஸி. ஸ்ரீநிவாஸைய்யங்கா**ரவர்கள், பீ. எ. பீ. எல்., அளிப்பதாகவும் அன்போடும் உறுதிகூறினார்கள்.

இவ்வாறு சங்க நோக்கங்கள் நிறைவேறுதற்கு வேண்டற்பாலதாகிய திரவியோபகாரத்தைப் புரிய முன்வந்த இப்பெரியோர்களுக்கு தமிழ்நாடு பெரிதும் நன்றி கூறுங் கடப்பாடுடையது.

இவற்றோடு பகல் 12 மணிக்குக் காலைக் கூட்டம் கலைந்தது.

25—5—04 (மாலை.)

அக்கிராசனாதிபதியவர்களாகிய ஸ்ரீமாந் பொ.பாண்டித்துரைத்தேவரவர்கள் சங்கத்தின் வருவாய்விவரங்களையும் அதன் பொருளாதாரத்துக்குச்சங்கத்தார் செய்யக்கடவனவாகிய முயற்சிகளையும்பற்றிச் சிறியதோர் உபந்நியாசஞ் செய்தார்கள். அதன் பின்னர் இவ்வருஷோற்சவத்துக்கு வந்திருந்த வித்வ சமூகத்தின் பிரதிசாயலான புகைப்படங்கள் எடுக்கப்பட்டன. அது முடிந்ததும் திருச்சிராப்பள்ளிக்காலேஜ் போதகாசிரியராய ஸ்ரீமத்-பி. குருராயரவர்கள், சங்கத்திற்கென்று தாம் மொழிபெயர்த்துப் பெரும்பான்மை முடித்திருந்த சாகுந்தளநாடகத்தின் சில பகுதிகளை, ஸ்ரீமாந்-பொ.பாண்டித்துரைத்தேவர்களை அக்கிராசனாதிபதியாகவுடைய அவ்வித்துவ சமூகத்தில் இனிதுவாசித்தும், அதன் சொற்பொருணயங்களை நனிவிளக்கியும் சபையோரை மகிழ்வூட்டினார்கள். ராயரவர்களுக்குப்பின்னர்த் தஞ்சை ஸ்ரீமத்-ஐ. சாமிநாதமுதலியாரவர்கள் தாமியற்றிய மங்கையர்க்கரசிவெண்பாவிற் சில பகுதிகளைப்படித்துக்காட்டினார்கள். இதனோடு இரவு 8-மணிக்கு சபை கலைக்கப்பெற்றது.

26—5—04 (காலை.)

பரீக்ஷாவிஷயமான நிர்வாக சபையாரின் முடிபுகள்.

1904-வருஷத்து நவம்பர் டிஸம்பர் மாதங்களில் நடத்தப்பெறும் மெட்ரிக், எப். ஏ., பீ. ஏ. வகுப்புக்கட்குச் சங்கத்தாரால் நடாத்தப்பெறும் பரீக்ஷைகட்கு அடியிற்குறித்த வித்துவான்கள் பரீக்ஷகர்களாக எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

1. ஸ்ரீமத்-உ. வே. சாமிநாதையரவர்கள், சென்னை.
2. ,, வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள், கும்பகோணம்.
3. ,, பி. குருராயரவர்கள், M. A. L. T., திருச்சி.
4. ,, எம். முத்துராமலிங்கம்பிள்ளையவர்கள், B. A., திருவனந்தபுரம்.
5. ,, கா. கோபாலாசாரியரவர்கள், சென்னை.
6. ,, சி. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள், கோயம்புத்தூர்.
7. ,, டி. இராமலிங்கஞ்செட்டியாரவர்கள், B.A. ஷெ
8. ,, ரே. அப்புவையங்காரவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர்.
9. ,, மேலகரம், சுப்பிரமணியக்கவிராயரவர்கள், திருநெல்வேலி.

2. மேற்கண்ட பரீக்ஷகர்கள் அடியிற்குறித்தவாறு வினப்பத்திரங்கள் குறித்தனுப்புமாறு நியமிக்கப்பெற்றூர்கள்.

பீ. ஏ.

இலக்கியம் ஸ்ரீமத்-பி. குருராயரவர்கள்.
இலக்கணம் ,, வே. சாமிநாதையரவர்கள்.
வியாசம் ,, எம். முத்துராமலிங்கம்பிள்ளையவர்கள்.

எப். ஏ.

இலக்கியம் ஸ்ரீமத்-கா. கோபாலாசாரியாரவர்கள்.
இலக்கணம் ,, சி. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள்.
வியாசம் ,, டி. இராமலிங்கம்பிள்ளையவர்கள்.

மெட்ரிகுலேஷன்.

இலக்கியம் ஸ்ரீமத்-ரே. அப்புவையங்காரவர்கள்.
இலக்கணம் ,, வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள்.
வியாசம் ,, ஐ. சாமிநாதமுதலியாரவர்கள்.

3. அடியிற்கண்ட வித்துவான்கள் விடைப்பத்திரங்கள் பரிசோதித்தற்காக உதவிப்பரீக்ஷகர்களாக எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் :—

1. ஸ்ரீமத்-வெ. சதாசிவச்செட்டியாரவர்கள், திருச்சி.
2. ,, சிவராமபிள்ளையவர்கள், திருநெல்வேலி.
3. ,, திரு நாராயணையங்காரவர்கள், மதுரை.

4. அடியிற்கண்ட வித்வான்கள் பரீக்ஷை நடக்குமிடங்களிற் பரீக்ஷை மேற்பார்ப்போராகத் தெரிந்து கொள்ளப்பட்டார்கள்.

மதுரை	1.	ஸ்ரீமத்-	எம். வி. சுப்பிரமணிய ஐயரவர்கள்.
	2.	,,	எஸ். சாமிநாதையரவர்கள்.
	3.	,,	திரு. நாராயணையங்காரவர்கள்.
திருநெல்வேலி	1.	,,	என்.ஏ.வி.சோமசுந்தரம்பிள்ளையவர்கள்.
	2.	,,	எஸ். பால்வண்ண முதலியாரவர்கள்.
	3.	,,	தி. ப. சிவராமபிள்ளையவர்கள்.
திருவனந்தபுரம்	1.	,,	எம். முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள்.
	2.	,,	கே. ஜி. சேஷையரவர்கள்.
	3.	,,	தி. லக்ஷ்மணபிள்ளையவர்கள்.
திருச்சி.	1.	,,	பி. குருராயரவர்கள் M. A.
	2.	,,	வி. சதாசிவச்செட்டியாரவர்கள்.
	3.	,,	டி. சவரிராயபிள்ளையவர்கள்.

கும்பகோணம். 1. ஸ்ரீமத் வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரவர்கள்.
2. ,, கே. சுந்தரராமையரவர்கள், M. A.
3. ,, பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரவர்கள்.

கூடலூர். 1. ,, நா. பலராமையரவர்கள்.

சேலம். 1. ,, Spencer A. Shutie Esq, B. A.

கோயம்புத்தூர். 1. ,, எஸ். பி. நரசிம்மலுநாயுடுகாரு.
2. ,, சி. திருச்சிற்றம்பலம்பிள்ளையவர்கள்.
3. ,, ஆர். கிருஷ்ணய்யரவர்கள், B. A.

சென்னை. 1. ,, உ. வே. சாமிநாதையரவர்கள்.
2. ,, கா. கோபாலாசாரியாரவர்கள்.
3. ,, நா. வேதாசலம் பிள்ளையவர்கள்.

5. இந்தவருஷம் மெட்றிக்குலேஷன், எப்-ஏ, பீ-ஏ- பரீக்ஷைகள் மூன்றும் நவம்பர்மீ 19உ சனிக்கிழமை யன்று நடத்தப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

6. ஷை பரீக்ஷைகளிற் பரிசுபெறுவோர்க்கு அவர்கள் படித்த காலேஜ் தலைமையதிகாரி (Principal) மூலமாகவே பரிசுகள் கொடுக்கப்படவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

7. ஷை பரீக்ஷைகளிற்றேர்ந்த மாணுக்கர்க்கு அளிக்கும் பரிசு, யோக்கியதா பத்திரங்களை அவ்வக்கலாசாலைத் தலைமையதிகாரிகள் பகிரங்கமான சபையிலே கொடுக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

8. சென்ற வருஷத்துப் பரீக்ஷைக்கு நாகர்கோயில்மாணுக்கர்கள் திருவனந்தபுரஞ்சென்று வரவேண்டியிருந்த அசௌகரியத்தை உத்தேசித்து, அந்நகர்க்காலேஜ் பிரின்ஸிபல்துரையவர்கள் நாகர்கோயிலையும் பரீக்ஷாஸ்தலமாகக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டவாறு, அவ்விடத்தினின்றும் மாணுக்கர்கள் அதிகமாகவருவதாகத்தோன்றின், அக்கிராசனாதிபதியவர்கள் யுக்தப்படி அங்கும் பரீக்ஷை நடத்தலாமென்று முடிவுசெய்யப்பட்டது.

9. சங்கத்தார் நடாத்தும் தனித்தமிழ்ப் பரீக்ஷைகட்கு அடியிற்குறித்த வித்வான்கள் பரீக்ஷாதிகாரிகளாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்:—

1. ஸ்ரீமத்-சுன்னுகம் குமாரசுவாமிப்பிள்ளையவர்கள்.
2. ,, திருமயிலைச்சண்முகம்பிள்ளையவர்கள்.
3. ,, ரா. இராகவையங்காரவர்கள்.
4. ,, பூவை. கல்லியாணசுந்தர முதலியாரவர்கள்.
5. ,, தண்டலம். பாலசுந்தர முதலியாரவர்கள்.

6. ,, சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்கள்.
7. ,, வா. குலாம்காதிறு நாவலரவர்கள்.
8. ,, திருநாராயணையங்காரவர்கள்.
9. ,, டி. சவரிராயபிள்ளையவர்கள்.
10. ,, பிச்சை இபுராகிம் புலவரவர்கள்.
11. ,, யாழ்ப்பாணம் முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள்.
12. ,, வி. கனகசபைப் பிள்ளையவர்கள்.
13. ,, தி. ப. சிவராமபிள்ளையவர்கள்.
14. ,, நா. கதிரைவேற்பிள்ளையவர்கள்.
15. ,, எஸ். பால்வண்ண முதலியாரவர்கள்.

10. மேற்குறித்த தனித்தமிழ்ப் பரீக்ஷை விஷயமாய் இன்னின்ன பாடங்கட்கு இன்னார் பரீக்ஷகரென்பதும், பரீக்ஷா நகரங்களில் இன்னவிடத்தில் இன்னகாலத்தில் ஷை பரீக்ஷைகள் நடத்தப்பெறுமென்பதும், பிறவும், பரீக்ஷைக்குவரும் மாணுக்காது விண்ணப்பங்கள் வந்தபின்னர் அவற்றிற்குரிய காரியங்களை அக்கிராசனாதிபதியவர்களே செய்யவேண்டுமென்று சபையோர் கேட்டுக்கொண்டார்கள்.

11. முன்னரே எற்படுத்தப்பட்ட விதிப்படி, சங்கத்தினங்கத்தினராக விரும்புவோர், சங்கவித்துவான்களிருவரது ஆதரவு பெற்று அனுப்பும் விண்ணப்பங்களை இந்த நிர்வாகசபையாரெல்லார்க்கும் அனுப்பிப், பின்னர் அவர்களிற் பெரும்பாலார் அபிப்பிராயங்களை அனுசரித்து விண்ணப்பஞ் செய்தோரைச் சங்க அங்கத்தினராகக் கொள்ளவேண்டியதாக தீர்மானிக்கப்பட்டது. இவற்றோடு அன்று காலைச்சபை கலைந்தது.

26—5—04 (மாலை).

பிரபுக்கள் வித்வான்கள் நிறைந்த பெரிய சபையில் அன்று மாலை 4 மணிக்கு வருஷோற்சவத்திற்கு வந்திருந்த சேலம் டிஸ்டிரிக்ட் முன்சீப் ஸ்ரீமத்.நல்லசாமிப்பிள்ளையவர்களது அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ்ச்சென்னை 'யதார்த்தபாஸ்கரன்' பத்திராதிபர் ஸ்ரீமத்.வி. முத்துக்குமாரசாமி முதலியாரவர்களால் மதசம்பந்தமான உபந்யாசமொன்று ஆங்கிலத்திலும், கோயம்புத்தூர் சென்றமிக்கேல் காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். சி. திருச்சிற்றம்பலம் பிள்ளையவர்களால் தமிழ்வளர்ச்சி விஷயமானபிரசங்கமொன்று தமிழினும், ஆனந்தகரமாக நடைபெற்றன. சபாநாயகரா யிருந்த பிள்ளையவர்கள் அவ்விருவர் பிரசங்கங்களின் கருத்தைத் தழுவிச் சிறந்த விஷயங்கள் பல ஆங்கிலத்தில் எடுத்துரைத்துச் சபையை முடித்தார்கள். இவற்றோடு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் மூன்றாவது வருஷோற்சவம் பரிபூர்த்தி பெற்றது.

உ

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் **கொறநாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர்** முதலிய தினுசுகளும் **பங்காளத்திலிருந்து** பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும், நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கறார்விலையாக விற்கப்படும். தலைவியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டியமாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனாமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கறார் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவுசெய்து தங்களுடைய சினேகிதர்களுக்குத் தெரிவியுங்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

விற்கப்பெறும் புத்தகங்கள்.

1. ஞானாமிர்தம் மூலமும் உரையும்.

இது ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்தநாயனார் சந்தானத்துப் பரமானந்த முனிவர் அருள்பெற்ற வாகீசமுனிவர் இயற்றியருளியது. மூன்றடிச்சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத்தைந்துடையது. வீடுகாதலிக்கும் நல்லறிவினர்க்குச், சிவாகமங்களுட் கூறப்படுவனவாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களுள்ளே ஞானபாதத்துக்குரிய பதிபசுபாசங்களி னியல்பை நியாயவாயிலான் உணர்த்தி வீடெய்தும் உபாயங்கூறுவது. சொல்வளம் பொருள்வளங்களாற் கற்போர்நெஞ்சங் காமுறச்செய்வது. ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மாதவச்சிவஞானயோகிகளாற் சிவஞான போதவுரை முதலியவற்றில் மேற்கோள்காட்டப்பெற்றது. இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் இதன் பழைய உரையுடன் திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்களாற் பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து விசேடக் குறிப்புக்களுடன் அச்சிடப்பெற்று, இப்போது முடிந்துள்ளது. இது சங்கப்பிரசுரங்களுள் முதலாவதாகும். இதன்விலை ரூ 1.

2. சைவமஞ்சரி.

இது மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களாற் றொகுக்கப்பெற்றது. முன்னர் யாவர்க்கு முபயோகமாகத் தேவரவர்களால் வெளியிடப்பெற்ற 'பன்னூற்றிரட்டுப்' போல, சைவசமயிகட்குப் பெரிதும் பயன்படுமாறு, கடவுள்வாழ்த்து, பதி, பசு, பாச முதலாய அதிகாரவடைவுடன் இப்போது பிரசுரிக்கப்பெற்றது. அறுபத்தேழு சைவநூல்களினின்று (அஃதாவது 108399 - செய்யுள்களினின்றும்) ஆராய்ந்தெடுக்கப்பெற்ற 1316-செய்யுண்மலர்களுடையது. சமயஞானமுறவிரும்புவோர்க்கும், பிரசங்கிகட்கும், தவறாது கையிலிருந்துகமழத்தக்கது. நூற்குமுன்னும் பின்னும் பல விசேடக்குறிப்புக்கள் அமைந்தது. இத்தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் பிரசுரமாவது. இதன் விலை ரூ $1\frac{1}{2}$.

☞ மேலேகாட்டிய புத்தகங்கட்குத் தபால் சார்ஜ் பிரத்தியேகம். இவை பெறவிரும்புவோர் **மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜர்** அவர்கட்கெழுதி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.